விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

கிளை நூலகம்

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 30 செவ்வாய்க்கிழமை (15.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 239

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

இந்த வாரம் அதிரடி

# மகிந்த குடும்பத்துக்கு எதிரான விசாரணையை துரிதப்படுத்த முடிவு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராக சுமத்தப் பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான விசாரணைகளை துரிதப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)



## தமிழர் காணிகளை கைப்பற்றும் முஸ்லிம்கள் சுமணரத்ன தேரர் கவலை

(மட்டக்களப்பு)

தமிழ் மக்களுடைய காணிகளை முஸ்லிம் அமைப்புக்கள் அத்துமீறி கைப்பற்றுவதாக மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் கருத்து வெளியிட்டுள்ளார். 23☛

## கேப்பாப்புலவு காணி; ரூ. 148 மில்லியனுக்கு அமைச்சரவை பத்திரம்

(கொழும்பு)

கேப்பாப்புலவில் மக்களுக்குச் சொந்தமான 111 ஏக்கர் காணியை விடுவிப்பதற்காக 148 மில்லியன் ரூபாயை வழங்குவதற்கான அமைச்சரவைப்பத்திரம் சிறைச்சாலை மறுசீரமைப்பு, மீள்குடி 23☛

## செஞ்சோலை படுகொலை நினைவு உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கை வான்படையினரின் குண்டு வீச்சு தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட செஞ்சோலை மாணவர்கள் மற்றும் பணியாளர்களை நினைவு கூரும் நிகழ்வுகள் நேற்றையதினம் தமிழர் தாயகம் எங்கும் உணர்வு பூர்வமாக நடை 24☛

## முதல்வர் விக்னேஸ்வரனால் வடக்குப் பிரச்சினை ஐ.நாவிடம் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இன்னும் ஓர் இலட்சத்து 50 ஆயிரம் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளதாகவும் மக்களுடைய பயிர்நிலங்களையும் அலுவலக கட்டடங்களையும் இயற்கை வளங்களையும் அவர்கள் உபயோகித்து வருவதாகவும் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். 23☛

## தேர்தல் ஒத்திவைக்கப்படுவது வருத்தம் அளிக்கிறது – மகிந்த

(கொழும்பு)

தேர்தல்கள் உரிய நேரத்தில் நடைபெறாமல் அரசாங்கத்தினால் ஒத்தி வைக்கப்படுவது குறித்து தேர்தல் ஆணையத்தின் தலைவர் மகிந்த தேசப்பிரிய வருத்தம் வெளியிட்டுள்ளார். 23☛



## வெள்ளத்தில் மூழ்கியது மடு யாத்திரிகர் அந்தரிப்பு!



23☛

## மொழிப் பிரச்சினையைத் தீர்த்தால் இனப்பிரச்சினையில் பாதி தீரும்

### மிகுதியை அதிகாரப்பகிர்வு தீர்க்க வேண்டும் – மனோ

(கொழும்பு)

இலங்கையின் மொழிக்கொள்கை, மும்மொழிக்கொள்கை ஆகும். மொழிச்சட்டம், மும்மொழிச் சட்டமாகும். ஆகவே அனைத்து அரசாங்க அலுவலக படிவங் 24☛



## வல்வெட்டித்துறையில் ஆசிரியர் ஒருவர் சடலமாக மீட்பு

(கரணவாய்)

ஐந்து தினங்களிற்கு முன்னர் இறந்ததாக கருதப்படும் ஆசிரியர் ஒருவரின் சடலம் அழுகிய நிலையில் மீட்கப்பட்டதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரி 23☛

## நவாலி இளைஞன் டெங்கால் மரணம்




(யாழ்ப்பாணம்)

டெங்குநோயினால் பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் நேற்றையதினம் உயிரிழந் 23☛

## பொலிஸ்மா அதிபருக்கு எதிராக பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தன்னை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த போவதாக அச்சுறுத்தல் விடுத்ததாக தெரிவித்து பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பொலிஸ் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.



பூஜித ஜயசுந்தர பொலிஸ்மா அதிபராக பதவியேற்ற பின் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரும் காலையில் 8.30 தொடக்கம் 8.45 வரை பௌத்த தியானங்களில் ஈடுபட வேண்டும் என்ற 23☛

## முச்சக்கரவண்டி புகையிரதத்துடன் மோதி இளைஞன் மரணம்

(வவுனியா)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற புகையிரதம் வவுனியாவில் பாதுகாப்பற்ற புகையிரத கடவையை கடந்து செல்ல முற்பட்ட முச்சக்கரவண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் மரணமடைந் 24☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முன்னணி தனியார் கம்பனி ஒன்றின் 300 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழில் தேடுவோருக்கான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் மாவட்ட பொது மக்கள் தொழில் சேவை மத்திய நிலையம் நடைமுறைப்படுத்திவரும் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, முன்னணி தனியார் கம்பனி ஒன்றின் எட்டு வகையான 300 தொழில் வெற்றிடங்களுக்கு ஆட்களை தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வு யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 17,18,19 (வியாழன், வெள்ளி,சனி) ஆகிய தினங்களில் காலை 9 மணி தொடக்கம் 3 மணிவரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இந் நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள விரும்பும் க.பொ.த சாதாரண தரம் வரை கல்வி கற்றவர்கள், சித்தியடைந்தவர்கள் மற்றும் க.பொ.த உயர்தரம் கற்றவர்கள் மற்றும் சித்தியடைந்த 30 வயதிற்குட்பட்ட ஆண், பெண் விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வில் பங்குபற்றி தொழில் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறியத் தருவதோடு மேலதிக விளக்கங்கள், அறிவுறுத்தல்களை 021 221 9359 என்ற இலக்க அலுவலக தொலைபேசி ஊடாக அல்லது மாவட்டச் செயலகத்தின் பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையத்தில் நேரடியாக பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.(மு)

# கைது செய்யப்பட்ட 4 இந். மீனவரும் 24-ம் திகதி வரை விளக்கமறியலில்



இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டதாக இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 4 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் நளினி கந்தசாமி நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்

இலங்கை கடற்பரப்புக்குள் நேற்று முன்தினம் இரவு அத்துமீறி நுழைந்து பருத்தித்துறை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட நாகை மாவட்டத்தைச் சேர்ந்த 4 இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்ததுடன் அவர்கள் பயணம் செய்த ஒரு படகையும் கைப்பற்றியிருந்தனர்.

குறித்த மீனவர்கள் கடற்படையின் விசாரணையின் பின்னர் நேற்று யாழ்.மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடத்தில் பாரப்படுத்தப்பட்டு பின்னர் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இலங்கையில் 80 இந்திய மீனவர்கள் விளக்கமறியலில் இருப்பதுடன் 178 படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (மு-9)

# ஹயஸ் வானை முந்திய ஹன்டர் மோ.சைக்கிளை மோதித் தள்ளியது!

## இளைஞர் ஒருவர் படுகாயம்



(கோப்பாய்)

மோட்டார் சைக்கிள் - ஹன்டர்- ஹயஸ் வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளானதில் மிருசுவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி ஜெயக்குமார் (வயது-26) என்ற இளைஞர் படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று மாலை 5.45 மணியளவில் யாழ்.கந்தர்மடம் சந்திக்கு அண்மையாக இடம்பெற்றுள்ளது. மேற்படி விபத்து குறித்து தெரியவருவதாவது,

பலாலி வீதி கந்தர்மடம் சந்திக்கு அண்மையாக வீதி ஓரத்தில் ஹயஸ் வான் ஒன்று தரித்து நின்றுள்ளது. அதேநேரம் வீதி வழியாக யாழ்ப்பாணம் நோக்கி ஹன்டர் வாகனம் ஒன்று பயணித்து குறித்த ஹயஸ் வானை முந்த முற்பட்டுள்ளது. அதேநேரம் குறித்த ஹயஸ் வானும் சடுதியாக புறப்படுவதற்கு தயாராகியுள்ளது.

இதன்போது யாழ்ப்பாணத்தில் இருந்து பலாலி வீதி வழியாக மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரை ஹன்டர் வாகனம் மோதியுள்ளது.

இதன்போது ஹயஸ் வானும் ஆர்முடுக்கப்பட்ட போது ஹயஸ் வானும் குறித்த ஹன்டருன் மோதியுள்ளது. இவ்விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.

உடனடியாக வீதியால் சென்றவர்களால் மீட்கப்பட்ட இளைஞர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தின் போது ஹயஸ் வானின் முன்பகுதியும் ஹன்டர் வாகனத்தின் முன்பகுதியும் இளைஞர் பயணித்த மோட்டார் சைக்கிளும் பாரியளவில் சேதமடைந்துள்ளன.

இவ்விபத்து தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

நல்லூர் ஆலய உற்சவம் இடம்பெறுவதால் கந்தர்மடச் சந்தி வழியாகவே அதிக மக்கள் பயணிப்பதால் குறித்த விபத்து இடம்பெற்றதன் காரணமாக சிறிது நேரம் அவ்விடத்தில் வாகன நெரிசலும் ஏற்பட்டிருந்தது. (மு-30-87)

# போதைப் பொருட்களுடன் நல்லூரில் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம் நல்லூரில் கந்தசுவாமி ஆலயச் சூழலில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களுடன் இளைஞர் ஒருவர் பொலிஸாரினால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மட்டக்களப்பில் இருந்து நல்லூர் ஆலயத்திற்கு வருகை தந்த பக்தர் ஒருவரின் பணத்தை திருடியுள்ளார்.

இந்நிலையில் பொலிஸாரிடம் அகப்பட்ட இவரிடம் சோதனை மேற்கொள்ளப்பட்ட போது கஞ்சா மற்றும்

போதைப்பொருட்களை வைத்திருப்பது தெரியவந்துள்ளது. இதனால் பொலிஸார் இவரை கைது செய்து விசாரித்து வருகின்றனர். (மு-11)

# மரண அறிவித்தல்



## சின்னத்துரைஐயர் விக்னராசாஐயர்

*யாழ்ப்பாணம் நல்லூர் செட்டித்தெருவை பிறப்பிடமாகவும், சாவகச்சேரி கிராம்புவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரைஐயர் விக்னராசாஐயர் நேற்று முன்தினம் (13.08.2017) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.*

*அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரைஐயர் - ஞானம்மா தம்பதியினரின் மூத்த புத்திரனும், காலஞ்சென்ற தம்பையாக்குருக்கள் - சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும், அன்னலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், சிவஞானசூரியர், மகேந்திரராஜா, தெய்வசேனா, ரவீந்திரன், இந்திரசேனா, மகேஸ்வரதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வீரபத்திரக்குருக்கள் அவர்களின் அன்பு மைத்துனரும், பிறேம்குமார், உதயகுமார், மதிவதனா, ஜெயவதனா, பாலகுமாரகுருக்கள் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், புஸ்பராணி, சுதா, சுப்ரமணியம், சாந்தரூபன், வானதி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஹரிராம், திவ்யலக்ஷிமி, ராகவி, யாதவா, சிவானுஜன், தரணிகா, தக்ஷயன், நர்மதன், நர்மதா, மாதுளன், பவதாரணன், லவதாரணன், தபோதாரணன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2017) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கிராம்புவில், சாவகச்சேரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று திருவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கிராம்புவில்,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி-9339)

# நீதிபதி இளஞ்செழியனுடன் அமெரிக்கத் தூதுவர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அப்துல் கேசாப் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார். இச்சந்திப்பு சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்றது.

நீதிபதி இளஞ்செழியன் மீதான துப்பாக்கி பிரயோக சம்பவத்தில் கொல்லப்பட்ட பொலிஸ் சார்ஜன்டினது மனைவியின் காலில் வீழ்ந்து நீதிபதி அழுத காட்சியை பார்வையிட்ட அமெரிக்கத்தூதுவர், தாம் இதைக் கண்டு மனம் நெகிழ்ந்ததாக தனது டுவிட்டர் தளத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே கடந்த சில தினங்களுக்கு முன்பாக அமெரிக்கத்தூதுவர் கொழும்பில் வைத்து நீதிபதியை சந்தித்திருந்தார்.

இக்கலந்துரையாடலில், அமெரிக்கத்தூதுவர் நீதிபதியினை கண்டதும் அவரை கட்டியணைத்து கைலாகு கொடுத்திருந்தார்.

மேலும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் நீதிபதி என்ற நிலையில் இருந்தும் கூட நீங்கள் நடந்து கொண்டவிதம் அனைத்தையும் தான் பார்த்ததாகவும் அதனால் தான் மிகுந்த மனநெகிழ்ச்சி அடைந்ததாகவும் இதன் போது அமெரிக்கத் தூதுவர் நீதிபதிக்கு தெரிவித்திருந்தார்.

மேலும் அமெரிக்கத் தூதுவர் என்ற வகையில் தன்னிடம் என்ன உதவிகள் வேண்டுமெனினும் தன்னைத் தொடர்பு கொள்ளலாம் என்றும் நீதிபதியிடம் அவர் உறுதியளித்திருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (மு-11)


## வீட்டுடன் காணி விற்பனைக்கு

புலோலி தெற்கு, புற்றளை தம்பப்பாய் (புற்றளை விளையாட்டு மைதானத்திற்கு முன்) பகுதியில் 4 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0775981648

(136)


# போக்குவரத்து விதி மீறலுக்கு ரூபாய் 25 ஆயிரம் அபராதம்

## என்று என இன்று தீர்மானம்

(கொழும்பு)

போக்குவரத்து குற்றங்கள் தொடர்பில் அறவிடப்படும் 25 ஆயிரம் ரூபாய் அபராத தொகையை அமுல்படுத்தவுள்ள தினம் தொடர்பில் இன்று தீர்மானம் எடுக்கவுள்ளதாக, வீதி பாதுகாப்பு தொடர்பாக தேசிய சபையின் தலைவர் கலாநிதி சிசிர கொதாகொட தெரிவித்தார். (மு-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநாட்டுக் கொள்கைக்கு ஏன் தமிழர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்

## சிந்தித்து பாருங்கள் என்கிறார் மனோ

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பில் மறைமுகமாக அதிகாரப் பரவலை முன்னெடுக்க ஒரு போதும் நாம் முயற்சிக்க வில்லை. சுயநல அரசியல் கருத்துக்களை இனியும் முன் வைக்க வேண்டாம். சமஷ்டியே வேண்டாம் என்று போராடிய தமிழர்கள் ஏன் தனி நாட்டுக் கொள்கைக்கு தள்ளப்பட்டார்கள் என்பதை சிந்தித்து பாருங்கள் என்று தேசிய சகவாழ்வு மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

பிரிவினை வாதத்தையும், ஆயுத கலாசாரத்தையும், அரசியல் கொலைகளையும் தெற்கில் ஆரம்பித்து விட்டு, வடக்கின் மேல் பழி சுமத்தப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

அரசியல் தலைமைத்துவம் தொடர்பிலான கற்கைக்கான நிகழ்வு நேற்று முன் தினம் இல ங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட அமைச்சர் மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டின் பாரளுமன்ற உறுப்பினர்களின் பிரதான தகுதியாக மும்மொழி தேர்ச்சி இருக்க வேண்டும். மக்களுக்கு இதனைக் கூற முன்னர் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மும்மொழிககளையும் தெரிந்துகொள்ள வேண்டும். இல்லாவிடின் நாட்டை சரியாக வழிநடத்த முடியா்து. சிங்கள மக்களின் மனதை தமிழர்களும், தமிழர்களின் மனதை சிங்களவர்களும் விளங்கிக்கொள்ள வேண்டும்

ஒவ்வொரு இன மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அறிந்துகொள்ள மொழி தேர்ச்சி அரசியல் தலைமைகளுக்கு இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


சிறுநீரக நோய்களுக்குச் சிகிச்சை
Ayurvedic Treatment for Renal Diseases

சிறுநீர் குறைவாகவும், வலி மற்றும் எரிச்சல் கட்டியுடன் வெளியேறல், ஆரம்ப நிலை சிறுநீரக செயலிழப்பு நிலை (Renal Failure in Primary Stage). சிறுநீரகம், சிறுநீர்ப்பை இவற்றில் கற்கள் காணப்படுதல் (Stone in the Kidney & Bladder) கற்கள் காரணமாக ஏற்படும் வயிற்று வலி, சிறுநீர்த் தடை, இரத்தம் கலந்த சிறுநீர் வெளியேறல் மற்றும் ஆண்களில் ஏற்படும் புரஸ்டேட் (Enlargement of the Prostate gland) பிரச்சினைகள் போன்றவற்றால் சிறுநீர் கழிப்பதில் தாமதம், தடை, அடிக்கடி வெளியேற்றம் உணர்வு மற்றும் சிறுநீர்த்தொற்று (Urine Infection), கீழ்வயிற்று வலி, நித்திரை மற்றும் மனக்குழப்பம் போன்ற பிரச்சினைகளுக்கு சித்த ஆயுர்வேத முறையில் சிகிச்சைகள் பெறலாம்.

சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R. LAKSHMANAIYER (D.A.M (Cey), D.M.G (Ind)
Regd (7966,Dep.Ayu - 63/1/2541)
மாங்களபதி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


# செஞ்சோலைப் படுகொலையின் நினைவு தினம்

# யாழ்.பல்கலையில் நேற்று அனுஷ்டிப்பு









செஞ்சோலைப் படுகொலையின் 11 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் பல்கலை வளாகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த அஞ் சலி நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆர். விக்னேஸ்வரன் கலந்து கொண்டு பிரதான ஈகச்சுடரை ஏற்றி வைத்தார்.

(படங்கள் உ.சாளின்)



# சைட்டம் கல்லூரி குறித்து ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும்

## லால்காந்த வலியுறுத்து

(கொழும்பு)

மாலபே தனியார் மருத்துவ கல்லூரி தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி. லால்காந்த அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

பண்டாரவளை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

மேலும் சைட்டம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கத்திற்கு வேண்டிய அளவு சந்தர்ப்பங்களும் வாய்ப்புக்களும் உள்ளன.

எனினும் அதனை எதற்காக அரசாங்கம் மேற்கொள்ளாதுள்ளது என்பது குறித்து புரிந்து கொள்ள முடியவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# செஞ்சோலைப் படுகொலை நினைவுதினம் மட்டக்களப்பில்



செஞ்சோலை படுகொலையின் 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் மட்டக்களப்பு கோப் சென்டர் மண்டபத்தில் உணர்வெழுச்சியுடன் நேற்று நடந்தது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 11 மணியளவில் தீபம் ஏற்றி ஆரம்பிக்கப்பட்டது.

வள்ளிபுனம் பகுதியில் அமைந்திருந்த செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீது 2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி காலை 7 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதலில் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 61 பேர் உயிரிழந்ததுடன் 150 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

குறித்த படுகொலைக்கு நீதிகோரியும், உயிரிழந்த மழலைகளின் ஆத்ம சாந்திக்காகவும் இந்த அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது. (இ-7)

# இந்தியாவின் 70 ஆவது சுதந்திரதினம் இன்று யாழில்



இந்தியாவின் 70 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் தேசிய கொடியேற்றல் வைபவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இல.29B, கச்சேரிநல்லூர் வீதியில் அமைந்துள்ள India Ho use இல் இடம் பெறும். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லேகலே டெஸ்ட் 3ம் நாள்

## கெத்து காட்டிய விராட்டின் இந்தியா
# இலங்கையை வெள்ளையடித்தது
## 85 ஆண்டு கால வரலாறும் படைப்பு

அசுர பலம் கொண்ட இந்திய அணி, தனது சகலதுறை ஆற்றல்களால் பலம் குன்றி காணப்படும் இலங்கை அணியை இன்னிங்ஸ் மற்றும் 171 ஓட்டங்களால் அடித்து வீழ்த்தியது.

அத்துடன் 85 வருட கால டெஸ்ட் வரலாற்றில் இந்திய அணி முதல் முறையாக அந்நிய மண்ணில் எதிரணியை வெள்ளையடிப்புச் செய்து சாதனையும் படைத்தது.

இலங்கை - இந்திய அணிகள் மோதிய 3ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி பல்லேகலேயில் நடைபெற்றது.




போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 487 ஓட்டங்கள் குவித்தது.

தவான் (119 ஓட்.), ஹர்த்திக் பாண்ட்யா (108 ஓட்.) சிறப்பாக விளையாடி சதம் அடித்தனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் சண்டகன் 132 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணி, இந்திய வீரர்களின் அபாரமான பந்துவீச்சை தாக்குப் பிடிக்க முடியாமல் முதல் இன்னிங்ஸில் 135 ஓட்டங்களில் சுருண்டு 'பொலோ-ஒன்' ஆனது.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் சண்டிமல் அதிகபட்சமாக 48 ஓட்டங்கள் எடுத்தார்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் குல்தீப் யாதவ் 40 ஓட்டங்களுக்கு 4, ஷமி, அஸ்வின் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

352 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை தொடர்ந்து விளையாடிய இலங்கை அணி, நேற்று முன்தினம் 2ஆவது நாள் ஆட்ட நேர நிறைவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 19 ஓட்டங்கள் எடுத்து இருந்தது.

கருணாரத்ன 12, புஷ்பக்குமார ஓட்டம் எதுவும் எடுக்காமலும் களத்தில் இருந்தனர்.

நேற்று 3ஆவது நாள் ஆட்டம் நடந்தது. இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க மேலும் 333 ஓட்டங்கள் தேவை, கைவசம் 9 விக்கெட் என்ற நிலையில் இலங்கை அணி தொடர்ந்து விளையாடியது.

ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் இலங்கையின் 2ஆவது விக்கெட் விழுந்தது. கருணாரத்ன 16 ஓட்டங்களில் அஸ்வின் பந்தில் ஆட்டம் இழந்தார். அதன்போது அணியின் ஓட்டஎண்ணிக்கை 20 ஆக இருந்தது.

அதனைத் தொடர்ந்து புஷ்பக்குமார, குஷல் மெண்டீஸ் ஆகியோர் சமி பந்தில் அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர்.

இந்நிலையில், மதிய உணவு இடைவேளைக்கு பிறகு, இந்திய அணியின் பந்துவீச்சை தாக்குப் பிடிக்க முடியாமல் இலங்கை அணி திணறியது.

இறுதியில் இலங்கை அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 181 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக நிரோஷன் டிக்வெல மட்டும் 41 ஓட்டங்கள் எடுத்தார். மற்றையவர்கள் விரைவில் ஆட்டமிழந்தனர்.

இதனால் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 171 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்தியா தரப்பில் அஸ்வின் 68 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி அசத்தினார். ஷமி 3 உமேஷ் யாதவ் 2 குல்தீப் யாதவ் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்த வெற்றியை தொடர்ந்து, இலங்கை அணியை 0-3 என்ற கணக்கில் சொந்த மண்ணில் வைத்து வெள்ளைடித்தது.

முதல் டெஸ்டில் 304 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் 2ஆவது டெஸ்டில் இன்னிங்ஸ் மற்றும் 53 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றிருந்தது.

இதன்மூலம் 85 ஆண்டுகளாக டெஸ்ட் வரலாற்றில் அந்நிய மண்ணில் 3 போட்டிகளை கொண்ட டெஸ்ட் தொடரை முழுமையாக கைப்பற்றி வரலாற்று சாதனை படைத்தது.

---

ஸ்பானீஸ் சுப்பர் கிண்ணம்

## முட்டல்கள், மோதல்களுக்கு மத்தியில்
# பார்சிலோனாவை வீழ்த்தியது மட்ரிட்




கால்பந்து ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஸ்பானீஸ் சுப்பர் கிண்ண தொடரின் முக்கிய போட்டியில் ரியல் மட்ரிட் 3:1 என்ற கணக்கில் பரமவைரியான பார்சிலோனா அணியை வீழ்த்தியது.

ஸ்பானீஸ் சுப்பர் கிண்ண தொடர் கால்பந்து போட்டிகள் ஸ்பெயினில் நடைபெற்று வருகின்றன.

இதில், ஸ்பெயினின் முக்கிய கழக அணிகள் பங்குபற்றுகின்றன.

இந்நிலையில், கால்பந்து ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த பார்சிலோனா - ரியல் மட்ரிட் அணிகள் மோதிய போட்டி நேற்று அதிகாலை நடைபெற்றது.

பார்சிலோனா நகரில் நடைபெற்ற இந்த முக்கிய போட்டியை காண ரசிகர்கள் மைதானம் முழுவதும் நிரம்பி வழிந்தனர்.

பார்சிலோனா அணியிலிருந்த முக்கிய வீரரான நெய்மர் பாரீஸ் அணிக்குச் சென்றுவிட்டதால், பார்சிலோனா தடுமாறும் என ரசிகர்கள் போட்டிக்கு முன்னதாக கருத்து தெரிவித்திருந்தனர்.

இருப்பினும், நட்சத்திர ஆட்டக்காரர் மெஸ்ஸி, சுவாரஸ் ஆகியோர் அணியில் உள்ளதால் ரியல் மட்ரிட்டை பார்சிலோனா வீழ்த்தும் எனவும் சிலர் கருத்து தெரிவித்திருந்தனர்.

ஆட்டம் தொடங்கியது முதலே இரு அணி வீரர்களும் கோல் அடிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். இதனால் இரு தரப்பிலும் அனல் பறந்தது.

வீரர்களுக்கிடையே முட்டல், மோதல்களுக்கும் பஞ்சமில்லாமல் சென்ற முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை.

இதனால், ரசிகர்கள் பெரும் ஏமாற்றத்திற்கு உள்ளாகினர். பிற்பாதி ஆட்டம் தொடங்கிய 50ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணியின் நடுகள வீரர் பிக்கு சேம் சைட் கோல் அடிக்க ரியல் மட்ரிட் அணி முன்னிலை பெற்றது.

ரியல் மட்ரிட் அணி முன்னிலை பெற்றதால் பார்சிலோனா அணி வீரர்கள் தீவிரமாக கோல் அடிக்கும் முயற்சியில் இறங்கினர்.

இதற்கு பலனாக 77ஆவது நிமிடத்தில் பெனால்டி வாய்ப்பு கிட்டியது. இந்த வாய்ப்பை வீணாக்காமல் மெஸ்ஸி கோலாக மாற்றினார்.

ஆட்டம் சமனாக சென்ற சில நிமிடங்களிலேயே பார்சிலோனா அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் அளிக்கும் விதமாக ரியல் மட்ரிட் அணியின் தூணாக இருக்கும் ரொனால்டோ 80ஆவது நிமிடத்தில் அசத்தலாக கோல் அடிக்க மீண்டும் அந்த அணி முன்னிலை பெற்றது.

ஆட்டம் முடிவடைய சிறிது நேரமே இருந்ததால் பார்சிலோனா அணியினர் அதிரடி தாக்குதல்களில் இறங்கினர். ஆனால், அவர்களது முயற்சி ரியல் மட்ரிட் வீரர்களின் முன் பலிக்கவில்லை. ஆட்டத்தின் 90ஆவது நிமிடத்தில் மார்கோ அசென்சியோ ஒரு கோல் அடிக்க ரியல் மட்ரிட் அணி 3:1 என்ற கணக்கில் பார்சிலோனா அணியை வீழ்த்தியது.

ஆட்டத்தின் இறுதி கட்டத்தில் ரொனால்டோ, மெஸ்ஸியை வெறுப்பேற்றும் விதமாக தனது ரீ-ஷேர்ட்டை கழற்றி ரசிகர்களிடம் காண்பித்தார்.

இதனால், அவர் சிவப்பு அட்டை பெற்று களத்திலிருந்து வெளியேறினார். இந்த வெற்றியின் மூலம் கடந்த முறை பெற்ற தோல்விகளுக்கு ரியல் மட்ரிட் அணி தக்க பதிலடி கொடுத்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவைக் கூட்டங்கள் மிகவும் நெகிழ்வுத்தன்மையுடன் முன்னெடுப்பு

## அமைச்சர் கயந்த தெரிவிப்பு



(கொழும்பு)

அமைச்சரவைக் கூட்டங்களின் போது ஜனாதிபதியும் பிரதமரும் அனைத்து அமைச்சர்களின் ஆலோசனைகளையும் செவிமடுப்பது வழமை என்று அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் பொழுதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

சமகால அரசாங்கம் அமைச்சரவைக்கூட்டங்களை மிகவும் நெகழ்வுத்தன்மை யுடன் நடத்துகிறது என்று தெரிவித்த அமைச்சர் கயந்த கருணாதிலக்க, அனைவரும் ஒன்றிணைந்து கலந்து ரையாடி கூட்டுப் பொறுப் புடன் தீர்மானங்களை எடுக்கும் ஒரு இடமாக அமைச்சரவை அமைந்துள்ளது. கடந்த ஆட்சியின் போது இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டங்களில் சில கலந்துரையாடல்களும் தீர்மானங் களும் ராஜபக்ஷ குடும்பத்தி னருக்கு வரையறுக்கப்பட் டதாகவே அமைந்திருந்தது என்றும் தெரிவித்தார். (இ-7)

# மகிந்தவுக்கு எதிரான விசாரணைகளை துரிதப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான விசாரணைகளை துரிதப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் முன்னணி உறுப்பினர்கள் சிலர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான விசாரணைகள் மிகவும் மந்த கதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தொடர்ச்சியாக தெரிவித்து வருகின்றனர். அத்துடன் நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டரை வருடங்கள் கடந்துள்ள போதிலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மீதான குற்றச்சாட்டு குறித்த விசாரணைகள் இன்னும் நிறைவு பெறாமல் உள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பில் பேசப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



### யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)


# 50 அடி பள்ளத்தில் பாய்ந்தது பஸ் 21 பேர் வைத்தியசாலையில் அனுமதி



(கொழும்பு)

கதிர்காமத்திலிருந்து நுவரெலியா வலப்பனை வழியாக மிஹிந்தலை நோக்கி பயணித்த தனியார் சுற்றுலா மினிபஸ் ஒன்று வலப்பனை நுவரெலியா பிரதான வீதியில் மாஹாஊவாபத்தன பகுதியில் குடைசாய்ந்துள்ளது.

மிஹிந்தலை பகுதியிலிருந்து சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக் கொண்டு கதிர்காமத்திற்கு சென்று மீண்டும் மிஹிந்தலைக்கு செல்லும் வழியிலேயே குறித்த பஸ் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் பாதையை விட்டு விலகி சுமார் 50 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்விபத்தில் பஸ்ஸில் பயணித்த 21 பேர் படுங்காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

சீரற்ற காலநிலை காரணமாகவும் பஸ் சாரதிக்கு தூக்க கலக்கம் ஏற்பட்டதன் காரணமாகவும் இந்த விபத்து நேர்ந்ததாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இவ்விபத்தில் காயமடைந்த 21 பேரில் 15 பேர் நுவரெலியா ஆதார வைத்தியசாலையிலும் 6 பேர் வலப்பனை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்விபத்து தொடர்பில் வலப்பனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# A/L; பரீட்சை மண்டபத்தில் மாணவியின் தகாத செயல்

## பொலிஸாரிடம் ஒப்படைப்பு

க.பொ.த.உயர்தரப் பரீட்சையின் போது புளூடூத் ஹெட் செட் (bluetooth headset) உதவியுடன் பரீட்சை எழுதிய மாணவி ஒருவர் கையும் மெய்யுமாக பிடிபட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை உயர்தர பரீட்சைக்காக மாணவி ஒருவர் தோற்றியிருந்தார். இந்த நிலையில் குறித்த மாணவி கலாசார உடையுடன் வந்திருந்தார். பரீட்சை ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் சந்தேகத்திற்கிடமாக குறித்த மாணவியின் சத்தம் அடிக்கடி வெளிவந்த வண்ணம் இருந்துள்ளது. இதனால் சந்தேகமடைந்த பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் பொலிஸாரின் உதவியை நாடியுள்ளார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் குறித்த மாணவியை பிரத்தியேக அறைக்கு அழைத்துச் சென்று பரிசோதனை மேற்கொண்ட நிலையில் மாணவியின் காதில் செயற்பாட்டில் இருந்த வண்ணம் புளூடூத் ஹெட் செட் (bluetooth headset) இயங்கிக் கொண்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் பரீட்சை குறித்த சகல செயற்பாட்டில் இருந்தும் மாணவி இடைநிறுத்தப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டார். (இ-7)

# வர்த்தக நிலையங்கள் மீது பருத்தித்துறையில் பாய்ச்சல்

பருத்தித்துறை சுகாதாரப் பகுதியினர் நேற்றையதினம் வர்த்தக நிலையங்கள் மீது திடீர் பாய்ச்சல் மேற்கொண்டனர். வடமராட்சி மந்திகைப் பகுதியினை அண்டிய பகுதிகளில் திடீர் பாய்ச்சல் மேற்கொண்ட அவர்கள் காலாவதியான பொருட்கள் தொடர்பில் சோதனையிட்டுள்ளனர். (இ-60)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 . 07 . 1964



உதிர்வு 27 . 07 . 2016

## அமரர் . கிருஷ்ணபவானி பரமலிங்கம் (கிருஷா)

அன்புக்கு இலக்கணமாய் அருளின் இருப்பிடமாய்
பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
கருணையின் வடிவமாய் காதலின் தீபமாய்
எம் வாழ்வில் ஒளி தந்த தெய்வமே!
எங்களிடம் எத்தனை கொள்ளை அன்பும்
கோலோச்சிய பாசம் நிறைந்த பேச்சும்
எண்ண இனிக்கும் இனியதோர் புன்னகையும்
எம்மை விட்டு மறைந்து ஓராண்டு சென்றதம்மா!
ஆண்டு ஒன்று மறைந்தாலும் ஆறவில்லை எம் துயரம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

15.08.2017 செவ்வாய்க்கிழமை இன்று எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

7 ஆம் வட்டாரம்,
கேரதீவு, புங்குடுதீவு.

(127)

குடும்பத்தினர்.


# இராசி பலன்

15.08.2017
(ஆடி 30, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
அட்டமி பிற்பகல் 4.13 மணிவரை
கார்த்திகை பின்னிரவு 1.51 மணிவரை
சுபநேரம் 10.35-12.05 மணிவரை
இராகுகாலம் 3.05-4.35 மணிவரை
கார்த்திகை விரதம்,
கடைசி ஆடிச் செவ்வாய்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சித்திரை, சுவாதி<br>காலை 8.49 இற்கு<br>இட-சந் | | சூரி.ராகு<br>செவ்.சுக்<br>புத |
| கேது | | | |
| | சனி | | குரு |

**மேடம்** பணத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, யோகமான நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில்கூட வெற்றி கிடைக்கும்.

**இடபம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** எடுத்த காரியத்தை நிறைவேற்ற ஒருமுறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள், மனதில் இனம் புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**சிம்மம்** கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், காரிய அனுகூலமுண்டு, மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம்.

**துலாம்** மறதியால் ஒருசில பணிகளை செய்யாமல் விட்டு விடுவீர்கள், கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், நண்பர்களிடம் விழிப்புணர்வு அவசியம்.

**விருச்சிகம்** வருங்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.

**தனுசு** கடன்சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், போட்டிகளில் வெற்றி கிடைக்கும், செய்தொழில் மேன்மையுண்டு.

**மகரம்** பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மீனம்** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், உடன்பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தப்பெருமானின் 17ஆம் நாள் திருவிழாவின் மாலை நேர வீதியுலாக் காட்சி

# சைவநெறிப் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழு நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தில் நல்லைக் குமரன் மலர் வெளியிடுவது வழமை. சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் இக்காலத்தின் தேவைகருதி யாழ். மாவட்ட மாணவர்களிற்கு பாட சாலை ரீதியாக சைவநெறிப் பரீட்சை நடத்தி வெற்றி பெற்ற தரம் 6,7,8,9,10,11 வகுப்புக்களிற்கு வகுப்பு ரீதியாக முதல் மூன்று மாணவர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும்சான்றிதழ்களும்வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வு இன்று காலை 8.15 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலில் ஆரம்பமாகி ஊர்வலமாக நல்லைக்குமரன் 25 ஆவது வெள்ளி மலர் நாவலர் வீதியிலுள்ள நாவலர் கலாசார மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு வெளியீட்டுவிழாவுடன் நடைபெறவுள்ளது. எனவே வெற்றிபெற்ற பாடசாலை மாணவர்கள் தவறாது கலந்து கொண்டு வெற்றிப் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.மாநகர சபை சைவ சமய விவகாரக் குழு கேட்டுக் கொள்கின்றது என யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் அறிவித்துள்ளார்.

முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம்,

தரம்-6

ஈஸ்வரன் ஆதவன் (யா/இந்துக் கல்லூரி), சிவகணேஷன் அனந்திகன் (யா/ஹாட்லிக் கல்லூரி), இருவர் மூன்றாமிடம் யதுர்சிகா விஜயகுமார் (யா/வேலணை மத்திய கல்லூரி), நேருஜா ஜீவதாபன் (யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்).

தரம்-7

ஹருணி ஞானராசா (யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), யமுனாநந்தன் சரவணன் (யா/இந்துக் கல்லூரி), கிரிஷாயினி ஹரிதாஸ் (யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்).

தரம்-8

நிதுர்சிகா சுபாஸ்கரன் (யா/விக்னேஸ்வரா கல்லூரி), மதியழகன் டினோஜன் (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), முருகானந்தன் மிதுசன். (யா/வட்டு இந்துக் கல்லூரி).

தரம்-9

துசானிகா மகேஸ்வரன் (யா/இந்து மகளிர் கல்லூரி), அருமைநாயகம் மோகனராஜ் (யா/இந்துக் கல்லூரி), சபீனா திலீபன் (யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை).

தரம்-10

சிவப்பிரியா சிவப்பிரகாசம் (யா/இந்து மகளிர் கல்லூரி), ரிஷானி திருச்செல்வம் (யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்), பார்கவி சிவகரன் (யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை).

தரம்-11

லலிதாம்பிகை மகேந்திரன் (யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), சுடேந்திரன் பிரணவன் (யா/ஹாட்லிக் கல்லூரி), லோகிதா அருணகிரிநாதன் (யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி). (இ-3)

# வரணி பிரதேச வைத்தியசாலையின் பொதுக் கூட்டத்தைக் கூட்டுங்கள்

வரணி பிரதேச வைத்தியசால்ல 2017 ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டம் மற்றும் புதிய நிர்வாகத் தெரிவை விரைவில் நடத்துமாறு அப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வரணி பிரதேச வைத்திய சாலையின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நோயாளிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மக்கள் தமது கருத்துக்களை தெரிவிக்க வேண்டியுள்ளதாகவும் குறித்த பொதுக் கூட்டத்தை விரைவில் நடத்தி தமது கருத்துக்கள் உள்வாங்கப்பட வேண்டும் என்பதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த விடயத்தை கவனத்திற்கொண்டு வரணி பிரதேச வைத்தியசாலையின் 2017 ஆம் ஆண்டுக்கான பொதுக் கூட்டத்தை நடத்த ஏற்பாடு செய்யுமாறு பிரதேச மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.(இ-10-103)




# முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியாக மீண்டும் வேல்நம்பி



பேராசிரியர் தி.வேல்நம்பி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தின் பீடாதிபதிக்கான தேர்தலில் மூன்றாவது தடவையாகவும் பேராசிரியர் தி. வேல்நம்பி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2011 ஆம் ஆண்டு தொடக்கம் பீடாதிபதியாகப் பணியாற்றும் பேராசிரியர் தி.வேல்நம்பி மூன்றாண்டுகளைக் கொண்ட பீடாதிபதி பதவிக் காலத்தில் மூன்றாவது முறைக்கான பதவிக் காலத்தை 15.08.2017 தொடக்கம் ஆரம்பிக்கின்றார்.

புத்தூர் ஸ்ரீசோமாஸ் கந்தக் கல்லூரியின் பழைய மாணவராகிய இவர் 1996 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கணக்கியல் துறை விரிவுரையாளராக நியமனம் பெற்றார். இன்று கணக்கியல்.. முகாமைத்துவம் தமிழியல் சார்ந்த துறைகளில் பல்பரிமாண ஆளுமை பெற்றவராக விளங்குகின்றார்.

சிறந்த பேராசிரியர் மற்றும் சிறந்த கல்விசார் ஆய்வாளர் முதலிய விருதுகளை வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் இருந்து பெற்ற பெருமைக்குரியவர் பேராசிரியர் தி.வேல்நம்பி என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# அக்கரை சுற்றுலா மைய அபிவிருத்தியை உடன் நிறுத்துமாறு மக்கள் வீதி மறியல்





(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு அக்கரை சுற்றுலா மைய அபிவிருத்தியை உடன் நிறுத்துமாறு கோரி அப் பிரதேச மக்களால் கடற்கரை வீதியை மறித்து நேற்றைய தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அக்கரை கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரிய கடற்கரை கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம், கெருடாவில் காட்டுப்புலம் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம், அக்கரை கிராம அபிவிருத்தி சங்கம், அக்கரை ஞான ஒளி மாதர் கிராம அபிவிருத்தி சங்கம், அக்கரை தொண்டமான் விளையாட்டுக் கழகத்தினர் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொனண்டனர்.

தொண்டைமானாறு அக்கரை கடற்கரை பிரதேசம் சுற்றுலா மையமாக பிரகடனப் படுத்தப்பட்டு வலி. கிழக்கு பிரதேச சபையின் கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், குறித்த பகுதியை பராமரிக்கும் செயற்பாட்டினையும் பிரதேச சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் குறித்த பகுதி சுற்றுலா மையமாக பிரகடனப்படுத்துவதால் அப்பகுதியில் கலாசார சீரழிவு ஏற்பட்டுள்ளதாகவும் பல குற்றச் செயல்கள் இடம்பெற்று வருவதாகவும் அப்பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். அதாவது கஞ்சா கடத்தல், மது பாவனை, கடற்றொழிலாளர்களை பாதிக்கும் வகையிலான படகு சேவை என்பன தொடர்ச்சியாக இடம் பெற்று வருகிறது. இதனால் அப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதுடன் தமது கிராமமும் இளம் சமூகத்தினரும் பாதிக்கப்படுவதாக குற்றம் சாட்டியுள்ளனர். குறித்த பகுதியை உல்லாச மையமாக மாற்றும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவித்திருந்தும் அது தொடர்பில் உரிய நடவடிக்கையோ தீர்வோ இது வரை வழங்கப்படவில்லை என்பதனால் நேற்றைய தினம் மேற்படி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்ததாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் கருத்து தெரிவித்திருந்தனர். இந்த விடயம் தொடர்பில் உரிய தீர்வு முன்வைக்கப்படும் வரை தமது போராட்டத்தை தொடரவுள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தெரிவித்திருந்தனர். (இ-9)

# 'உள்முகப்படுத்தப்பட்ட மனம்' ஆன்மீக அருளுரை இன்று

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ். சின்மயா மிஷன் நடத்தும் ஆன்மீக அருளுரை (ஞான யக்ஞம்) இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணி முதல் 8 மணிவரை இல. 700 பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷனில் இடம் பெறும். இதில் உள்முகப்படுத்தப்பட்ட மனம் எனும் தலைப்பில் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா ஆன்மீக அருளுரை வழங்குவார். (இ-3)

# வேகக்கட்டுப்பாட்டையிழந்த மோ.சைக்கிள் மின்கம்பத்துடன் மோதி விபத்து!

வேகக்கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு நெல்லியடி- கொடிகாமம் வீதியிலுள்ள கோவிற்சந்தைப் பகுதியில் இவ் விபத்து ஏற் பட்டது. இவ்விபத்தில் மோட்டார் சைக்கிள் கடும் சேதமடைந்துள்ள துடன் படுகாயமடைந்த இருவரும் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-60)



# அனுமதியின்றி மீன்பிடித்த 5 மீனவர்கள் நேற்று கைது



அனுமதிப்பத்திரமின்றி மணற்காட்டு கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த ஐந்து மீனவர்களைக் கைது செய்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

முல்லைத்தீவில் கடல் அட்டை பிடிப்பதற்கான அனுமதிப்பத்திரத்தை வைத்துக் கொண்டு வடமராட்சி கிழக்கு மணற்காட்டு கடற்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இரண்டு படகுகளை நேற்று அதிகாலை வழிமறித்த கடற்படையினர் அதிலிருந்த ஐந்து மீனவர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கற்பிட்டி, மன்னார், முல்லைத்தீவைச் சேர்ந்தவர்களாவர். அவர்களை பருத்தித்துறை பொலிஸில் பாரப்படுத்தவுள்ளதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-60)

# தெய்வீக இசையரங்கின் 19 ம் நாள் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் [illegible] த்தையும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் 19 ஆம் நாள் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறும். இதில் பாட்டு- எஸ். சாய்லக்ஸ்மி, வயலின்- அ.ஜெயராமன், மிருதங்கம்- க. கண்ணதாஸ், கெஞ்சிரா-ஞா.வசந் ஆகியோர் கலந்துகொள்வர். (இ-3)

# பெருவிழா திருப்பலியும் பவனியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.புனித மரியன்னை பேராலய வருடாந்த திருவிழா கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இன்று செவ்வாய்க் கிழமை அதிகாலை 5.15 மணிக்கு முதலாம் திருப்பலியும் தொடர்ந்து காலை 6.15 மணிக்கு அன்னையின் விண்ணேற்பு பெருவிழா திருப்பலியும் மாலை 5 மணிக்கு அன்னையின் திருச் சொரூப பவனியும் இடம் பெறும். (இ-10-106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



தமிழர்கள் மீது பாலியல் வன்கொடுமை இன்னமும் தொடர்கிறது என ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன் 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் விடுத்த அறிக்கையில் தெரிவித்திருந்தார். எனினும் அவை வெறும் அறிக்கையாக மட்டுமே இருந்தனவன்றி வேறு எதுவும் இல்லை எனலாம்.

நிலைமை இதுவாக இருக்கையில் ஈழத்தமிழர்களின் நலன்களில் அக்கறை கொண்டிருந்த புலம்பெயர் தமிழ் அமைப்புகள் தமது கரிசனையை வலுவாக்கிக் கொண்டன. இந்த அமைப்புகளின் பிரதிநிதிகள் தமிழர் தாயகத்திற்கு வந்து செல்லக்கூடிய சூழ்நிலை இருந்ததன் காரணமாக அவர்கள் இங்கு வந்து அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்தனர்.

இச்சந்திப்பு பரவலாக நடைபெற்றது. இதில் சுவிஸ் தமிழர் அமைப்புப் பிரதிநிதிகள் குழுவொன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து, தமிழரசுக் கட்சியைச் சந்தித்தது.

அச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்யுமாறு கோரிக்கை விட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதனூடாக, தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்த முடியும் என அவர்கள் கூறினர்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக ஒருபோதும் பதிவு செய்யமுடியாதென மாவை. சேனாதிராஜா அவர்கள் மிகவும் இறுக்கமாகக் கூறினார்.

தமிழரசுக் கட்சியை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய முடியாதென மாவை. சேனாதிராஜா கூறியதால் அது சுவிஸ் தமிழ் அமைப்பிற்கு மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுத்திருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதில்லை என்ற முடிவு இன்று நேற்று எடுக்கப்பட்டதில்லை. இது ஏலவே எடுத்த முடிவு என்பதால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்வதில்லை என்ற மாவை. சேனாதிராஜாவின் பதில் தமிழ் மக்களுக்கு ஆச்சரியமாகவோ, அதிசயமாகவோ இருக்கவில்லை.

இதேவேளை 2015 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி அமெரிக்க இராஜாங்க அமைச்சர்



## அரசியல் சூழ்நிலையை தமிழர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமாம்

ஜோன் கெரி இலங்கைக்கான அதிகாரபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கொழும்பிற்கு வந்திருந்தார். கொழும்பில் 3 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்தார். இச் சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சருடனான சந்திப்பின் போது இலங்கையில் நடந்த போரில் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் நம்பகரமான விசாரணைகள் நடத்தப்படவேண்டும் எனவும் தமிழ்மக்களுக்கு நியாயபூர்வமான தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் தமிழ்த் தரப்பினர் வலியுறுத்தினர்.

இவைதவிர, வடக்கு- கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதில் போர் முடிவுக்கு வந்த பின்னரும் படையினர் வடக்கு-கிழக்கில் தங்கியிருப்பது அமைதிக்கு குந்தகமாக உள்ளது. எனவே தமிழர் தாயகத்தில் படையினரின் பிரசன்னம் முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும். பொதுவில் வடக்கில் நடக்கும் எந்த விடயங்களையும் தீர்மானிக்கும் சக்தியாகப் படையினரே இருக்கின்றனர். இந்தநிலைமை மாற்றப்பட்டு அரசியல் ரீதியில் தீர்க்கமான முடிவொன்றை இலங்கை அரசு அறிவிப்பதற்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்கவேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை கூட்டமைப்பினர் அழுத்தம் திருத்தமாக முன்வைத்தனர். கூட்டமைப்பினர் முன்வைத்த கருத்துக்களை ஏற்றுக்கொண்ட அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலையை தமிழர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமெனப் பதிலளித்தார். ஜோன் கெரியின் இப்பதில் ஒரு வெளிநாட்டுப் பிரதிநிதி சொல்லவேண்டிய வழமைக்குட்பட்டதா? அல்லது தமிழ் மக்கள் புதிய அரசாங்கத்துடனும் முரண்பட்டு எல்லாவற்றையும் போட்டுடைத்துவிடுவார்கள் என்ற நினைப்பில் சொல்லப்பட்டா? என்பதை சந்திப்பில் இருந்தவர்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

எதுவாயினும் தமிழ் மக்கள் எதற்கும் ஒத்துப் போகமாட்டார்கள், அரசுடன் இணங்கிச் செயற்படமாட்டார்கள் என்ற நினைப்பு வெளிநாடுகளிடம் இருக்கிறது என்பது மட்டும் உண்மை. இத்தகையதொரு கருத்துருவாக்கம் எப்படி ஏற்பட்டது என்பது பற்றியும் இந்தத் தவறான கருத்துருவாக்கத்தை முறியடிப்பது பற்றியும் தமிழ்த் தலைமைகள் சிந்தித்துச் செயலாற்றியிருக்க வேண்டும்.

எனினும் எங்களுக்குள் ஒற்றுமையில்லாதபோது, நாங்கள் ஒருவரை ஒருவர் கடித்துவிழுங்கத் தயாராக இருக்கும்போது, எங்களின் நிலைமை தொடர்பில் வெளிநாடுகளுக்கு உண்மைகளை எடுத்துரைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று நினைப்பது மடமைத்தனமாகும்.

எதுவாயினும் தமிழ் மக்களின் பிரச்சினைகள், அவர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகள் தொடர்பில் ஒரு வலுவான பிரசாரத்தை முன்வைப்பதில் தமிழ்த்தரப்பிடம் எந்த ஏற்பாடுகளும் இல்லை என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# செஞ்சோலை மழலைகள் நினைவுதினம் உணர்வுபூர்வமாக நேற்று அனுஷ்டிப்பு





கடந்த 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் 14ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டுவீச்சில் செஞ்சோலை வளாகத்தில் பலியான மாணவர்களின் 11 ஆம் வருட நினைவஞ்சலி நேற்று படுகொலை நடந்த இடமான செஞ்சோலை வளாகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வட மாகாணசபை உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டு உயிரிழந்த மாணவர்களுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தனர். (படங்கள்: ச.தவசீலன்)



இலங்கை வான்படையால் கொல்லப்பட்ட செஞ்சோலை சிறுவர்களின் பதினோராம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வானது நேற்று பல இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டிருந்த வேளை வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் தனது மக்கள் தொடர்பகத்தில் இந்நினைவேந்தலை மேற்கொண்டுள்ளார்.

## சர்வதேச கூட்டுறவாளர் தினம் இன்று

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட 95 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவுச் சபை மண்டபத்தில் மாவ ட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் அமரசிங்கம் கேதீஸ்வரன் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன், கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கயிலாசபிள்ளை சிவகரன், கிளிநொச்சி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி நல்லதம்பி கனகம்மா ஆகியோர் கலந்து கொள்வர். (3-8)

## முதன்மைக் கூட்டுறவாளர் விருது பெறும் இராசநாயகம்



1970இல் இருந்து கூட்டுறவுத் துறையில் கால்தடம் பதித்து பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தலைமை தாங்கி எழுச்சி பெறச் செய்த ஒருவராகப் பார்க்கப்படுகின்றார். முதன் முதலாக பூநகரி ப.நோ.கூட்டுறவுச் சங்கத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதிலிருந்து இவரது கூட்டுறவுச் சேவை ஆரம்பிக்கின்றது. 6 கிளைகளுடனும் 13 ஊழியர்களுடனும் செயற்பட்ட சங்கத்தினை 13இற்கு மேற்பட்ட கிளைகளைக் கொண்டதாகவும் 6 இற்கு மேற்பட்ட கைத்தொழில் திட்டங்கள், கிராமிய வங்கிச் சேவை, ஊர்திப் போக்குவரத்து சேவை, படகுப் போக்குவரத்து சேவை கொண்டதாகவும் 126 பேருக்கு மேல் வேலை செய்யும் நிறுவனமாகவும் பெண்களுக்கு வாழ்வாதாரம் அளிக்கும் நிறுவனமாகவும் இவர் மாற்றியமைத்தார்.

இவர் 1970 இல் பூநகரி பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு யாரும் தலைமை தாங்க பின்னின்ற வேளையில் தலைமைப் பொறுப்பேற்று பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் ஊடாக இச் சங்கத்தினை முன்னேற்றினார். பனங்கட்டித் தொழிற்சங்கங்கள் 2 இவரால் நிறுவப்பட்டன.

எல்லாவற்றுக்கும் மேலாக கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுச் சபைக்கு 10 ஆண்டுகளுக்கு மேல் தலைமை தாங்கி மாவட்ட கூட்டுறவுச் சபைக்கு காணிகள் கட்டடங்களைப் பெற்றுக் கொடுத்தார். இன்று இருக்கும் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபம் இவரது செயற்பாட்டின் ஒரு காத்திரமான பங்களிப்பின் விளைவாகும்.

வவுனியா மாவட்ட கூட்டுறவுச் சபைக்குரிய காணியில் கட்டடம் கட்டாததால் காணி பறிபோக இருந்த நிலையில் அச் சபைக்குரிய காணியில் மண்டபங்களையும் கட்டடங்களையும் கட்டித் திறந்து வைத்து வவுனியா கூட்டுறவுச் சபைக்கு உதவியது இன்றும் வவுனியா கூட்டுறவாளர்களால் பாராட்டப்படுகின்றது.

இவர் கூட்டுறவுத் துறை [illegible] னது. இறுதியாக இவர் உள்ளூராட்சி கூட்டுறவு அமைச்சின் மாகாணச் செயலாளராக இருந்தபோது மீள்குடியேறிய கிராமங்களில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கட்டட வசதியினைச் செய்து கொடுத்ததுடன் வாகன வசதிகளையும் செய்து கொடுத்து அனைத்தையும் யுத்தத்தினால் இழந்த சங்கங்களுக்கு அரணாக இருந்து பாதுகாத்தது [illegible] (8)

## பாடசாலை உபகரணங்கள் வழங்கல் நிகழ்வு இன்று

யாழ். இந்துக் கல்லூரியின் அவுஸ்திரேலியாக் கிளை பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் நாட்டில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக தமது வாழ்க்கைத் துணைகளை இழந்துள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களைக் கொண்ட துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதிகளின் குடும்பங்களில் இருந்து முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 105 மாணவர்களுக்கு புத்தகப்பைகள், காலணிகள், துவிச்சக்கர வண்டிகள் என்பன வழங்கி வைக்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு மு/ அமைதிபுரம் அ.த.க.பாடசாலையிலும் முற்பகல் 10.45 மணிக்கு ஏ-9 வீதியில் உள்ள கிராம அலுவலர் செயலகத்திலும் நடைபெறும். (8-15)




## பேருந்து சாரதிகளின் அசமந்தம் பீதியில் பயணிகள்

பேருந்து சாரதிகளின் அசமந்தப் போக்கினால் பயணிகள் பீதியில் பயணம் செய்வதாக தெரிவிக்கின்றனர்.

உயிர் என்பது மிகவும் முக்கியமானது. அதுவும் பயணங்களை மேற்கொள்ளும் பயணிகளின் உயிர்கள் பேருந்து சாரதி மற்றும் நடத்துநர்களின் பொறுப்பில் தான் இருக்கிறது. அந்த வகையில் வாகன சாரதிகளின் அசமந்தப் போக்கினால் சில உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணிக்கும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தும் தனியார் பேருந்தும் யார் முந்திச் செல்வது என்று போட்டிபோட்டு செல்கின்றமையால் பேருந்தில் பயணிக்கின்றவர்கள் மிகவும் பயத்துடன் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே பேருந்து சாரதிகள் பொறுப்புணர்வுடன் தங்களின் கடமைகளை செய்தால் பல உயிர்கள் காக்கப்படும் என சமூக ஆர்வலர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (8-312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிபொருட்களை அகற்றுவதில் சவால் நிறைந்த பிரதேசமாக முகமாலைப் பகுதி





கிளிநொச்சி - முகமாலைப் பகுதியில் தற்போது வெடிபொருட்கள் அகற்றப்பட்டு வரும் பிரதேசம் மிகவும் சவால் நிறைந்து காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி - முகமாலைப் பகுதியில் யுத்தகாலத்தில் புதைக்கப்பட்ட வெடி பொருட்களை அகற்றும் பணிகள் கடந்த 2010ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு, வெடி பொருட்களை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் பகுதியானது ஆபத்து, சவால் நிறைந்து காணப்படுகின்றது என கண்ணிவெடிகளை அகற்றும் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள இத்தாவில், முகமாலை, வேம்பொடுகேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் வெடி பொருட்களை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு முகமாலைப் பகுதியில் மிகவும் ஆபத்தான முறையில் வகைதொகையின்றி வெடிபொருட்கள் புதைக்கப்பட்டுள்ளதுடன், நீண்டகாலம் காத்திருந்து உயிர் பறிக்கக்கூடிய நிலை காணப்படுகின்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் ஏற்கனவே பல உயிரிழப்புக்கள் இடம் பெற்றுள்ளதுடன், பலர் காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். இந்த பகுதிகளில் உள்ள மண் அணைகள், கைவிடப்பட்ட காவலரண்கள் என்பவற்றில் அதிகளவான வெடிபொருள் காணப்படுகின்றன.

எனவே இவ்வாறான பகுதிகளுக்குள் பொதுமக்கள் செல்வதை முழுமையாக தவிர்த்துக் கொள்ள வேண்டுமென பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளராலும், கண்ணிவெடி விழிப்புணர்வு செயற்பாட்டு செயலகத்தாலும் தொடர் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

நன்கு பயிற்சி பெற்று நீண்ட காலம் பணிகளில் ஈடுபட்டு வரும் கண்ணி வெடி அகற்றும் அணியினருக்கே இந்த பகுதி மிகவும் சவால் நிறைந்த பகுதியாக காணப்படுவதாக இப் பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றும் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (3-8)

# அடிக்கல் நாட்டு விழா



வவுனியா சேமமடுவில் நீண்டகால தேவையாக காணப்பட்ட வைத்தியசாலைக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

வட மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தினால் அடிக்கல் நாட்டப்பட்ட இவ் வைத்தியசாலை சுமார் 9 மில்லியன் ரூபா பெறுமதியில் முதற்கட்டமாக அமைக்கப்படவுள்ளது.

சேமமடு கிராம வைத்திய சாலையாக அமைக்கப்படவுள்ள இவ் வைத்தியசாலை நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் இப்பகுதி மக்கள் இதுவரை காலம் எதிர்நோக்கி வந்த வைத்தியதேவையை சுமார் 25 கிலோ மீற்றர் சென்று பெறவேண்டிய தேவை ஏற்படாது என்பது குறிப்பிடத்தக்கது. (8)




# வவுனியாவிலிருந்து நல்லூருக்கான பாதயாத்திரை நேற்று ஆரம்பம்



வவுனியா வேப்பங்குளம் காளிகோவிலில் இருந்து நல்லூர் ஆலயத்தின் தேர்த் திருவிழாவை முன்னிட்டு வேல் தாங்கிய நடை பாத யாத்திரை நேற்றுக்காலை ஆரம்பமானது.

காலை காளிகோவிலில் ஆலயத்தின் நிர்வாகி சாமி அம்மா தலைமையில் இடம் பெற்ற விசேட பூஜைகளை அடுத்து பாதயாத்திரை ஆரம்பமானது.

இதன்போது பல பக்தர்கள் வயது.வேறு பாடின்றி யாத்திரையில் கலந்து கொண்டிருந்தனர். 114 ஆலயங்களில் தரிசிப்பை மேற் கொண்டு நல்லூர் தேர்த்திரு விழா அன்று யாத்திரை நல்லூர் ஆலயத்தை அடைந்து நிறைவடையவுள்ளது. (8-250)

# பொன்தீவு கண்டல் கிராம மாணவர்களுக்கு சான்றிதழ்



(மன்னார்)

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பொன்தீவு கண்டல் கிராமத்தில் மூன்று மாத கால கணனி பயிற்சியை பூர்த்திசெய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு, பொன்தீவு கண்டல் தூய அந்தோனியார் ஆலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது.

பொன்தீவு கண்டல்பங்குத் தந்தை பீற்றர் லோறன்ஸ் லியோ தலைமையில் இடம் பெற்ற குறித்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் கலந்துகொண்டார்.

அத்தோடு, தமிழீழ விடுதலை இயக்கத்தின் சர்வதேச அபிவிருத்திக் குழு பிரதிநிதி ஏ.நித்தியானந்தம், ஆசிரியர் ஏ.தயாகரன், கவிஞர் சொக்கலிங்கம் மற்றும் டெலோ முக்கிஸ்தர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

'பிரன்ஸ் இன் நீற்' நற்பணி மன்றத்தினால் நடத்தப்பட்ட இந்த மூன்று மாத கால கணனி பயிற்சியில் 39 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-250)

# விடுதியிலிருந்து சடலம் மீட்பு

வவுனியா கோவிற்குளம் பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் இருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை குறித்த சடலம் மீட்கப்பட்டது. இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வவுனியா, கோவிற்குளம் பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியின் மதுபானசாலை பகுதியில் கடைமையாற்றும் மூன்று பிள்ளைகளின் தந்தையான அலேசு அருளப்பு (வயது-58) என்பவரே நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு 10.30 மணியளவில் அவரது கடமைகளை முடித்து விட்டு குறித்த விடுதியில் தங்கியுள்ளார்.

நேற்றுக் காலை குறித்த விடுதி அறைக்கு சக ஊழியர் ஒருவர் சென்ற சமயத்தில் கதிரையில் இறந்த நிலையில் இருந்துள்ளார். உடனடியாக வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர் நோய்வாய்ப்பட்டு இறந்திருக்கிருக்கலாம் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரிய வருகின்றது. (8-250)

# வழி அனுமதிப்பத்திரமின்றி பயணித்த ஆறு பேருந்துகள் சிக்கியுள்ளன

(கொக்காவில்)

கிளிநொச்சி, முல்லைத்தீவிற்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் ஆலோசனையின் கீழ் அவருடைய விசேட குழுவினர் நேற்று முன்தினம் ஆனையிறவு முதல் கொக்காவில் வரை நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையில் வழி அனுமதிப்பத்திரம் இன்றி யாழிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியாருக்கு சொந்தமான ஐந்து அதி சொகுசுப் பேருந்துகளும் ஒரு அரை சொகுசுப் பேருந்தும் குறித்த குழுவினரிடம் அகப்பட்டு உள்ளன.

குறித்த ஆறு பேருந்து சாரதிகளுக்கும் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் பொலிஸாரால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (8-312)



# 106 ஆவது நாளாகவும் தொடர்ந்த நிலமீட்புப் போராட்டம்

தமது சொந்தப் பகுதியை விடுவிக்குமாறு கோரி 106 ஆவது நாளாக நேற்றும் இரணைதீவு மக்கள் தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த மே மாதம் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், அரசினது கவனத்தையும் ஈர்க்கும் வகையில் கிளிநொச்சியில் பேரணி ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

50 ஆவது நாளில் ஏ-32 வீதி பூநகரி மன்னார் வீதியை வழிமறித்து வீதிமறியல் போராட்டத்திலும் நூறாவது நாளில் கடந்த வாரம் கொழும்பில் ஒரு போராட்டத்திலும் இரணைதீவு மக்கள் ஈடுப்பட்டிருந்தனர்.

இவ்வாறு பல்வேறு [illegible] போதும், தங்களுடைய நிலங்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை எனத் தெரிவித்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து, 20, 25 வருடங்களுக்கு மேலாக விடுவிக்கப்படாத நிலங்களைக் கூட விடுவித்து [illegible] மீள் குடி[illegible]றது.

இந்த நல்லாட்சி மீது நல்ல நம்பிக்கையிருக்கின்றது. எங்களின் நிலங்களை எங்களின் நம்பிக்கைகள், ஆசைகள் வீண் போகாது. எங்களது நிலத்தை நல்லாட்சி அரசுவிடுவிக்குமென்றநம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

கடந்த ஆட்சியின்போது, பல அரசியல்வாதிகள் எங்கள் நிலத்தை கேட்க வேண்டாம் என கூறினார்கள். நாங்கள் எங்கள் நிலத்தில் தான் தொழில் செய்து நிம்மதியாக வாழ்ந்தோம், எவரிடமும் கையேந்தவில்லை.

இன்று இந்த இடத்திலே எவர் வருவார், எதைத் தருவார்கள் எனவும் பார்த்திருக்கின்றோம். எனவே எங்கள் நிலத்தை விடுவித்து அங்கே குடியேறி நிம்மதியாக வாழ்வதற்கும் தொழில் செய்வதற்கும் இந்த நல்லாட்சி அரசு வழிவகை செய்ய வேண்டுமென போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் குறிப்பிட்டுள்ளனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லாவற்றுடனும் புலிகளை தொடர்புபடுத்த முடியாது

# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை

## இராணுவத் தளபதி மகேஷ் தெளிவுபடுத்தல்

வடக்கில் நடக்கின்ற எல்லாச் சம்பவங்களுக்கும் விடுதலைப் புலிகளே காரணம் என்று அடையாளப்படுத்துவது முற்றிலும் தவறானது என்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

"சூழ்ச்சிக் குழுக்களால் ஆங்காங்கே நடத்தப்படும் சில செயல்களால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை.

வடக்கில் நடக்கின்ற ஒவ்வொரு சம்பவத்துடனும் விடுதலைப் புலிகளைத் தொடர்புபடுத்த நான் விரும்பவில்லை.

வடக்கில் வேறு சூழ்ச்சிக் குழுக்கள் இருக்கின்றன. ஆவா குழு விடுதலைப் புலிகள் இல்லை.

தெற்கில் பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பலர் பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றனர். ஆனால் அவர்களை நீங்கள் ஒரு குழுவைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளப்படுத்த முடியாது. 1971-1981 குழு போன்று அவர்களை அடையாளப்படுத்த முடியாது. அது ஒரு முத்திரை.

12 ஆயிரத்துக்கும் அதிகமான விடுதலைப் புலிகளை நாங்கள் புனர்வாழ்வுக்குட்படுத்தியுள்ளோம். அவர்களில் யாராவது ஒருவர் எதையேனும் செய்தால், அந்த 12 ஆயிரம் பேரும் நாளை காலையே ஆயுதம் ஏந்தி போரைத் தொடங்குவார்கள் என்று அர்த்தமில்லை.

அவ்வாறு நடப்பதானால், நாங்கள் களநிலவரத்தைக் கண்காணிக்காமல் தூங்கிக் கொண்டிருக்க வேண்டும்.

வடக்கில் நடக்கும் ஒவ்வொரு சம்பவத்தையும் விடுதலைப் புலிகள் என்று அடையாளப்படுத்தும் போது, உண்மையான களநிலவரம் புறக்கணிக்கப்படுகிறது.



கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பொலிஸார் தாக்கப்பட்டனர். இதுபோன்ற சம்பவங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நடக்கின்றன. அதனால் நாட்டின் அமைதிக்கு உடனடியான பாதிப்பில்லை. இவை பெரிய விடயங்களில்லை.

அத்திட்டிய வங்கி கொள்ளையின் போது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அது கொள்ளைச் சம்பவம் என்று யாரும் பொருட்படுத்தவில்லை. அதுபோல வடக்கில் நடந்தால், விடுதலைப் புலிகள் என்று கூறுவது சரியில்லை.

வடக்கில் இராணுவம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. வடக்கிலும் கிழக்கிலும் இராணுவத்தின் பிரிவுகள் உள்ளன. வடக்கில் இராணுவம் முடக்கி வைக்கப்படவில்லை. நாங்கள் வெளியே வருவோம்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## 'ஆவா ஒரு மாயை'

வடக்கில், ஆவாக்குழு என்று ஒரு மாயை உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அதன் பின்னணி வெளிப்படுத்தப்படவேண்டும் என்றும் ஜனநாயக போராளிகள் கட்சி கேட்டுக்கொண்டுள்ளது.

ஷெல்களை தோள்களில் சுமந்துசென்று தாக்குதல்களை நடத்தி, ஜனநாயக பாதைக்கு திரும்பியுள்ள முன்னாள் போராளிகள், கத்திகளுடனும் பிளேட்டுகளுடனும் அலையவேண்டிய தேவையில்லை என்றும் அக்கட்சியின் ஊடக செயலாளர் துளசி தெரிவித்தார்.

மட்டக்களப்பு, உப்போடை லயன்ஸ் கிளப் மண்டபத்தில் நேற்று முன்தினம்நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த, ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடக செயலாளர் துளசி மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது,

வடக்கு மற்றும் கிழக்கு உட்பட அனைத்துப் பகுதிகளிலும் இடம்பெறும் சட்ட விரோத செயற்பாடுகளை தடுக்கும் வகையில் பாதுகாப்புத் துறையினரும் சட்டத்துறையினரும் எடுக்கும் நடவடிக்கைகளை எமது கட்சி வரவேற்கின்றது என்றும் தெரிவித்தார். (இ-7)

### சமூக வலைத்தளம் மூலம்

## பெண்களை ஏமாற்றி பணம் மோசடி

சமூக வலைத்தளங்கள் ஊடாக பெண்களுடன் நட்புறவு கொண்டு அவர்களை திருமணம் செய்து கொள்வதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவிசாவளை, சீத்தாவக்கை பாடசாலை வீதியில் வைத்து மிரிஹான குற்றப் புலனாய்வு பிரிவினரால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதோடு, சந்தேக நபரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மிரிஹான பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

வட்டாபொத்த நிவித்திகல பகுதியை சேர்ந்த 33 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் பாதுக்க, களுத்துறை, தெஹிவளை ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனவும் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (இ-7)

# கொழும்பை அச்சுறுத்தும் மர்மக் கும்பல்

## அதிரடிப்படையினர் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

நீர்கொழும்பு, கொழும்பு உள்ளிட்ட நகரங்களில் பாரிய கொள்ளையில் ஈடுபடும் நடமாடும் கொள்ளைக் குழு பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு புத்தளம் வீதி குரண பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் காயமடைந்த இருவர் தற்போது தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட அங்கொட லொக்கா மற்றும் மாகந்துரே மதுஷின் ஆதரவாளர்கள் இருவர் வெளியிட்ட தகவல்களுக்கமைய இந்த நடமாடும் கொள்ளை குழு தொடர்பான தகவல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார். 10 இலட்சம் ரூபாய்க்கு அதிகமான பணம் கொண்டு வரும் எந்தவொரு நபர் தொடர்பிலும் இந்த குழுவுக்கு தகவல் கிடைத்து விடும்.

அதற்கமைய வாகனத்தில் சுற்றித்திரியும் இந்தக் குழுவினர் உரிய நேரத்தில் அந்த இடத்திற்கு சென்று அந்த பணத்தை கொள்ளையடித்து விட்டு வாகனத்தின் இலக்கத் தகட்டினை மாற்றி விட்டு தப்பி சென்று விடுகின்றனர்.

இந்த நடமாடும்கொள்ளைக் குழுவிற்கு தகவல் வழங்குபவர்கள் பாரியளவு பணப் புழக்கமுள்ள இடங்களில் சேவை செய்வதாக தெரியவந்துள்ளது. (இ-7)

## விபத்தில் மூவர் பலி!

பொல்காவெல மெதிகும்புர பிரதேசத்தில் நேற்று அதிகாலை டிப்பர் வாகனமொன்று பாதையை விட்டு விலகி குடைசாய்ந்ததில் இருவர் பலியாகியுள்ளனர். குறித்த விபத்தில் ஆட்டோ ஒன்று டிப்பர் வாகனத்தோடு மோதியுள்ளதாக பொலகாவெல பொலிஸார் தெரிவித்தனர். சம்பவ இடத்திலேயே இருவரும் உயிரிழந்துள்ளமையால் குறித்த விபத்து தொடர்பாக வேறு தகவல்கள் வெளிவராத நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை பிலியந்தலை எனசால்வத்தை பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் பலியானார். லொறியொன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதிக் கொண்டதில் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை, தெனியாய, பல்லேகம, கொலவெனிகம பிரதேசத்தில் உள்ள சத்மால நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்ற 5 பேரில் ஒருவர் காணாமல் போயுள்ளார். காணாமல்போனவர் தெலிஞ்சவில பகுதியைச் சேர்ந்த 26 வயதான நபர் என பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## விஜயதாஸவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் யாரும் கையொப்பமிடவில்லை

### அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவது வெறும் செய்தி மாத்திரமே என ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

எனினும், இதுவரை எந்தவொரு தரப்பினரும் அதற்கு ஆதரவாக கையெழுத்திடவில்லை.

ரவி கருணாநாயக்க விலகிச் சென்றமை சிறந்த எடுத்துக்காட்டாக இருப்பதுடன், பண்டாரநாயக்கவுக்கு பின்னர் இதுவரை இவ்வாறான விலகிச் சென்ற சம்பவங்கள் இடம்பெற்றிருக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார். (இ-7)

## பிரித்தானியப் படையினருக்கு எதிராக தமிழ்ப்பெண் அயர்லாந்தில் முறைப்பாடு

இலங்கை விசேட அதிரடிப் படையினருக்கு பயிற்சி வழங்கியமை தொடர்பில், தமிழ்ப் பெண்ணொருவரினால் அயர்லாந்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு பயிற்சி வழங்கியமை தொடர்பில் பிரித்தானியாவுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரித்தானியாவின் RUC படைக்கு எதிராக அயர்லாந்து பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் விதவைப் பெண் ஒருவரினால் இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனினும் குறித்த பெண் தொடர்பான விபரங்கள் வெளியிடப்படவில்லை.

1986 ஆம் ஆண்டு தனது உறவினர்கள் 10 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கு விசேட அதிரடிப் படையினர் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரித்தானிய RUC படையினரால் இலங்கை விசேட அதிரடிப் படையினருக்கு பயிற்சி வழங்கியமையினால் தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டதாக அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஊடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் திருவிழாவை முன்னிட்டு யாழ். மாநகர சபையினால் சமய, சமூக, கலை, கலாசார விழுமியங்களை பேணி வருபவர்களுக்கான 2017 ஆம் ஆண்டிற்கான யாழ். விருது பெறும் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களைப் பாராட்டி வாழ்த்தி வணங்குகின்றோம்







**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**B.A. Dep.in Education, Phd, Jaffna University**
**இளைப்பாறிய அதிபர்**

ஆறுமுகம்- சரஸ்வதி தம்பதியினருக்குப் புதல்வனாக 1961 மே மாதம் 28 ஆம் திகதியன்று பிறந்தவர் திருமுருகன். இவர் தனது ஆரம்பக் கல்வியை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் பயின்று, உயர் கல்வியை பேராதனை பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு பட்டதாரியானார். மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்படிப்பின் படிப்பை மேற்கொண்டார். 1989 ஆம் ஆண்டில் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் ஆசிரியராக நியமனம் பெற்றார். பின்னர் 1993 ஆம் ஆண்டில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று, பகுதித் தலைவராகவும், உப அதிபராகவும், பின்னர் பிரதி அதிபராகவும் பணியாற்றி 2008 மார்ச் மாதம் 16 ஆம் திகதி முதல் அதே கல்லூரியின் அதிபராகப் பதவி உயர்வு பெற்றார்.

இவரது ஆசிரிய சேவையைப் பாராட்டும் வகையில் 1991 ஆம் ஆண்டு யாழ். மாவட்டக் கல்வித் திணைக்களமும், 2002 ஆம் ஆண்டு வலிகாமம் கல்வி வலயமும் நல்லாசிரியர் விருதை வழங்கிக் கௌரவித்தது.

இவரது கல்விப் பணிக்கு மேலதிகமாக சமய , சமூகநலப் பணிகளிலும் இவரது பங்களிப்பு சிறப்பாக நோக்கத்தக்கது. 2011 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 6 ஆம் திகதி யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆன்மீக இலக்கிய சமூகப்பணிகளுக்காக உயர் கௌரவ விருதாகிய "கலாநிதி" பட்டத்தை பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் வழங்கி கௌரவித்தது. தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராகவிருந்த சிவத்தமிழ்ச் செல்வி. கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் மறைவுக்குப் பின்னர் இவர் தேவஸ்தானத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

1993 ஆம் ஆண்டில் சிவத்தமிழ்ச் செல்வி பிறந்தநாள் அறநிதியத்தின் ஒரு உறுப்பினராக இணைந்து கொண்ட இவர் 1995 ஆம் ஆண்டிலிருந்து தேவஸ்தான நிர்வாக சபையிலும் நியமனம் பெற்று 2003 ஆம் ஆண்டில் இணைச் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டார். 2008 ஆம் ஆண்டு ஜுன் 29 ஆம் திகதியன்று நடந்த தேவஸ்தான நிர்வாக சபைக் கூட்டத்தில் இவர் புதிய தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

**ஆறு. திருமுருகன் பணிகள்**

**யாழ். போதனா வைத்தியசாலை.**

❖ கண்சத்திர கூடத்தை கட்டுவித்தமை
❖ இரத்த சுத்திகரிப்பு பிரிவுக்கான இயந்திரத்தை வழங்கி உதவியமை
❖ புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கு உதவியமை.

**சிவபூமி அறக்கட்டளையை நிறுவி அதனூடாக ஆற்றிவரும் பணிகள். 2003 முதல்**

❖ 2003 ஆம் ஆண்டு கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையை நிறுவி, 300 இற்கு மேற்பட்ட மனவிருத்தி குறைவான மாணவர்களுக்கு இலவச கல்வி வழங்கல்.
❖ சிவபூமி பாடசாலை மாணவரை சர்வதேச விசேட ஒலிம்பிக் போட்டிக்குச் சென்று வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.
கிறிஸ் நாட்டில் எதேன்ஸ் ஒலிம்பிக்
அவுஸ்திரேலியா பரா ஒலிம்பிக்
அமெரிக்கா கலிபோர்னியா விசேட ஒலிம்பிக்.
❖ சிவபூமி முதியோர் இல்லம்- 2009 தொல்புரம் சுழிபுரம். 2009 இல் ஸ்தாபித்து தற்போது ஆதரவற்ற 78 முதியோர்களை சகல வசதிகளுடனும் பராமரித்தல்.
❖ சிவபூமி விவசாயப் பண்ணை 2010 நெல்லியான் சுழிபுரம்.2010 இல் ஸ்தாபித்து 500 இற்கு மேற்பட்ட தென்னை மரங்களையும் வேளாண்மையையும் உருவாக்கியமை
❖ சிவபூமி மடம் கீரிமலை 2012. சைவ மக்களின் புனித தீர்த்தமாகிய கீரிமலை தீர்த்தக் கரையில் மக்கள் தங்கவும் அன்னதானம் வழங்கவும் இம் மடத்தை ஸ்தாபித்தார்.
❖ சிவபூமி யாத்திரிகர் மடம் 2014 கீரிமலை. அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பேருதவியோடு யாத்திரிகர் தங்குவதற்கான மடத்தையும் கலை அரங்கத்தையும் நிறுவியமை.
❖ சிவபூமி கலைக் களஞ்சியம் கீரிமலை 2014. பாரம்பரியமான எமது பண்பாட்டுப் பாத்திரங்கள், பழைய வரலாற்றுப் புகைப்படங்கள், ஓவியங்கள் அடங்கிய காட்சி மண்டபத்தை உருவாக்கியமை.
❖ சிவபூமி ஞான ஆச்சிரமம் குப்பிழான் 2013. சித்தர்கள்,ஞானிகள் வழிபாட்டுக்குரிய ஆச்சிரமத்தை உருவாக்கி மனக்கவலைகளோடு இருக்கும் அன்பர்களுக்கு ஆறுதல் வழங்கும் நிலையமாகவும் வாரந்தோறும் அன்னதானம் வழங்கும் சேவையையும் ஆரம்பித்தமை.
❖ சிவபூமி கோட்டம் இயக்கச்சி பளை - 2015. வறுமைக்குட்பட்ட மாணவர்களுக்கு இலவச மேலதிக கல்வி வழங்கலும் அறநெறிப் பாடசாலையும்.
❖ சிவபூமி செவ்விளனித் தோட்டம் நாவற்குழி -2015. நாவற்குழி கேரதீவு வீதியில் 60 பரப்பு நிலத்தில் இத்திட்டத்தை உருவாக்கியமை.
❖ சிவபூமி தொழிற்பயிற்சி நிலையம் கோண்டாவில் -2014. மாற்றுவலுவுள்ள பிள்ளைகளுக்கு தொழிற்பயிற்சி வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டது.
❖ சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை கிளிநொச்சி கனகபுரம்- 2016. கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மனவளர்ச்சி குறைந்த மாணவர்களுக்காக இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

**தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
1995 முதல் நிர்வாக சபை உறுப்பினராகவும்
2000 முதல் இணைச் செயலாளராகவும்
2008 முதல் தேவஸ்தானத்தின் நிர்வாக சபை தலைவராக விளங்குகிறார்.

❖ 2011 இல் ஆலயத்தை புனருத்தாரணம் செய்வித்து மகாகும்பாபிஷேகத்தை நடத்தினார்.
❖ சிவத்தமிழ்ச் செல்வி பிறந்த நாள் கல்வி நிதியத்தை ஆரம்பித்தமை.
❖ சிவத்தமிழ்ச் செல்வி ஆய்வு நூலகம் ஆரம்ப நிதி வழங்கியமை.
❖ துர்க்காதேவி யாத்திரிகர் விடுதி அமைப்பதற்கு ஆரம்பநிதி வழங்கியமை. 2008 முதல் இன்றுவரை.
❖ துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் புதிய விடுதிச்சாலை நிறுவித்தமை-2012.
❖ துர்க்காதேவி வீட்டுத்திட்டத்தை ஆரம்பித்தமை (ஆறு வீடுகள்) 2015.
❖ நல்லூர் துர்க்காதேவி மணிமண்டப விருந்தினர் விடுதி (மூன்றுமாடி) கட்டுவித்தமை.
❖ துர்க்காதேவி ஆயுர்வேத வைத்தியசாலையை ஆரம்பித்தமை.
❖ ஆலய வெளியீடான "அருள்ஒளி" ஆன்மீக மாதாந்த சஞ்சிகையின் ஆசிரியராக பணியாற்றி வருகிறார்.

**சர்வதேச ரீதியில் உரையாற்றி பலரது பாராட்டுக்களையும் விருதுகளையும் பெற்ற விபரம்.**

❖ 1999- லண்டன் சைவ மகாநாடு.
❖ 2000- லண்டன் சிவயோகம் அறக்கட்டளை விழா தொடர் சொற்பொழிவு.
❖ 2001 - லண்டன்.
❖ 2001- கனடா. லண்டன். அமெரிக்கா.
❖ 2002- சிங்கப்பூர். லண்டன். கனடா
❖ 2003- அவுஸ்திரேலியா
❖ 2003- அமெரிக்கா. லண்டன்
❖ 2004- அவுஸ்திரேலியா
❖ 2005- லண்டன், கனடா, அமெரிக்கா
❖ 2006- தாய்லாந்து. சிங்கப்பூர்
❖ 2007- லண்டன்
❖ 2008- இந்தியா
❖ 2009- இந்தியா
❖ 2010- அவுஸ்திரேலியா
❖ 2011- இந்தியா, சிங்கப்பூர்
❖ 2012- அவுஸ்திரேலியா
❖ 2013- இந்தியா, மலேசியா
❖ 2014- லண்டன், கனடா, அமெரிக்கா
❖ 2015- அவுஸ்திரேலியா, இந்தியா
❖ 2016- அவுஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து.

**சிவபூமி அறக்கட்டளை**
(அரச வர்த்தமானி பிரசுரித்தலின் பிரகாரம் பதிவை பெற்ற அறக்கட்டளை)
**பணிகள்**
சிவபூமி மனவிருத்திப் பாடசாலை -கோண்டாவில்
சிவபூமி முதியோர் இல்லம்- சுழிபுரம்
சிவபூமி மடம்- கீரிமலை
சிவபூமி ஞான ஆச்சிரமம்- குப்பிளான்
சிவபூமி யாத்திரிகர் விடுதி- கீரிமலை
சிவபூமி வாழ்வாதார நிதியம்- கோண்டாவில்
சிவபூமி கலைக்களஞ்சியம்-கீரிமலை
சிவபூமி மருத்துவ நிதியம்- கோண்டாவில்.
சிவபூமி மனவிருத்திப் பாடசாலை -கிளிநொச்சி
சிவபூமி கோட்டம்- இயக்கச்சி
சிவபூமி கல்வி நிதியம்- கோண்டாவில்
சிவபூமி மனவிருத்திப் பாடசாலை - திருகோணமலை
சிவபூமி தொழிற்பயிற்சி பாடசாலை- கோண்டாவில்
சிவபூமி மடம்- திருகோணமலை
சிவபூமி திருவாசக அரண்மனை- நாவற்குழி



**வாழ்த்துவோர்:**
பேராசிரியர் க.தேவராசா குடும்பத்தினர். (இணுவில்)
திரு. இராசையா சிவகுமார் குடும்பத்தினர்
(இணுவில் பொது நூலக லண்டன் கிளை அமைப்பாளர்)
ஞான திருக்கேதீஸ்வரன் குடும்பத்தினர். K.T.C. கோண்டாவில்.
இரா.அருட்செல்வம் குடும்பத்தினர். A.T.C. இணுவில்.
ஐயா அறக்கொடை நிதியம் இணுவில் ,
இணுவில் பொது அமைப்புக்கள்
இணுவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்.
[illegible] மணிவிழாச்சபை, இணுவில்

(சி-9329)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதத்தின் சுதந்திர தினம் இன்று



(சென்னை)

சென்னை தலைமையலுவலகத்தில் 70 ஆவது சுதந்திர தினம் நாடு முழுவதும் இன்று கொண்டாடப்படுகிறது. இதை யொட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சென்னை தலைமை அலுவலகத்தில் இன்று சுதந்திர தினம் கொண்டாடப்படுகிறது. முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, காலை 8.30 மணிக்கு தேசிய கொடியை ஏற்றி வைக்கிறார்.

இதையொட்டி கோட்டையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மோப்பநாய் உதவியுடன் 24 மணி நேரமும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். கோட்டையை சுற்றியும் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு, வாகன சோதனையும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. நேற்று இரவு இந்த சோதனை மேலும் தீவிரப்படுத்தப்பட உள்ளது.

இதுபோல தமிழகம் முழுவதும் சுதந்திரதின கொண்டாட்டங்களுக்காக கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக சென்னையில் பலமடங்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மத்திய எழும்பூர் புகையிரத நிலையங்களில் பயணிகளின் உடைமைகள் பலத்த சோதனைக்குட்படுத்தப்படுகிறது. வெடிகுண்டு நிபுணர்களும் தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள். சென்னை விமான நிலையத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்னரே பார்வையாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. இந்த தடை உத்தரவு சுதந்திர தினம் முடிந்த பிறகும் மேலும் சில நாட்கள் நீடிக்கும் என்று தெரிகிறது. விமான நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகள் அனைத்திலும்மத்திய பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களின் நடமாட்டத்தை பொலிஸார் மாறுவேடத்தில் கண்காணித்து வருகிறார்கள். வணிக வளாகங்கள், தங்கும் விடுதிகள், உள்ளிட்டவற்றிலும் தீவிர சோதனை நடத்தப்பட்டு வருகிறது. (8)

# இந்தியா - ரஷ்யா முப்படைகளும் இணையும் மாபெரும் போர் பயிற்சி

(டில்லி)

இந்தியா, ரஷ்யா ஆகிய இரு நாடுகளினதும் முப்படைகளும் இணைந்த கூட்டுப் பயிற்சி எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் 10 நாட்களுக்கு இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதில் இந்தியாவின் முப்படைகளை சேர்ந்த 350 பேர் பங்கேற்க வுள்ளதாகவும், எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகும் இப்பயிற்சி தொடர்ந்து 10 நாட்களுக்கும் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த சில மாதங்களாக சீனா மூலம் சிக்கிம் எல்லையிலும், பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகளால் காஷ்மீர், பஞ்சாப் மாநிலங்களிலும் இந்தியாவிற்கு பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்படும் நிலையில் இந்திய ராணுவம், ரஷ்யாவுடன் இணைந்து போர் பயிற்சியில் ஈடுபடுவதற்கு முடிவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

இதனை தொடர்ந்தே இரு நாடுகளின் தரைப்படை, விமானப்படை, கடற்படை ஆகியவை இணைந்து ரஷ்யாவின் மலைப்பகுதியான விளாடிவோஸ்டாக் உட்பட 3 பகுதிகளில் குறித்த பயிற்சியில் ஈடுபடவுள்ள நிலையில், இந்திய முப்படைகள் இணைந்து பிறிதொரு நாட்டில் பயிற்சி பெறுவது இதுவே முதல் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் குறித்த பயிற்சியின் பொழுது இரு நாடுகளினதும் போர் தாங்கிகள், போர் விமானங்கள், போர்க்கப்பல்கள், தானியங்கி ஆயுதங்கள் என்பன பயன்படுத்தப்படவுள்ளதாகவும் அத்துடன் குறித்த பயிற்சியில், முப்படைகளையும் சேர்ந்த அதிகாரிகள், வீரர்கள் உட்பட 350 பேர் கலந்து கொள்ளவுள்ளதாகவும், இந்திய படையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.(3-8)

# பிரதமர் மோடி- ஓ.பன்னீர்செல்வம் சந்திப்பு

## ஓரிரு நாளில் இணைகிறது அ.தி.மு.க அணிகள்

(சென்னை)

பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் டில்லியில் பிரதமர் நரேந்திர மோடியை முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் சந்தித்து பேசினார். இச்சந்திப்பில் அ.தி.மு.க. அணிகள் இணைப்பு குறித்து பேசியதாக தகவல் வெளியாகியுள்ளது.



அ.தி.மு.க. தற்போது எடப்பாடி அணி, ஓ.பி.எஸ் அணி, டி.டி.வி.தினகரன் அணி என 3 அணிகளாகவுள்ளன.

சசிகலா, டி.டி.வி. தினகரனுக்கு எதிராக எடப்பாடி பழனிச்சாமி தீர்மானம் நிறைவேற்றியதை தொடர்ந்து தினகரன் அணி எடப்பாடிக்கு எதிராக செயற்பட்டு வருகிறது.

எடப்பாடி அணியில் இருந்து எம்.எல்.ஏக்களை இழுக்கும் முயற்சியில் தினகரன் அணி ஈடுபட்டு வருகிறது.

கட்சியில் தங்களை ஈடுபட அனுமதிக்காவிட்டால் எம்.எல்.ஏக்களை இழுத்து ஆட்சியை கவிழ்க்கவும் தினகரன் திட்டமிட்டுள்ளதாக பரபரப்பான தகவல்கள் வெளியாகி வருகின்றன.

டி.டி.வி. தினகரனின் அணியினர் கொடுத்து வரும் இடைஞ்சல்களை எடப்பாடி பழனிச்சாமி சாதுரியமாக சமாளித்து வருகிறார். எந்தக் கொம்பனாலும்ஆட்சியையோ, கட்சியையோ எதுவும் செய்ய முடியாது என்றும் பதிலடி கொடுத்துள்ளார்.

இந்த நிலையில் டி.டி.வி. தினகரன் அணிக்கு தக்க பாடம் புகட்டும் வகையில் பிரிந்து சென்ற ஓ.பி.எஸ். அணியை இணைக்கும் முயற்சியில் எடப்பாடி அணி தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக சசிகலா, டி.டி.வி. தினகரன் நியமனம் செல்லாது என்று எடப்பாடி பழனிச்சாமி சில நாட்களுக்கு முன்பு அதிரடி அறிவிப்பை வெளியிட்டார். இது எடப்பாடி அணியுடன் சேர ஓ.பி.எஸ். அணி விதித்திருந்த நிபந்தனைகளில் ஒன்று.

இதனால் ஓ.பி.எஸ். அணி- எடப்பாடி அணியுடன் இணைந்து விடும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இதுபற்றி ஓ.பி.எஸ். கருத்து தெரிவிக்கையில், எங்கள் நிபந்தனைகளில் பாதி கிணற்றைத்தான் தாண்டி உள்ளனர் என்று கூறியிருந்தார்.

இந்நிலையில் நேற்று முற்பகல் 11 மணி அளவில் பிரதமர் மோடியை அவரது வீட்டுக்குச் சென்று சந்தித்து பேசியுள்ளார். அவருடன் மைத்ரேயன் எம். பி. மற்றும் நிர்வாகிகளும் சென்றிருந்தனர்.

அப்போது அ.தி.மு.க. இரு அணிகளின் இணைப்பு குறித்து விவாதித்தனர். பதவியை எதிர்பார்க்காமல் அனுசரித்து முதலில் இணையுங்கள். மற்றதை பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று பிரதமர் யோசனை தெரிவித்ததாக தெரிகிறது.

எனவே பிரதமருடனான ஓ.பி.எஸ். சந்திப்பு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. எடப்பாடி அணி- ஓ.பி.எஸ். அணி ஓரிரு நாளில் இணைய அதிக வாய்ப்புள்ளதாக தெரிகிறது.(3-8)

# பலத்த மழையால் ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கு

## இலட்சக்கணக்கான மக்கள் பாதிப்பு

(சென்னை)

கனமழையால் பீகார், அஸாம், மேற்கு வங்க மாநிலத்தில் இலட்சக்கணக்கான மக்கள் பரிதவித்து வருகிறார்கள்.

பீகார், அசாம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. பீகார் மாநிலத்தின் சீமாஞ்சலில் 24 மணி நேரம் கனமழை கொட்டி தீர்த்தது.

மேலும் கிஷன்கஞ்ச், பூர்ணியா அரரியா ஆகிய மாவட்டங்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள மகாநந்தா, கங்காய் நதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கிறது.

இதனால் பல கிராமங்களுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. இதையடுத்து மீட்புப் பணிக்காக மத்திய பாதுகாப்பு படையினர் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார்கள். வெள்ளத்தில் சிக்கிய மக்களை படகுகளில் மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு சென்றனர்.

அடுத்த சில நாட்களுக்கு மழை நீடிக்கும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளதால் மக்கள் தவிப்பில் உள்ளனர்.

வெள்ள மீட்புப் பணி குறித்து முதலமைச்சர் நிதிஷ் குமாருடன் மத்திய அமைச்சர் ராஜ்நாத்சிங் தொலைபேசியில் ஆலோசனை நடத்தினார்.


அசாம் மாநிலத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து கனமழை கொட்டி வருகிறது. இதனால் பிரம்மபுத்திரா உட்பட 11 நதிகளில் வெள்ள அபாயம் அளவு தண்ணீர் ஓடுகிறது. அங்கு 21 மாவட்டங்களில் 22 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். திப்ரு மாவட்டம் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அங்கு பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. மழைக்கு 15 பேர் உயிரிழந்தனர். புகையிரத சேவை பல இடங்களில் துண்டிக்கப்பட்டிருக்கிறது.

மேற்கு வங்காளத்திலும் கனமழையால் பல்வேறு பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு இருக்கிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. கனமழையால் பீகார், அசாம், மேற்கு வங்காளத்தில் இலட்சக்கணக்கான மக்கள் பரிதவித்து வருகிறார்கள். (3-8)

# நிலச்சரிவில் பலி எண்ணிக்கை 46 ஆக அதிகரித்துள்ளது

இமாச்சல பிரதேசம் மாநிலத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி பலியானவரின் எண்ணிக்கை 46 ஆக அதிகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த திடீர் நிலச்சரிவால் தேசிய நெடுஞ்சாலை மூடப்பட்டு போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டது. தொடர்மழையால் மீட்பு பணிகள் தாமதமாகின. நேற்று பிற்பகல் வரை நிலச்சரிவில் சிக்கி பலியான 15 சடலங்கள் மீட்டெடுக்கப்பட்டன. இந்நிலையில், மாண்டி நிலச்சரிவில் பலியானோர் எண்ணிக்கை 46 ஆக அதிகரித்துள்ளது மீட்பு படையினர் தெரிவித்துள்ளனர். (3-8)

# 29 ஆவது நாளாகவும் தொடர்ந்த தமிழக விவசாயிகள் போராட்டம்



(டில்லி)

டில்லியில் நேற்று தமிழக விவசாயிகள் வாயில் பிளாஸ்திரி ஒட்டி போராட்டம் நடத்தினர்.

தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத் தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் டில்லி ஜந்தர் மந்தர் பகுதியில் விவசாயிகள் 29 ஆவது நாளாகவும் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இப் போராட்டம் நேற்று 29ஆவது நாளாக நீடிக்கிறது. ஒவ்வொரு நாளும் நூதன முறையில் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

நேற்று முன்தினம் அமெரிக்க தூதரக அலுவலகத்துக்கு சென்ற அவர்கள் அங்கு கையில் தட்டு ஏந்தி யாசகம் கேட்கும் போராட்டம் நடத்தினர். அமெரிக்க அரசாங்கம் தங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று அந்த தூதரகத்தில் இருந்தவர்களிடம் முறையிட்டனர்.


மேலும், ஜந்தர் மந்தருக்கு வந்த தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை சந்தித்து பேசினார்.

இந்நிலையில் நேற்று விவசாயிகள் வாயில் பிளாஸ்திரி ஒட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர். விவசாயிகளை பிரதமர் மோடி சந்திக்க மறுப்பதை கண்டித்தும், கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரியும் இப்போராட்டம் நடைபெற்றது. வாயில் பிளாஸ்திரி ஒட்டியவாறு அப்பகுதியில் விவசாயிகள் ஊர்வலமாகவும் சென்றனர்.(3-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க பொருளாதாரத் தடையின் எதிரொலி

# ஈரானின் ஏவுகணை ஆராய்ச்சிக்கு பாராளுமன்றம் ஒப்புதல்



ஈரான் மீது தடை விதித்துள்ள அமெரிக்காவுக்கு எரிச்சலூட்டும் வகையில் ஏவுகணை ஆராய்ச்சிக்கு அதிக நிதி ஒதுக்க ஈரான் பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

அரேபிய வளைகுடா பகுதியில் உள்ள நாடுகளில் ஒன்றான ஈரான் நாடு சில தினங்களுக்கு முன்பு செயற்கைக் கோள்களை சுமந்து செல்லும் ரொக்கெட் சோதனையை மேற்கொண்டதாக ஈரான் தெரிவித்தது. இது கண்டம் விட்டு கண்டம் பாயும் சோதனை முயற்சி என்று அமெரிக்கா தெரிவித்தது.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய வல்லரசு நாடுகளுடன் ஈரான் கடந்த 14-7-2015 அன்று அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொண்டது. இந்த ஒப்பந்தத்தின்படி, ஈரான் அணு ஆயுதங்கள் எதையும் தயாரிக்கக்கூடாது. அதற்கு பதிலாக அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்ட சர்வதேசப் பொருளாதார தடைகள் விலக்கிக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த உறுதிமொழியை மையமாக வைத்து ஐக்கிய நாடுகள் மன்றத்தின் பாதுகாப்பு சபையில் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில்தான், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானத்தை மீறும் வகையில், சமீபத்தில், 250 கிலோ எடையுள்ள வெடிபொருட்களுடன், 500 கி.மீ. தொலைவுக்கு பாய்ந்து சென்று, எதிரியின் இலக்கை நிர்மூலம் ஆக்கவல்ல ஏவுகணையை ஈரான் வெற்றிகரமாக சோதித்தது.

இதற்கிடையே, ஈரான் நாட்டை ஒட்டியுள்ள கடல் பகுதியில் அமெரிக்க போர்க் கப்பல்களும், போர் விமானங்களும் அத்துமீறி நுழைந்து மிரட்டி வருவதாக ஈரான் குற்றம்சாட்டி வருகிறது.

இந்நிலையில், அந்நாட்டின்மீது கடந்த மாதம் அமெரிக்கா புதிய பொருளாதார தடை விதித்ததால் ஈரான் கடும் ஆத்திரம் அடைந்துள்ளது.

இதுதொடர்பாக, ஈரான் நாட்டின் வெளியுறவுத்துறை செய்தியாளர் பஹ்ராம் கசேமி முன்னர் கூறுகையில், 'அமெரிக்காவின் செயல் ஏற்புடையதல்ல, எங்களது ஏவுகணை திட்டங்களை மிக வீரியமாக நாங்கள் செயற்படுத்துவோம்' என தெரிவித்திருந்தார்.


இந்நிலையில், ஈரான் நாட்டு பாதுகாப்புத்துறை மற்றும் ஏவுகணை திட்ட ஆராய்ச்சிகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய அந்நாட்டு பாராளுமன்றத்தில் அரசின் சார்பில் நேற்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதற்காக 52 கோடி அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்ற மசோதாவை ஆதரித்து மொத்தம் உள்ள 244 பாராளுமன்ற உறுப்பினர்களில் 240 பேர் வாக்களித்தனர். இந்த தொகையில் 26 கோடி டொலர்கள் ஏவுகணை தொழில்நுட்ப ஆராய்ச்சிக்கும், 260 டொலர்கள் வெளிநாடுகளில் உள்ள ஈரான் படைகளின் பராமரிப்புக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் என தெரிகிறது.

இந்த மசோதா நிறைவேறியவுடன் பாராளுமன்றத்தில் உரையாற்றிய சபாநாயகர் அலி லரிஜானி, 'எங்கள் மண்டலத்தில் அமெரிக்கா நடத்திவரும் சாகசங்களையும், தீவிரவாத அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள இது முதற்கட்ட நடவடிக்கை என்பதை அமெரிக்கர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்' என்று குறிப்பிட்டார். (3-8)




## வெனிசுலாவில் ஜனநாயகத்தை நிலைநாட்ட அமெரிக்கா முழு பலத்தை வழங்கும்-பென்ஸ்



வெனிசுலாவில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு, அமெரிக்கா தனது முழு பொருளாதார மற்றும் இராஜதந்திர பலத்தை வழங்கும் என அமெரிக்க துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் தெரிவித்துள்ளார்.

கொலம்பியாவில், கொலம்பிய ஜனாதிபதியுடன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கூட்டாக ஊடகவியலாளர்களை சந்தித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வெனிசுலாவில் நிலவும் சிக்கலைக் கையாள இராணுவ தலையீடு அவசியம் என்ற அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் கருத்தை ஆதரிக்கும் வகையில் பென்ஸின் கருத்து அமைந்திருந்தது.

இதேவேளை, வெனிசுலா அரசாங்கத்தை தேர்தலை நடத்த அனுமதிக்க அழுத்தம் கொடுக்க உலக நாடுகளின் ஒத்துழைப்பை பெறும் செயற்பாட்டில் அமெரிக்கா ஈடுபடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், வெனிசுலா மீது முழு அளவிலான பொருளாதார தடையை விதிக்க தாம் எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார்.

வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ புதிதாக உருவாக்கியுள்ள அரசியலமைப்பு, ஜனநாயகத்துக்கு எதிரானது என்று பரவலாக விமர்சிக்கப்பட்டு வருகின்ற நிலையில், மதுரோவை ஒரு சர்வாதிகாரி ட்ரம்ப் விமர்சித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (3-8)

## உணவு விடுதியில் துப்பாக்கிச் சூடு

### 17பேர் பலி

மேற்கு ஆபிரிக்காவில் உள்ள பர்கினா பாசோ நாட்டின் உணவு விடுதியில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டு தாக்குதலில் 17 பேர் கொல்லப்பட்டனர்.

மேற்கு ஆபிரிக்காவில் கானாவிற்கு அருகில் உள்ள நாடு பர்கினா பாசோ. பர்கினாவின் தலைநகர் ஔகடோவுகோவில் உள்ள உணவு விடுதி ஒன்றில் தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூட்டு தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் 17 பேர் கொல்லப்பட்டதாகவும், 8 பேர் காயம் அடைந்ததாகவும் அந்நாட்டின் அரசு தரப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அயல் நாட்டினர் அதிகம் வந்து செல்லும் உணவு விடுதி ஒன்றில் கடந்த இரண்டு ஆண்டுகளில் நடத்தப்படும் இரண்டாவது தாக்குதல் இது ஆகும்.


இந்த தாக்குதலுக்கு உடனடியாக எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. இருப்பினும் ஐ.எஸ். தீவிரவாதிகள் இந்த தாக்குதலை நடத்தி இருக்கக் கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

தாக்குதலை தொடர்ந்து அப்பகுதியில் பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டனர். அமெரிக்க தூதரகத்தில் இருந்து யாரும் வெளியே வர வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

முன்னதாக கடந்த 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இதேபோன்று உணவு விடுதி ஒன்றில் நடத்தப்பட்ட தாக்குதலில் 30 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-8)

## பாகிஸ்தான் சுதந்திர தின விழா

# மிகப்பெரிய கொடியை ஏற்றி கோலாகல கொண்டாட்டம்





பாகிஸ்தான் நாட்டின் சுதந்திரதினத்தை அந்நாட்டு மக்கள் மிக கோலாகலமாக கொண்டாடி வருகின்றனர். தெற்காசியாவில் மிகப் பெரிய தேசியக் கொடியை நேற்று லாகூர்-அட்டாரி எல்லைப் பகுதியில் ஏற்றப்பட்டது.

பாகிஸ்தானின் சுதந்திர தினமாக ஓகஸ்ட் மாதம் 14-ஆம் திகதி ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

அவ்வகையில், பாகிஸ்தான் நாட்டு மக்கள் தங்களது 70ஆவது சுதந்திர தின விழாவை நேற்று மிகவும் எழுச்சியாக கொண்டாடினர். நள்ளிரவு 12 மணியில் இருந்தே வானவேடிக்கைகள், ஆட்டம் பாட்டம் என ... கொண்டாட்டம் ... களை கட்டியது.

இஸ்லாமாபாத் நகரில் நடைபெற்ற சுதந்திர தின விழா நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சீனாவின் துணை பிரதமர் வாங் யாங் கலந்து கொண்டார். அங்குள்ள பாத்திமா ஜின்னா பூங்கா மற்றும் கராச்சி கடற்கரை பகுதிகளில் பாகிஸ்தான் விமானப்படையின் கண்கவர் சாகச நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

120 அடி நீளமும், 80 அடி அகலமும் கொண்ட பாகிஸ்தான் நாட்டு தேசியக் கொடியை இந்தியா-பாகிஸ்தான் இடையிலான வாகா-அட்டாரி எல்லைப்பகுதியில் பாகிஸ்தான் இராணுவ தளபதி ஜெனரல் பாஜ்வா ஏற்றிவைத்தார். சுமார் 400 அடி உயரமுள்ள கம்பத்தில் ஏற்றப்பட்ட இந்த கொடிக்கு உலகிலேயே அளவில் "எட்டாவது பெரிய கொடி" ... "தெற்காசியாவில் மிகப்பெரிய தேசியக் கொடி" என்ற சிறப்பு கிடைத்துள்ளது.

அப்போது அங்கு கூடி இருந்தவர்களிடையே பேசிய இராணுவ தளபதி பாஜ்வா, கடந்த 77 ஆண்டுகளுக்கு முன்னர் இதே லாகூர் நகரில்தான் முஸ்லிம்களுக்கென்று தனியாக பாகிஸ்தான் என்ற ஒருநாடு தேவை என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று குறிப்பிட்டார்.

அரசியலமைப்பு சட்டத்தின்படியும், அதன் விதிகளின்படியும் இன்று பாகிஸ்தான் வளர்ச்சிப் பாதையை நோக்கி முன்னேறி வருவதாகவும் தெரிவித்த அவர், நமது நாட்டுக்காக இராணுவ வீரர்கள் அளவில்லாத தியாகத்தை அர்ப்பணித்துள்ளனர்.

எதிரிகளின் குண்டுகள் வேண்டுமானால் தீர்ந்து போகலாம். ஆனால், எங்கள் நாட்டு வீரர்களின் மார்புகள் தீர்ந்துப் போகாது. பாகிஸ்தானை பலவீனப்படுத்த முயலும் அனைத்து சக்திகளையும் நமது அரசும் இராணுவமும் முறியடிக்கும். அதேபோல், உள்நாட்டில் இருக்கும் ஒவ்வொரு தீவிரவாதியையும் தேடிக் கண்டுபிடித்து அழிப்போம் என்றும் அவர் சபதமேற்றார். (3-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 20 ஆவது திருத்தச்சட்ட வரைவு
# மைத்திரியின் முடிவை மாற்றிய மகிந்தவின் கடிதம்

(கொழும்பு)

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்ப்பை வெளியிட்டமைக்கு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய எழுதிய கடிதமே காரணமாக இருந்தது என்று தெரியவந்துள்ளது.

மாகாணசபைத் தேர்தலை ஒரே நாளில் நடத்தும் வகையில், 20 ஆவது திருத்தச்சட்டத்தை கொண்டு வருவதற்கான தீர்மானம் அமைச்சரவையில் ஒருமனதாக எடுக்கப்பட்டு, வர்த்தமானியும் வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், கடந்தவாரம் நடந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில், இந்த திருத்தச் சட்ட வரைவுக்கு எதிராக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரிய கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

அதில் மாகாணசபைத் தேர்தல்களை பிற்போட வேண்டாம் என்றும், அது அரசியலமைப்பு மீறலாக இருக்கும் என்றும் அவர் எச்சரித்திருந்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில், 20 ஆவது திருத்தச்சட்ட வரைவுக்கு எதிரான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, அமைச்சரவைக் கூட்டத்தில் ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவு இன்று நடக்கவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இரத்துச் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

# விஜயதாஸ குறித்து எதுவும் கூறமுடியாது
## ரவி கருணாநாயக்க நழுவல்

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று முன்தினம் காலை கண்டி தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன்பின்னர் அஸ்கிரிய பிரிவின் மகாநாயக்கர் வரகாகொட ஞானரத்ன தேரரைச் சந்தித்து ஆசி பெற்றார். வழிபாட்டின் பின்னர் ஊடகங்களுக்கு அமைச்சர் பதிலளித்தார்.

இதன்போது அமைச்சர் விஜயதாஸவுக்கு எதிராக ஐ.தே.க. கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு நேரடியாகப் பதிலளிப்பதை தவிர்த்துக் கொண்ட அமைச்சர், கட்சியின் உடன்பாட்டுடனேயே இது குறித்து பதிலளிக்க முடியும் எனத் தெரிவித்தார். (இ-7)

# கொழும்பு பாதுகாப்புக் கருத்தரங்கில் 700 வெளிநாட்டவர்கள் பங்கேற்பு

இலங்கை இராணுவத்தால் ஆரம்பிக்கப்பட்ட 'கொழும்பு பாதுகாப்புக் கருத்தரங்கு 2017' பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 28,29 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

ஏழாவது தடவையாக இடம்பெறவுள்ள இக்கருத்தரங்கில், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் 700 பேர் பங்குபற்றவுள்ளதுடன், சார்க் நாடுகளின் பாதுகாப்புப் பிரிவின் பிரதானிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு மற்றும் சமாதானத்துக்கு ஏற்படும் பயங்கரவாத எச்சரிக்கைகளால், வன்முறை மற்றும் அடிப்படை கோட்பாட்டுடன் வன்முறை பயங்கரவாதத்துக்கு எதிரான பூகோளச் செயற்பாடு எனும் தலைப்பில், இராணுவப் பயிற்சிப் பணியகத்தின் ஒத்துழைப்புடன், இராணுவத் தளபதியின் மேற்பார்வையில் இக்கருத்தரங்கு இடம்பெறும்.

2017ஆம் ஆண்டிற்கான பாதுகாப்புக் கருத்தரங்கு, உலகத்திலுள்ள பாதுகாப்பு பங்குதாரர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பாதுகாப்பு ஆய்வாளர்களின் பங்களிப்புடன் இடம்பெறவுள்ளது.

சில வருடங்களுக்கு முன்பாக, கொடிய பயங்கரவாத அமைப்பை தோற்கடித்ததன் பின்பு ஏற்படும் தாக்கங்களுக்கு முகம் கொடுப்பது தொடர்பாக இந்த கருத்தரங்கு ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உடைகிறது கூட்டு அரசு?
## ஜனவரியில் ஐ.தே.க ஆட்சி

அடுத்த ஆண்டில், கூட்டு அரசாங்கத்தில் இருந்து வெளியேறி தனித்து ஆட்சி அமைப்பது குறித்து, ஐக்கிய தேசியக் கட்சி ஆலோசித்து வருவதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அண்மைய சில செயற்பாடுகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன. கூட்டுஎதிரணியின் தூண்டுதலின் பேரில், அவ்வாறு நடந்து கொள்வதாக ஐ.தே.க. சந்தேகிக்கிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நாட்டின் அரசியல் நிலவரங்கள் தொடர்பாக, கலந்துரையாடியுள்ளனர்.

ஒரே கூட்டு அரசாங்கத்தில் இருந்தாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பி னர்கள் பலரும், ஐ.தே.கவை தாக்கி வருகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஐ.தே.க. தொடர்ந்து கூட்டணி வைத்துக் கொண்டால், தாம் பதவி விலகுவோம் என்று ஐ.தே.க. அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் சிலர், எச்சரித்துள்ளனர் என்றும் அறியப்படுகிறது. இந்த நிலையிலேயே, டிசெம்பர் 31ஆம் திகதியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து அமைத்த கூட்டு அரசாங்கத்தில் இருந்து விலகி, தனித்து ஆட்சியமைப்பது குறித்து ஐ.தே.க. ஆலோசித்து வருகிறது என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# விஜயதாஸ ராஜபக்ஷவின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்
## 17ஆம் திகதி இறுதி முடிவு



நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதா? இல்லையா? என்பது குறித்த இறுதித் தீர்மானம் நாளை மறுதினம் 17 ஆம் திகதி நடைபெறும் ஐ.தே.கவின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் வைத்து தீர்மானிக்கப்படும் என குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நலின் பண்டார ஜயமஹ தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் தமக்கு தனியான ஒரு குழுவாக நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளதாகவும் இது தொடர்பில் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் கலந்துரையாட வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாளை மறுதினம் 17ஆம் திகதி நடைபெறவுள்ள ஐ.தே.கவின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பிலான இறுதித் தீர்மானம் எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்
## எது உண்மையான பாராட்டு

முக தாட்சண்யம் என்பது எல்லோருக்குமே உண்டு. எல்லோரும் நம்மை நேருக்கு நேர் பார்க்கும் போது (ஒரு சமயத்தில் இல்லாவிட்டாலும், பிறிதொரு சமயத்தில்) பாராட்டத்தான் செய்கிறார்கள்.

பாராட்டை விரும்புவது என்பது மனிதனின் அடிப்படை பலவீனம். இதற்கு விதிவிலக்காக இருப்பவர்களே மிகமிகக் குறைவு. அப்படி விதிவிலக்காக இருக்கும் ஒரு சிலர் கூட "இவர் பாராட்டுக்கு மயங்காத அபூர்வ மனிதர்'' என்று சொன்னதும் உச்சி குளிர்ந்து போகிறார்கள்.

நம்மை மகிழ்ச்சிப்படுத்தவும் காரியங்களைச் சாதித்துக் கொள்ளவும் தங்கள் சுயநலக் கண்ணோட்டத்திலும் பலரும் நம்மைப் பாராட்டிச் சொல்லியபடி இருக்கிறார்கள்.

சில பேர் நட்பையும் நல்லுறவையும் அன்பையும் பலப்படுத்திக் கொள்ளும் நல்ல நோக்கத்துடன் பாராட்டுகிறார்கள்.

இப்படி எத்தகைய நோக்கத்தை உடைய பாராட்டாக இருந்தாலும் அதில் உண்மை இருக்கிறதோ இல்லையோ நாம் மகிழ்ந்து போகிறோம்.

வேறு வகையில் சொல்லப் போனால், ஒரு பாராட்டுக்கும் புகழுரைக்கும் நமக்குத் தகுதி இல்லாத போதிலும் அதை விரும்புகிறோம். சாதாரண செயலைச் செய்து விட்டு, மிகப் பெரிய பாராட்டை எதிர்பார்க்கின்றோம். ஒரு கூட்டு முயற்சியில் செயலாற்றி விட்டு, மற்றவர்களைத் தனிமைப்படுத்தி விட்டு , முழுப் பாராட்டையும் நாமே பெற நினைக்கிறோம். பாராட்டை இத்தகைய சந்தர்ப்பங்களில் கூடப் பங்கு போட்டுக் கொள்ளும் பக்குவம் பலருக்கு இல்லை.

நம்முடைய முகத்திற்கு நேரே ஒருவர் பாராட்டினால் அந்தப் பாராட்டிற்கு 25 சதவிகித மதிப்புதான் உண்டு.அந்த பாராட்டில் 25 சதவிகிதம்தான் உண்மை என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்களேன்.

நம்மைச் சுற்றியவர்களும் நமக்கு வேண்டியவர்களும் நம் காதுக்கு விடயத்தைக் கொண்டுவரக் கூடியவர்களும் இருக்கும் போது நமக்கு ஒரு பாராட்டு கிடைக்குமானால் அந்த பாராட்டு 50 சதவிகித மதிப்பை உடையது. அதாவது அதில் பாதிதான் இதயபூர்வமானது.மீதமுள்ள 50 சதவிகிதமானது இவர்கள் இந்தப் பாராட்டை உரியவர்களிடம் போய்ச்சொல்வார்கள் என்ற எதிர்பார்ப்புடன் சொல்லப்படுவது.

ஆனால் நாமோ நமக்கு வேண்டியவர்களோ இல்லாத இடத்தில் (அல்லது நமக்கு வேண்டியவர்கள் இருக்கிறார்கள் என்ற உண்மையை உணராமல்) நமக்குப் பிறரால் கிடைக்கும் பாராட்டு இருக்கிறதே, அது தான் உண்மையான பாராட்டு. இத்தகைய உண்மையான பாராட்டைப் பெறும்படியான செயல்களைச் செய்யவும் நடந்து கொள்ளவும் நாம் முயற்சி செய்வது நல்லது.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு ஆயுத மோதலுக்கு எமது அரசியல் கொள்கையே காரணம்

## நீதி அமைச்சர் விஜயதாஸ ஒப்புதல்



(கொழும்பு)

**சாதாரண விடயங்கள் எனக் கருதி கைவிட்ட அரசியல் விடயங்களே இறுதியில் மிகப் பெரிய அழிவை ஏற்படுத்தியது. வடக்கு-கிழக்கு ஆயுத மோதலுக்கும் இளைஞர் புரட்சிக்கும் எமது அரசியல் கொள்கையே காரணமாக அமைந்தது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

இவற்றை மாற்றியமைக்க நல்லதொரு வாய்ப்பு கிடைத்துள்ளது. இனவாதம்என்பதை விடுத்து இன ஐக்கியத்தில் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் முன் செல்ல வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

அரசியல் மற்றும் அரசியல் தலைமைத்துவம் தொடர்பிலான கற்கைக்கான ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் விருந்தினராகக் கலந்துகொண்ட அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நாட்டில் இனவாதம் பலமடைய டொனமூர் அரசியல் அமைப்பே காரணமாக அமைந்தது. வெளிநாட்டவரின் கொள்கையில் இலங்கையில் இனவாதம் பலப்படுத்தப்பட்டது என்பதே உண்மையாகும். இதனை இன்றும் நாம் அனுபவித்து வருகின்றோம். பிரித்தானிய ஆதிக்கவாதிகள் இந்த கொள்கையை வேண்டுமென்றே இலங்கையில் உருவாக்கினர்.

அவர்களது ஆதிக்கத்தை தக்கவைக்க இதனை முன்னெடுத்தனர். அவர்கள் உருவாக்கிய இனவாத, பிரிவினைவாத கொள்கையில் இருந்து மீண்டு எழமுடியாத நிலையில் இன்றும் அதில் இருந்து தப்பிக்க நாம் முயற்சித்து வருகின்றோம்.

உலகில் எங்கும் இல்லாத அளவில் இலங்கையில் மட்டுமே பாராளுமன்ற உறுப்பினர் இன அடிப்படையில் தெரிவு செய்ய வேண்டும் என்ற கொள்கையை உருவாக்கிக்கொடுத்தனர். ஒவ்வொரு இனத்தவருக்கும் தனித்தனியாக பிரித்து வைக்கப்பட்ட அரசியல் கொள்கை உருவாக்கப்பட்டது. இவ்வாறே ஜனநாயகம் எமது நாட்டில் உருவாக்கப்பட்டது.

இந்தக் கொள்கை வேறு எந்த நாட்டிலாவது இருக்கின்றதா? என்பது எனக்கு தெரியாது. இந்த அரசியல் செயற்பாடே இலங்கையில் இளைஞர் கிளர்ச்சி, வடக்கு- கிழக்கின் யுத்தம், இனவாத முரண்பாடுகள் அனைத்திற்கும் காரணமாக அமைந்தது.

சிறிய முரண்பாடுகள் என கருதி கைவிட்ட பிரச்சினைகள் இறுதியில் மிகப் பெரிய அழிவு வரையில் சென்றமையே உண்மையாகும். இன்றும் நாம் இனவாதத்தை அடிப்படையாக வைத்தே அரசியலை முன்னெடுத்து வருகின்றோம்.

எமது பிரிவினைவாத அரசியல் நகர்வுகளே இன்று வரையில் தீர்வு ஒன்றை சிந்திக்க முடியாத நிலைமைக்கு தள்ளியுள்ளது. இவற்றில் இருந்து விரைவாக மீள வேண்டும். இப்போதும் இவை சாதாரண பிரச்சினைகள் என கருதினால் பாரிய அழிவில் முடிவடையும்.

புகழைத் தேடும் அரசியல் பயணம் நாட்டுக்கு ஒரு போதும் பொருந்தாது. ஆனால் இன்று இலங்கை இந்த நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. அதற்கு விருப்பு அரசியல் கொள்கையே பிரதான காரணமாகும். இன்று இலங்கையில் மூன்று அரசியல் செயற்பாடுகள் உள்ளன.

பாராளுமன்ற அரசியல், மாகாணசபை அரசியல், பிரதேசசபை அரசியல் என மூன்று அரசியல் உள்ளன. ஆனால் இன்று அவை அனைத்தும் ஒன்றாக மாறியுள்ளன. இதில் இருந்து எம்மால் விடுபட முடியாத நிலையில் உள்ளோம். இப்போது இவற்றை மாற்றியமைக்க வாய்ப்பு கிடைத்துள்ளது. இனவாதம் என்பதை விடுத்து இன ஐக்கியத்தில் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் முன்செல்ல வாய்ப்புகள் அமைந்துள்ளன. நாம் எமது நாட்டுக்காகவும் மக்களுக்காகவும், நாட்டின் வளங்களுக்காகவும் அரசியல் செய்கின்றோம். இனிவரும் இளம் அரசியல் பரம்பரையும் இதனை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்பதே எம் அனைவரதும் எதிர்பார்ப்பாகும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# எமர்ஷனை எதிர்த்ததால் விஜயதாஸவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

## விமல் வீரவன்ச விளக்கம்

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படுவது தொடர்பில் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ச விளக்கமளித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் ஆராய்வதற்கு ஐக்கிய நாடுகளின் பிரதிநிதியான பென் எமர்ஷன் இலங்கை வந்திருந்தார்.

இதன்போது, இலங்கையின் உள் விவகாரங்களில் சர்வதேசம் தலையிடக் கூடாதென நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கான முயற்சிகள் தற்போது மேற் கொள்ளப்படுவதாக விமல் வீரவன்ச கூறியுள்ளார். (இ-3)



# பொலித்தீன் தடையால் 345,000 பேர் பாதிப்பர்

செப்டெம்பர் முதலாம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படவிருக்கும் பொலித்தீன் தடையால், 345,000 பேர் பாதிக்கப்படவுள்ளனர். அவர்கள் தங்களுடைய தொழிலை இரவோடு இரவாக, இழப்பர் என்றும் 45 ஆயிரம் பேர் நேரடியாகப் பாதிக்கப்படவுள்ளனர் என்றும் அகில இலங்கை பொலித்தீன் உற்பத்தியாளர்கள் மற்றும் மீள் சுழற்சி சங்கத்தின் தலைவர் அனுரா விஜயதுங்க சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தத் தடையானது, இலங்கையில் சில்லறைப் பொருளாதாரம், ஏற்றுமதி மற்றும் கழிவகற்றல் ஆகியவற்றிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் சாத்தியக் கூறுகள் உள்ளன என்றும்அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அகில இலங்கை பொலித்தீன் உற்பத்தியாளர்கள் மற்றும் மீள் சுழற்சி சங்கத்தின் தலைவர் அனுரா விஜயதுங்க தலைமையிலான 300 இற்கும் மேற்பட்ட உற்பத்தியாளர்கள், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீனையும் அமைச்சின் உயர் நிலை உத்தியோகத்தர்களையும் சந்தித்து, பொலித்தீன் தடையால் தாம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்பில், பல தரத்திலும் இருக்கும் கைத்தொழில் இயக்குநர்கள் 300 பேர் நாடு பூராகவும் உள்ள 800 உயர் அடர்த்தி பொலீத்தின் தொழிலை பிரதிநிதித்துவப்படுத்துவோரும் பங்கேற்றிருந்தனர்.

இலங்கையில், வருடாந்த பொலித்தீன் உற்பத்தியில் 80 சதவீதமானவை உயர் அடர்த்தியில் High-density polyethylene (HDPE) உள்ளன. மேலும் ஏனைய 20 சதவீதமானவை குறைந்த அடர்த்தியில் Low-density polyethylene (LDPE) உள்ளன. LDPE ஐ விட HDPE இன் உயர் வலு காரணமாக அவை சுற்றாடலுக்கு தீங்கு விளைவிப்பதாகக் கருதப்படுகிறது.

வருடாந்தம் 40 மில்லியன் HDPE பொலித்தீனை உற்பத்தி செய்யப்படுகின்றது. இது செப்டெம்பர் முதலாம் திகதி யிலிருந்து தடை செய்யப்படுகிறது. வருடாந்த HDPE பொலித்தீன் உற்பத்தியின் பெறுமதி 12.87 பில்லியன் ரூபாயாகும் என்றும் இந்தச் சந்திப்பின் போது சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-3)

# மாகாண சபைத் தேர்தல் சட்டத்திருத்தம் சிறுபான்மையினருக்கு பெரும் அநியாயம்

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தி

இன்னும் ஓரிரண்டு மாதங்களில் முடிவடையவுள்ள மாகாண சபைகளையும், அடுத்த வருடம் முடிவடையவுள்ள மாகாண சபைகளையும் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் முயற்சியில் நல்லாட்சி அரசாங்கம் ஈடுபடுவது, சிறுபான்மை மக்களுக்கு செய்யும் பெரும் அநியாயமும் துரோகமுமாகும்" என, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய கொள்கைப் பரப்புச் செயலாளர் யூ.எல். எம்.என். முபீன் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில், அவர், நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருந்த அறிக்கையில்,

"செப்டெம்பர் மாதத்தில் முடிவடையவுள்ள கிழக்கு மாகாண சபை, சப்ரகமுவ மாகாண சபை மற்றும் வட மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தலையும், ஊவா மாகாண சபை தவிர்ந்த ஏனைய மாகாண சபைகளின் தேர்தல் நடத்தப்படும் காலங்களை இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலங்களுக்கு ஒத்திவைக்கப்படுவதற்கான வர்த்தமானி அறிவித்தலை, நல்லாட்சி அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

"புரையோடிப்போன இனப் பிரச்சினைத் தீர்வின் ஒரு வடிவாகவே, மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. மத்தியில் குவிந்துள்ள அதிகாரத்தை, ஓரளவுக்கேனும் மாகாண மட்டத்தில் பரவலாக்கும் செயன்முறையாகக் காணப்படும் மக்களின் உரிமை இது.

"இதை நாடாளுமன்றம் கையகப்படுத்தி தான் நினைக்கின்ற திகதியில் மாகாண சபையைக் கலைப்பதற்கான அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை, தோற்கடிக்க வேண்டும்.

"சிறுபான்மை மக்களின் உரிமையை உறுதிப்படுத்த, சிறுபான்மைச் சமூகத்தைப் பிரதிநிதிப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வர வேண்டும்.

"நல்லாட்சி கதா நாயகர்களின் கட்சிகள், தேர்தலில் தோல்வி அடையும் என்பதற்கான காரணத்தை மனதில் வைத்து, தேர்தலை ஒத்திப்போட முயலுவதாக மக்கள் அபிப்பிராயப்படுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராண கலாசாரமும் ஈழத்தமிழர் பண்பாடும்



முனைவர்
மனோன்மணி சண்முகதாஸ்

தமிழிலே தோன்றிய இலக்கியங்களில் கம்பராமாயணமும் கந்தபுராணமும் இரு வகை வழிபாட்டின் விளக்க நூல்களாக இன்று விளங்குகின்றன. கந்தபுராணம் முருக வழிபாட்டின் விளக்கம் கூறுகிறது. கம்பராமாயணம் திருமால் வழிபாட்டின் விளக்கம் கூறுவது. இவ்விரு வகை வழிபாடு பற்றிய விளக்க நூலாக இவற்றுக்கு முன்னே எழுந்த பரிபாடல் காலத்தால் முந்தியது. எனினும் அந்நூல் பாமர மக்களிடையே பெரிதும் செல்வாக்குப் பெறவில்லை. கம்பராமாயணம் தோன்றுவதற்கு முன்னரே கந்தபுராணம் தோன்றிவிட்டது. அது ஈழத்திலே மக்களிடையே பெரிதும் செல்வாக்குப் பெற்றிருந்ததை இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை வருமாறு பதிவு செய்துள்ளார்.

“கந்தபுராணத்துப் பிறப்பிடம் கந்தசுவாமியின் திருவருள் பெருகும் காஞ்சிமாநகரமேயாயினும் அதனைப் பிள்ளை மையப்பருவத்திலிருந்தே பேணுகிற முறையிற் பேணி வளர்த்தெடுக்கும் தவவிசேடம் படைத்தது ஈழம் சிறப்பாக யாழ்ப்பாணம்”

இக் கூற்று யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராண கலாசாரம் என்று குறிப்பிடுவதற்கு ஓர் அடிப்படையாக அமைந்துள்ளது. இன்றுவரை யாழ்ப்பாணத்தில் நிலவிவரும் முருகவழிபாட்டு நடைமுறைகளும் இதற்கு உறுதுணையாக உள்ளன.

‘கலாசாரம்’ என்னும் வடமொழிச் சொல் ‘பண்பாடு’ என்னும் தமிழ்ச் சொல்லுக்கு உரிய சொல்லாக இன்று பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது. கலாசாரம் என்ற சொல் கலாச்சாரம் எனவும் பயன்பாட்டில் உள்ளது. கந்தபுராணம் என்னும் முருகன் அருட் சிறப்புக் கூறும் நூல் யாழ்ப்பாணத்து மக்களி டையே வழிபாட்டுநிலையிலே இணைவதற்கு நாவலர் பெரிதும் துணை நின்றார். குறிப்பாக ஈழத்தில் முருக வழிபாடு பண்டையமலைத்தெய்வவழிபாடாகவே நில வியது. முருகப் பெருமானின் வேலை வழிபடும்நடைமுறை பேணப் பட்டு வந்தது. நாவலர் காலம் பிற சமய வழி பாடு பரவிய காலம். சைவ வழிபாட்டை மேற்கொண்டவர்கள் பிற சமய வழிபாட்டால் மனம் மாறிய காலம். சைவ வழிபாட்டுமரபுகள்பொருளற்றவையென்ற கருத்துத் தோன்றி மக்கள் மனம் மயங்கிய காலம். தமது முன்னோரது வழிபாட்டு மரபு பயனற்றது என முடிவு செய்து பிற சமய வழிபாடு உடனடியாகப் பயன்தர வல்லது என நம்பிய காலம். இந் நிலையில் நாவலர் தமிழ் மக்களை நெறிப் படுத்த பணி செய்தார். மக்களை நல்வழிப்படுத்த கந்தபுராணம் பற்றிய அறிவூட்டலே தக்கது என எண்ணினார்.

ஈழத்தவர் பண்பாடு கந்தபுராண கலாசாரம் என்று சிறப்புப் பெயரால் குறிப்பிடப்படுவதற்கு நாவலரின் சமயப் பணி அணியாக நின்றது. மனித வாழ்வை நெறிப்படுத்த வல்லது வழிபாடே. சைவ புராண நூல்களைப் படித்தல், கேட்டல், சிந்தித்தல் என்னும் மூன்று செயற்பாடுகளும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் பேறுகளை அடைய வழி செய்யும். எனவே நாவலர் வழிபாடு நடைபெறும் கோயில்களிலே பண்டைய நல்லுரை செய்யும் மரபைப் புராணபடன மரபாகத் தொடங்கினார்.

பண்டைய இலக்கியங்களிலே மக்களை நல்லாற்றுப்படுத்தக் கற்றோர் உரையாற்றிய குறிப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அப்பழைய மர பின் புதிய களச் செயற்பாடாக மக்கள் வழிபாடு செய்யக்கூடு கின்ற கோயில்களில் புராண படனம் தொடரலாயிற்று.

இறைவனடி சேர்வதே வழிபாட்டின் பெரும்பேறாகும். இதனைச் சிவஞான சித்தியார் வருமாறு குறிப்பிட்டுள்ளது.

‘ஞானநூல் தனை ஓதல் ஓது வித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்றா
ஈன மில்லாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடை விக்கும் எழில் ஞான பூசை’

ஓதல், ஓதுவித்தல், கேட்பித்தல், கேட்டல், சிந்தித்தல் என்னும் ஐந்து செயற்பாடுகளையும் மக்கள் செய்வதற்குப்புராண படனமரபுபெரிதும் துணை செய்தது.

யாழ்ப்பாணத்தில் புதிய கல்வி நெறியான ஆங்கிலக் கல்வியும் மேலைத்தேயப் பண்பாடும் விரைவாகப் பரவும் சூழ்நிலை ஏற்பட்ட போது அதனை மக்கள் பின்பற்ற விழைந்தனர். இந் நிலையால் யாழ்ப்பாணத்துத் தமிழர் பண்பாடு வேகமாகச் சீர்குலையலாயிற்று. முன்னோர் பேணிய மரபான வாழ்வியல் புறம் தள்ளப்பட்டது. புதிய நாகரிக வாழ்வியல் பலராலும் விரும்பப்பட்டது. இந் நிலையில் யாழ்ப்பாண மக்களை நெறிப்படுத்த ஒரு புதிய ஆற்றுகை தேவைப்பட்டது. நாவலர் அதை முன்னின்று செய்தார். கந்தபுராணம் என்னும் செய்யுள் நூலை உரை நடை நூலாக்கினார். இந் நூல் தமிழ்ப் புலமையற்ற பொதுமக்களும் அதைப் படிக்க வழி செய்தது. எனினும் படிப்பறிவற்ற மக்களுக்குப்புராணபடனமேதுணையாக இருந்தது. குறிப்பாக பெண்களுக்கு அறிவூட்ட இது பெரிதும் உதவியது. கேள்வியறிவு மூலம் கந்த புராணம் பற்றிய தெளி வான அறிவை அவர்கள் பெற்றுக் கொண்டனர். பண்பாடுபேணும்பெண்கள் தமது செயற்பாடு களைச் சிறப்பாக செய்தனர். கோயில்களிலே மூன்று மாதங்கள் நடை பெற்ற புராணப் படிப்பில் அவர்கள் ஆர்வமாக பங்கு கொண்டனர். தாம் கேட்ட செய்திகளை நன்கு உள்வாங்கி குடும்பப் பணிகளைச் செய்தனர். பலருக்குக் கந்தபுராணச் செய்யுள்கள் மனப்பதிவாகின. அவற்றுக்கான உரை விளக்கமும் இணைந்து பதிவாகின. தாய்மார் வழிபாட்டு நெறிகளைப் புகட்ட வல்ல நல்லாசிரியர்களாகினர். பண்பாட்டு நடைமுறைகளான உணவு, உடை, உறையுள்என்றமூன்று தளங்களிலும் தூய்மையும் அழகும் பேணப் பயிற்றினர். குறிப்பாக மேலைத்தேய ஆடைக்கும் தமிழர் மரபான ஆடைக்குமுள்ளவேறுபாட்டை உணர்த்த வழிபாட்டு ஆடை என்ற மரபைப் பயிற்றினர். உணவு நிலையிலும் வழிபாட்டுக்காலங்களில்புலால்உணவைத் தவிர்த்தனர். விரதமிருந்து வழிபாடு செய்யும் மன வுறுதியைக்கடைப் பிடித்தனர்.

கந்தபுராணம் திருக்கோயில்களிலே படிக்கப்படும் மூன்று மாதகாலமும் கோயிற் சூழல் மட்டுமன்றி ஊர் முழுவதுமே தூய்மை பேணப்பட்டது. வீதிகள் துப்புரவாக இருந்தன. வீடுகள் தூய்மையாக இருந்தன. மண்வீடுகள்சாணத்தால்மெழுகப்பட்டன. மண்சுவர்களுக்கு செம்மண் தீட்டப்பட்டது. திண்ணைகளுக்குச் சுண்ணாம்பால் கோலம் செய்யப்பட்டது. ஆடைகளில் தூய்மையும் மரபும் பேணப்பட்டது. வழிபாட்டு நடைமுறைகள் யாவும் ஒழுங்காகப் கடைப்பிடிக்கப்பட்டன. ஊரே அழகுப் பொலிவுடன் சிறக்க எல்லோரும் இணைந்து பணியாற்றினர். மூன்று மாதம் சிறப்பாக நடக்கும் இப்பணி ஆண்டு முழுமையும் தொடர அதுவே யாழ்ப்பாணத்துக் கந்தபுராணக் கலாசாரமாக விதந்து பேசப்படும் பண்பாடாக நிலைத்திருந்தது.

இப்பண்பாட்டின் பேணுகை யாழ்பாணத்துப் பெண்களின் பணியாகவே இருந்ததைப் பண்டிதமணி வருமாறு கூறியுள்ளார்.

“பெண்களின் உதிரத்தில் கந்தபுராணம் இரண்டறக் கலந்திருந்தது அவ்வாறாய உதிரத்தில் உதித்தவரே நாவலர் பெருமான். மேன்மை கொள் சைவ நீதி என்ற கந்த புராணத் தொடர் நாவலர் பெருமானின் குறிக்கோள் மந்திரம்” எனவே கந்தபுராண கலாசாரம் என்பது தமிழர் பண்பாடு பற்றிய ஒரு வரையறையாக உள்ளது. அதனை மாற்றப் பல செயற்பாடுகள் நடக்கின்றன. இது இளம் தலைமுறையினருக்கு வாய்ப்பாக உள்ளது. மூத்தோர் நிலைதடுமாறி உள்ளனர். கந்தபுராணம் என்பது ஒரு தத்துவ நூலாகவே பேசப்படும் நிலை உருவாகியுள்ளது. அது யாழ்ப்பாண மக்கள் வாழ்வியலுக்கு ஒரு வழிகாட்டி நூலென்பது எடுத்துரைக்கப்பட வேண்டும்.

சிறப்பாக நல்லைக் கந்தன் உற்சவ காலம் கந்த புராண படன காலம் போலப் பண்பாடு பேணப் பயிற்றும் காலமாக உள்ளது. ஆனால் இன்று அதற்குப் பல இடர்கள். வழிபாட்டை விட மக்கள் வணிகப் பரம்பல் செய்யவே விழைகின்றனர். தூய்மை பேணல், உணவுப் பகிர்வு என்பன வலுவிழந்து விட்டன. யாழ்ப்பாணத்தில் கந்தபுராணம் பற்றிய விளக்கம் ஆழமாக எடுத்துரைக்கப்பட வேண்டும். அது மக்கள் வாழ்வைச் செம்மைப்படுத்தும் வழிகாட்டி நூல் என்பதை எல்லோரும் உணர நாம் இணைந்து பணி செய்ய வேண்டும். கோயில் சூழலில் கந்தபுராணம் பற்றிய விளக்கம் எல்லா நிலைகளிலும் அறிவுறுத்தப் பட வேண்டும். அப்போது தான் கந்தபுராண கலாசார மும் ஈழத்தமிழர் பண்பாடும் ஒன்று என்பது தெளிவாய் உணரப் படும். இதற்கான செயற்பாடுகளில் எல்லோரும் இணைய வேண்டிய காலம் இதுவே.

## தெய்வீகச் சிறப்பு நிகழ்வில் இன்று ‘மெய்யடியார்கள் மாண்பு’ சொற்பொழிவு

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயமஹோற்சவத்தை முன்னிட்டு உலக சைவத் திருச்சபை நடத்தும்தெய்வீகச் சிறப்பு நிகழ்வுகளின் 19 ஆம் நாள் நிகழ்வு இன்று செவ்வாய்க் கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 7.45 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் சைவப் புலவர் சிவஸ்ரீ கதிர் குமாரசுவாமி சுமுகலிங்கம் சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெறும். இதில் ‘மெய்யடியார்கள்மாண்பு’ எனும்தலைப்பில்சைவப்புலவர்சைவநெறிச் சன்மார்க்கர் வே. சிவராசா சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## தொடர் இசைப் பேருரையில் ‘வாலி மோட்சம்’ இன்று

நல்லூர் கந்தப் பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவமகாசபை நடத்தி வரும் தெய்வீக இசைப் பேருரை (கதாபிரசங்கம்) இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லை ஆதீன குரு மூர்த்த மண்டபத்தில் இடம்பெறும் கந்தபுராணம் பற்றிய தொடர் இசைப் பேருரையில் ‘வாலி மோட்சம்’ எனும் தலைப்பில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி கலா[illegible] சர்மா கதா பிரசங்கம் நிகழ்த்துவார். (இ-3)




## இந்துவாக வாழ்வோம்

முருக நாமம் கூறு மனமே ... நல்லை
முருக நாமம் கூறு தினமே - ஓம்
முருகா... முருகா... முருகா... ஓம்
முருகா... முருகா... முருகா

தாயும் முருகன் தான் தந்தையும் முருகன் தான்
ஞானம் உரைத்தவனும் முருகன் தான்
காண்பதுவும் முருகன் தான் காட்சி எலாம் முருகன் தான்
அண்ட சராசரமும் முருகன் தான் (முருக நாமம்)

திருமதி. சாந்தா வீரசிங்கம்
சின்மயாமிஷன்

## நல்லைக் குமரா

பச்சை மயிலேறி பக்தர்களுக்கு அருள் பாலிக்கும்
பரமன் திருக்குமரா
நாடியவர் நலம் காக்கும் நல்லைக் கந்தா
நமக்கு ஓர் தீர்வு தா முருகா
கார்த்திகை நன் நாளில் எம் குறை கேள் முருகா
கனிவான பதில் தா நல்லைக் குமரா

சாயி ஆனந்தன்
யாழ்

## எழுந்துனையே சேர மனம் மாறும்

பல்லவி
சேவலும் கூவியெழும் சேதியொன்று கூறும்
சேய்நாமும் எழுந்துனையே சேரமனம் மாறும்

அனுபல்லவி
காவடிகள் நேர்த்தியுடன் காவிவரும் அடியார்க்கு
காவலனே கந்தாவுன் கனிவொன்றே-விடிவுதரும்
-சேவலும் கூவியெழும்

சரணம்
பட்டாடை பொட்டோடு பூக்குவிந்த தட்டும்
பாவையரின் கரத்து பழம்தேனாய் சொட்டும்
எட்டும் திசையறியும் ஏறியவுன் கொடியும்
எம் முருகா! நின்னருளால் எமது மனம் மாறும்.
-சேவலும் கூவியெழும்

கலைமாமணி வே.ஆர்.திருத்துவராஜா

## கார்த்திகேயனே வாருமையா

அலங்காரக் கந்தனே நல்லூரின் வேலவனே
அருள் மழை பொழியவென வாருமையா
நல்லூரின் நாயகனே சரணம் ஐயா
நன்மைகள் பெருகவென ஆறுமுகனே வாருமையா

ஆறுபடை வீடுடைய அழகிய குமரனே
ஆனந்தம் தந்திடும் சிவனின் மைந்தனே
நல்லையம்பதி வாழ் அழகிய கந்தனே
நாட்டைக் காத்திடவே முத்துக்குமரனே வாருமையா

மயில் வாகனனே மனதை நிறைப்பவனே
மண்வளம் சிறக்கவே மயிலேறி வாருமையா
சூரன் சிரம் வீழ்த்தி தேவரைக் காத்தவனே
சூழல் செழிப்புறவென கார்த்திகேயனே வாருமையா

அரியாலையூர் கு. யசிதீபன்

## நல்லைக்கந்த சந்தப் “பா”

கண்ணி யம்நெறி காற்றிற் போகவே
கண்ட சீரழி வெங்கு மாகவே
தண்ணி யாய்க்கலா சாரப் பண்புகள்
தரையி லோடியே சகதி யானதே
எண்ணித் தாக்குமிக் கொடுமை நீக்கிட
இறைய னேயுனை யன்றி யாருளர்
நண்ணிக் காத்திடு ஞான பண்டிதா
நம்பி னேனுனை நல்லைக் கந்தப்பா!



கலாபூஷணம், சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**ஷிராந்தி, யோஷிதவிடம் இன்று வாக்குமூலம்**

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷ மற்றும் மகன் யோஷித ராஜபக்ஷ ஆகியோர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாவதற்கான திகதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த இருவரும் இன்றும், நாளையும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகவுள்ளனர். ரக்பி வீரர் வசீம் தாஜுடீன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் ஒன்றை பெற்றுக் கொள்ள ஷிராந்தி ராஜபக்ஷ மற்றும் யோஷித ராஜபக்ஷ ஆகியோரை நேற்று குற்றப்புலனாய்வுதிணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அதிபர், ஆசிரியர்களின் சம்பள நிலுவையை வழங்குவதாக பிரதம செயலர் உறுதியளிப்பு

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தகவல்

வடக்கு மாகாணத்தில் கடமையில் உள்ள மற்றும் ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசி ரியர்களுக்கான ஏறத்தாழ 400மில்லியன் ரூபா (நாற்பது கோடி) சம்பள நிலுவையை வழங்க வேண்டுமென்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பல தடவைகள் கோரி க்கை முன்வைத்து ஏமாற்ற மடைந்து இறுதியாக வடக்கு மாகாண பிரதம செயலாள ரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு பிரதம செய லாளர் சாதகமான பதிலை வழங்கியுள்ளார் என்கின்ற செய்தியை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள அதிபர்கள், ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைகள் எந்தவொரு காலத்திலும் இல்லாத அளவுக்கு மோச மாக உயர்ந்துள்ளது. ஒவ் வொரு ஆசிரியருக்கும் கல்வி அமைச்சு கடனாளியாகவே உள்ளது. யுத்தகாலங்களிலும், அதற்கு முந்திய காலங்களிலும் இத்தகைய நிலை வடக்கு- கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டதில்லை.

மாகாண சபைகள் அமைக்கப்பட்டதன் பின்னர் இத்தகைய நிலை உருவாகியிருப்பது வேதனையான விடயம் என்பதற்கு அப்பால் வெட்கக் கேடான விடயமாகும். ஊதியத்தைச் சீராக வழங்காமல் எவ்வாறு உத்தியோகத்தரிடம் "வேலையைச் சரியாகச் செய்யுங்கள்" என்று சொல்ல முடியும்.

இந்நிலையில் வடக்கு மாகாண பிரதம செயலாளரிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மீள வலியுறுத்தி, ஒவ்வொரு அதிபர், ஆசிரியருக்கும் வழங்க வேண்டிய சம்பள நிலுவைகள் தொடர்பான விடயங்களை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வழங்கி யதன் அடிப்படையில் பிரதம செயலாளர் மத்திய அரசாங்கத்துடன் கதைத்து முன்னுரிமை அடிப்படையில் நிலுவைகள் வழங்குவதற்கான உறுதியை வழங்கியுள்ளார்.

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள இத்தகைய அசாதாரண சூழ்நிலைக்கு இரண்டு மாகாண அமைச்சுகளும் விரைந்து நடவடிக்கை எடுக்கவில்லையெனில் மாகாண அமைச்சுக்க ளின் நிலை கேள்விக்குறி யாகும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-3)

## நல்லைக்குமரன் வெள்ளி விழா மலர்-2017

## வெளியீட்டு விழா

காலம்:- 15.08.2017 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி
இடம்:- நாவலர் கலாசார மண்டபம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தலைவர்:- திரு.பொ.வாகீசன் (சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும், யாழ். மாநகர ஆணையாளரும்)
பிரதம விருந்தினர்:- **திரு.இ.இளங்கோவன்** (கௌரவ ஆளுநர் செயலாளர், வடக்கு மாகாணம்)
சிறப்பு விருந்தினர்கள்:-
♦ **திரு.அ.உமாமகேஸ்வரன்** (பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்)
♦ **Dr. த.சத்தியமூர்த்தி** (பணிப்பாளர், யாழ்.போதனா வைத்தியசாலை)

**நிகழ்ச்சி நிரல்**

| | |
|---|---|
| 09.00-09.05 | இறைவணக்கம்- தேவாரம் **மாணவி செல்வி அ.ஆரபி** |
| 09.06-09.10 | வரவேற்புரை **திரு.பு.ஆறுமுகதாசன்** (செயலாளர், சைவசமய விவகாரக்குழு) |
| 09.11-09.20 | தலைமையுரை **திரு.பொ.வாகீசன்** (சைவ சமய விவகாரக் குழுத் தலைவரும், மாநகர ஆணையாளரும்) |
| 09.21-09.50 | ஆசியுரை<br>1. **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்** (நல்லை ஆதீன முதல்வர்)<br>2. **சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்** (பீடாதிபதி, வீணாகான குருபீடம்)<br>3. **ஜாக்ரத சைதன்யா சுவாமிகள்** (வதிவிட ஆச்சாரியார், சின்மயாமிஷன், யாழ்ப்பாணம்) |
| 09.51-09.55 | பிரதம விருந்தினர் உரை |
| 09.56-10.05 | கௌரவிப்பு, **செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்** (தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை, உபதலைவர் அகில இலங்கை இந்துமாமன்றம்) அவர்களுக்கு **யாழ். விருது வழங்கலும், பொற்கிழி வழங்கலும்** |
| 10.06-10.15 | ஏற்புரை |
| 10.16-10.25 | மலர் வெளியீட்டுரையும் வெளியீடும் **திரு.ந.விஜயசுந்தரம்** (கௌரவ பதிப்பாசிரியர்) முதற்பிரதி பெறுவோர்- தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் |
| 10.26-10.45 | ஆய்வுரை **பேராசிரியர் கு.மிகுந்தன்** (பீடாதிபதி, பட்டப்பின் படிப்புக்கள் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்) |
| 10.46-11.05 | **சைவசமய விவகாரக்குழுவின் முன்னை நாள் அங்கத்தவர்களைக் கௌரவித்தல்** |
| 11.06-11.15 | **விசேட பிரதிகள் வழங்கல்** |
| 11.16-11.35 | **பரிசளிப்பு-2017 இல் யாழ். மாவட்ட பாடசாலைகளில் தரம் 6- தரம் 11 வரையான வகுப்பு மாணவர்களுக்கென நடத்தப்பட்ட சைவநெறிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலானது.** |

பயனுள்ள ஆக்கங்கள் பலவற்றைத் தாங்கி நறுமணம் பரப்பும் மலரினைப் பெற்றுப் படித்துப் பயன்பெறும் வண்ணம் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

**சைவசமய விவகாரக் குழு**
**யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.** (இ

**AACHE HOT FOOD AND FOOD FACTORY KAITHADY**
**TP : 021 205 7455**

- சகல வைபவங்களுக்குமான உயர்தர உணவுகளை ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
- வட மாகாணத்தில் அதிகூடிய உணவு உற்பத்தியாளர்கள்.
- வடக்கு முழுவதற்கும் இலகுவான விநியோக முறை.
- மிக மிக சுத்தமான கைதடி உணவுத் தொழிற்சாலையைப் பார்வையிட்டு உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.




**ஆச்சி (FOOD FACTORY) ஆச்சி**
**ஹொட் பூட் ரெஸ்ரோரன்ஸ்**
கைதடி கிழக்கு, கைதடி. 147, பலாலி வீதி, திருநெல்வேலி.
**TP:-021 222 5001**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்

## கமலின் நக்கல்



50 நாட்களை கடந்துள்ள பிக்போஸ் நிகழ்ச்சியில் இருந்து நடிகர் சக்தி வெளியேற்றப்பட்டார். அவரை பின்பு மேடைக்கு அழைத்து பேசிய கமல்ஹாசன், **'Trigger'** என்ற வார்த்தை பிரபலமானது பற்றி கூறினார்.

அந்த பெயரில் தான் எந்த நடிகரும் இல்லையே, அதையே உங்கள் பெயராக வைத்துக்கொள்ளுங்கள் என கலாய்த்தார். (அப்போது அரங்கத்தில் இருந்தவர்கள் நீண்ட நேரம் கைதட்டினர்.) அதை கேட்ட சக்தி வேணாம் சேர்... யாரோ ஸ்டண்ட் மாஸ்டர்னு நெனச்சுக்குவாங்க என்று கூறி சமாளித்தார்.

## வாய்ப்பிழந்த பிந்து



பிக்போஸ் வீட்டில் புதுவரவாக இரண்டு வாரங்களுக்கு முன்பு வந்தார் நடிகை பிந்து மாதவி. அதற்குமுன் அவர் விமலின் மன்னர் வகையறா என்ற படத்தில் ஒரு முக்கிய ரோலில் நடிப்பதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார்.

ஆனால் அவர் தற்போது பிக்போஸ் சென்றுவிட்டதால் படப்பிடிப்பில் கலந்துகொள்ளமுடியாத சூழ்நிலையே உள்ளது என்பதால் அவரை படத்தில் இருந்து நீக்கி விட்டதாக இயக்குநர் பூபதி பாண்டியன் தெரிவித்துள்ளார்.

## சம்பளம்



ஓவியாவை வைத்து தான் பிக்போஸ் செம்ம ஹிட் அடித்தது. அதன் TRP-யை நாங்கள் சொல்லி தெரியவேண்டியது இல்லை, ஆனால், தற்போது அவர் மன அழுத்தம் காரணமாக அதிலிருந்து விலகினார்.

இதைத் தொடர்ந்து தன் நண்பர்களுடன் சுற்றுலா சென்று பொழுதை கழித்து வருகின்றார், இந்நிலையில் ஓவியா இல்லாமல் பிக்போஸ் TRP மிகவும் குறைந்துவிட்டது.

இதனால், அந்த தொலைக்காட்சி முன்னணி நடிகைகள் பலரையும் பிக்போஸிற்கு வர முயற்சி செய்து வந்தது. ஆனால், ஓவியா அளவிற்கு ரசிகர்கள் வேறு யாரையும் விரும்புவார்களா? என்றால் சந்தேகம் தான்.

அதனால், ஓவியாவிடமே திரும்ப வர தொலைக்காட்சி கோரிக்கை வைத்துள்ளதாம், ஒரு நாளைக்கு ரூ 5 இலட்சம் வீதம் சம்பளமாக தருவதாகவும் பேசி வருகின்றார்களாம்.

## வெளியேற்றம்



BiggBoss நிகழ்ச்சியில் அண்மையில் ஷக்தி வெளியேற்றப்பட்டார். இதனால் அந்த வீட்டில் இருப்பவர்கள் மிகவும் வருத்தத்தில் இருந்தனர்.

ஷக்தி வெளியேற்றத்திற்கு பிறகு கண்டிப்பாக வீட்டில் சில அதிரடிகள் நடக்கும் என ரசிகர்கள் எதிர்பார்த்தது தான். அந்த வகையில் எலிமினேஷன் தேர்வு எல்லோர் முன்னிலையிலும் நேரடியாக நடக்கிறது.

அதில் ஒட்டுமொத்தமாக BiggBoss குழுவினர் காயத்ரி வெளியேற வேண்டும் என்பது போல் ஓட்டுப்போடுவதாக அந்த வீடியோ காட்டப்பட்டுள்ளது. கண்டிப்பாக ஒளிபரப்பாக இருக்கும் நிகழ்ச்சியில் சில அதிரடிகள் நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கதறிய காயு




இந்த வாரம் பிக்போஸ் நிகழ்ச்சியில் இருந்து வெளியேற்றப்படுவதற்காக ரைசா தவிர மற்ற அனைவரும் நோமினேட் செய்யப்பட்டிருந்தனர்.

மக்கள் காயத்ரியை வெளியேற்ற நினைத்த நிலையில், டாஸ்க் கொடுத்து அவரை பிக்பாஸ் காப்பாற்றியது பெரிய சர்ச்சையானது. இந்நிலையில் நடிகர் சக்தி இந்த வாரம் வெளியேற்றப்படுவதாக கமல் அறிவித்தார்.

ஒருவேளை சக்தி வெளியேறினால் நான் தனிமைபடுத்தப்படுவேன், "நான் ரௌடியாக மாறிவிடுவேன்" என காயத்ரி தெரிவித்திருந்தார். ஆனால் சக்தி வெளியில் சென்ற பிறகு நீண்ட நேரம் கதறி கதறி அழுதார் காயத்ரி.

அதனால் வரும் நாட்களில் காயத்ரி என்ன செய்வார் என்று தெரியாமல் ரசிகர்கள் தற்போது குழம்பியுள்ளனர்.

## சாவுங்கையா



கடைசியாக ஷக்தி BiggBoss நிகழ்ச்சியில் இருந்து வெளியேறியதில் இருந்து போட்டியாளர்கள் இடையே பிரிவு ஏற்பட்டிருக்கிறது.

ஷக்தி போன பிறகு மிகவும் வருத்தத்தில் இருப்பவர் காயத்ரி. அதோடு அவர் குடும்பத்தில் இருக்கும் ரைசா மீது கடும் கோபத்தில் உள்ளார்.

இந்த நிலையில் சினேகன் மற்றும் ரைசா இருவரும் காயத்ரி தன் மீது கோபமாக இருக்கிறார் என்று அவரவர் பேசிக்கொள்கின்றனர். கடைசியில் ரைசா பிரச்சினையால் எல்லோரும் சாவுங்க, போங்கய்யா என்று கோபமாக கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் நாடகங்களைத் தவிர்த்து
# எமது மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்
## டக்ளஸ் எம்.பி. வலியுறுத்து

அரச தரப்புகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் மாறி மாறி அரசியல் நாடகங்களை அரங்கேற்றிக் கொண்டிருக்காமல் எமது மக்களுக்குச் சொந்தமான காணி, நிலங்களை விடுவிப்பதற்கு இதய சுத்தியுடன் முன்வர வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர், வலிகாமம் வடக்கு, கேப்பாப்பிலவு, இரணைதீவு உட்பட எமது மக்களுக்குச் சொந்தமான காணி, நிலங்கள் இன்னும் அம்மக்களது பாவனைக்கு வழங்கப்படாதுள்ள நிலையில், எமது மக்கள் வீதியில் இறங்கிப் போராடி வருகின்றனர். கேப்பாப்பிலவு மக்களின் போராட்டமானது சுமார் 6 மாத காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்தகைய நிலையில் இப் போராட்டங்கள் உரிய தரப்பாரின் அக்கறைக்கு எட்டப்படாமல் இருப்பது எமது மக்களது துரதிர்ஷ்டவசமான நிலைமையாகும்.

எமது மக்களின் காணி, நிலங்களை விடுவிப்போம் என வாக்குறுதிகள் வழங்கி, எமது மக்களின் வாக்குகளையும் பெற்று ஆட்சிக்கு வந்தவர்களும், அவர்கள் ஆட்சி அமைப்பதற்காக அதே வாக்குறுதியை வழங்கி எமது மக்களின் வாக்குகளைப் பெற்று உதவி செய்து, அரசியல் பதவிகளைப் பெற்றவர்களும் இன்று ஆளுக்காள் அரசியல் நாடகங்களை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்களே அன்றி, எமது மக்களின் காணி, நிலங்கள் விடுவிப்பு தொடர்பில் இதுவரையில் எவ்வித மான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டதாக இல்லை.

எமது மக்களுக்கு அவர்களின் காணி, நிலங்களே தேவை அன்றி, வெறும் அறிக்கைகளும், மேடைப் பேச்சுக்களும் அல்ல. எனவே, வெறும் சாக்குப் போக்குகளைக் கூறிக் கொண்டு எமது மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றிக் கொண்டிருக்காமல், எமது மக்களின் காணி, நிலங்களை விடுவித்துக் கொடுப்பதற்கு இவர்கள் முன்வர வேண்டும். எமது மக்களின் பிரச்சினைகள், தேவைகளைத் தீர்க்காமல் வெறும் பதவிகளை மாத்திரம் கட்டிப் பிடித்துக் கொண்டிருப்பதால் அது எமது மக்களுக்கு எவ்விதமான பயனையும் தரப் போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் மேலும் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.(இ-7)

# மரண அறிவித்தல்
## சுரேஸ்குமார் பிரதீப்



பிறப்பு 1993.12.01 இறப்பு 2017.08.11

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுரேஸ்குமார் பிரதீப் 11.08.2017 அன்று இந்தியாவில் காலமானார். அன்னார் சுரேஸ்குமார்- சிவாஜினி தம்பதியின் அன்பு மகனும் பிரியங்கா, பிரசாந் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுரேஸ், ரமேஸ் ஆகியோரின் மருமகனும் சிவராசா-கமலாம்பிகையின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இந்தியா திருவெண்ணாமலையில் இடம் பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மின்சார நிலைய வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(181)

தகவல்
மாமா-ரமேஸ்

# பேரனைத் தீண்டிய பாம்புடன் வைத்தியசாலையில் தாத்தா
## பலரும் பதறியோட்டம்

பேரனைத் தீண்டிய நாக பாம்பை, தாத்தா, தன்பேரன் சிகிச்சை பெற்று வரும் வைத்தியசாலைக்கே எடுத்துச் சென்றமையால், அங்கு பெரும் பதற்றமான நிலைமையொன்று ஏற்பட்டதுடன், வைத்தியசாலையும் அல்லோலகல்லோலப்பட்டது.

வைத்தியசாலைக்கு வந்திருந்தவர்கள் மட்டுமன்றி, தாதியர்களும் வைத்தியர்களும் மற்றும் சிற்றூழியர்களும் பதறியோடி விட்டனர்.

இந்தச் சம்பவம், நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலையிலேயே இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, லக்ஷபான தோட்டத்தில் மூன்று வயது சிறுவனொருவன், வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோது, நாகபாம்பொன்று அவனைத் தீண்டியுள்ளது.

இச்சிறுவன் உடனடியாக லக்ஷபான மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில், தன்னுடைய பேரனை எந்தப் பாம்பு தீண்டியது என்று கேட்டால் என்னசொல்வது என்று தெரியாமல் திக்குமுக்காடிப் போன, சிறுவனின் தாத்தா, அந்தப் பாம்பு சென்ற, புற்றை உடைத்து, பாம்பைப் பிடித்து, ஜாடியில் போட்டுக்கொண்டு, வைத்தியசாலைக்கே சென்று விட்டார்.

வைத்தியசாலைக்கு சென்ற தாத்தா, பேரனின் நலன் குறித்து விசாரித்ததுடன், தன் பேரனைக்கடித்த நாக பாம்பை, வைத்தியரிடம் ஒப்படைப்பதற்காக, ஜாடியிலிருந்து பாம்பை வெளியில் எடுத்துள்ளார்.

அப்போது, அச்சமடைந்த தாதியர்களும், சிற்றூழியர்களும் அங்கு வந்திருந்தவர்களும் சிகிச்சை பெற்று கொண்டிருந்த நோயாளிகளும் பதறியோடினர்.

இதனால், வைத்தியசாலையே சிறிது நேரத்துக்கு அல்லோலகல்லோலப்பட்டது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1163

Search for people, places and things  Nagendram  Home

### கபிலன்




### வசந்தன்




### சியா




### உதயா




### நிந்துஜா




### அனுசன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

## வண்ணத்துப்பூச்சியின் கடைசி ஆசை

அரச மரத்தடியில் எறும்புக் கூட்டம் ஒன்று வாழ்ந்து வந்தது. தங்களுக்குத் தேவையான உணவை மழைகாலத்துக்கு முன்பாகவே சேர்த்து விடுவதற்காக சுறுசுறுப்பாக உழைத்துக் கொண்டிருந்தன எறும்புகள்.

அந்தப் பக்கம் வந்த வண்ணத்துப்பூச்சிக்கு எறும்புகளைக் கண்டதும் ஏனோ வம்பு இழுக்க வேண்டும் என்று தோன்றியது. தன்னுடைய அழகான இறக்கைகளை வேகமாக அடித்துக் கொண்டு பறந்தது.

திடீரென்று நிழல் படிவதையும் வேகமாகக் காற்று வீசுவதையும் கண்ட எறும்புகள் என்னவோ ஏதோவென்று நிமிர்ந்து பார்த்தன.

"அட! வண்ணத்துப்பூச்சியா? நான் ஏதோ பெரிய கழுகு என்றல்லவா பயந்தேன்" என்றது ஒரு சிற்றெறும்பு.

"யாராக இருந்தால் நமக்கென்ன? ஏன் பயப்படணும்? நமக்கு நிறைய வேலை இருக்கு. வண்ணத்துப்பூச்சி கிட்ட அரட்டையடிக்க நேரமில்லை?" என்றது மற்றோர் எறும்பு.

எறும்புகள் தன்னைக் கண்டுகொள்ளாமல் வேலையில் மூழ்கியிருந்ததைக் கண்ட வண்ணத்துப்பூச்சிக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது.

இந்த எறும்புகளுக்குத் தான் யார் என்று காட்ட வேண்டும் என்று நினைத்தது. இன்னும் கொஞ்சம் வேகமாகத் தனது இறக்கைகளை அசைத்தபடி எறும்புக் கூட்டத்துக்கு வெகு அருகில் சென்றது.

சாதாரணமாகக் காற்றடித்தாலே எறும்புகள் பறந்து விடக் கூடியவை. வண்ணத்துப்பூச்சியின் வேகமான சிறகசைப்பு, எறும்புகளுக்குப் புயல் காற்றைப் போலிருந்தது.

எறும்புகள் நிலை தடுமாறின. கையிலிருந்த உணவுப் பொருட்களைக் கைவிட்டன. வரிசை கலைந்தது. பறந்து போய் விழுந்ததில் பல எறும்புகளுக்குக் காயம் ஏற்பட்டன.

சில எறும்புகள் வேகமாகச் சென்று ராணி எறும்பிடம் முறையிட்டன. ராணி எறும்பு வண்ணத்துப்பூச்சிக்கு அருகில் வந்தது. "அழகான வண்ணத்துப் பூச்சியே. எங்களை வேலை செய்ய விடாமல் ஏன் தொந்தரவு செய்கிறாய்? இது சரியில்லையே" என்று அமைதியாகவும் அன்பாகவும் சொன்னது.

"ஏய்! அற்ப எறும்பே! எனக்கு வேறு வேலை இல்லையா? நான் பாட்டுக்குப் பறந்து செல்கிறேன். இதில் உங்களுக்கு என்ன கஷ்டம்?" என்று கிண்டலாகச் சிரித்தது வண்ணத்துப்பூச்சி.

"நீ அருகில் வந்து வேகமாக உன் இறக்கைகளை அசைப்பதால் எங்களால் சரியாக நடக்க முடியவில்லை. பலருக்குக் காயம் ஏற்பட்டுவிட்டது. அதனால் நீ சற்றுத் தள்ளி உன் விருப்பம் போல வேகமாகப் பறந்து செல்லலாமே" என்றது ராணி எறும்பு.

"என்னது! எனக்கு நீ ஆணையிடுகிறாயா? அதெல்லாம் உன் கூட்டத்தோடு வைத்துக்கொள். நான் சுதந்திரமானவன். இங்கேதான் பறப்பேன். உன்னால் முடிந்ததைச் செய்" என்றது வண்ணத்துப்பூச்சி.


தன் கூட்டத்தைப் பார்த்து, "நண்பர்களே! எல்லோரும் புற்றுக்குள் வாருங்கள். சற்று ஓய்வெடுத்துவிட்டுப் பிறகு நம் வேலையைத் தொடங்கலாம்" என்றது ராணி எறும்பு.

எறும்புகள் அனைத்தும் புற்றுக்குள் சென்றன.

"பயந்துகொண்டு ஓடிவிட்டன. எனக்கே வெற்றி" என்று சத்தமாகக் கூறிக் கொண்டே இன்னும் வேகமாகப் பறந்து சென்றது வண்ணத்துப்பூச்சி.

அப்போது இரையைக் குறிபார்த்து வேகமாக வந்து கொண்டிருந்த பெரிய வண்டு ஒன்று. வண்ணத்துப்பூச்சி மீது மோதிவிட்டது.

எதிர்பாராமல் நிகழ்ந்த இந்த விபத்தில் வண்ணத்துப்பூச்சி தன் இறக்கைகளை இழந்து. பொத்தென்று எறும்புப் புற்றுக்கு அருகில் விழுந்தது.



வலியுடன் வண்ணத்துப்பூச்சி பறக்க முயன்றது. ஆனால், பறக்க முடியவில்லை. தொடர் முயற்சியால் சோர்வுற்றது. பாதி மயங்கிய நிலையில் அப்படியே வெயிலில் கிடந்தது.

சிறிது நேரம் கழித்து ராணி எறும்பு தனது ஒற்றர் எறும்பிடம் மேற்பரப்பின் நடமாட்டத்தைக் கண்காணித்து வரச் சொன்னது.

மேலே வந்த எறும்பு, சுற்றும் முற்றும் பார்த்தது. அங்கே வண்ணத்துப்பூச்சியைக் கண்டது. அருகில் சென்று பார்த்தது. நிலைமையை உணர்ந்தது. உடனே தகவல் கூற புற்றுக்குள் விரைந்தது.

"ராணியே! நம்மை பயமுறுத்திய அந்த வண்ணத்துப்பூச்சியின் இறக்கைகள் உடைந்து தனியே விழுந்துகிடக்கின்றன. அதுவும் மயங்கிய நிலையில் இருக்கிறது" என்றது உளவு பார்த்த எறும்பு.

"ஐயையோ! என் மனம் வேதன்ன அடைகிறது. வாருங்கள். நாம் ஏதாவது உதவி செய்ய முடியுமா? என்று பார்ப்போம்" என்று நண்பர்களை அழைத்தது ராணி எறும்பு.

எறும்புகள் விரைந்தன. "ஏதாவது செய்து அந்த வண்ணத்துப் பூச்சியைக் காப்பாற்றுங்கள்" என்று ஆணையிட்டது ராணி எறும்பு.

எறும்புகள் உதவி செய்யத் துடிப்பதைக் கண்ட வண்ணத்துப்பூச்சி, தான் செய்த செயலுக்கு வருந்தியது.

"எறும்புகளே, நான் உங்களைத் துன்புறுத்தினேன். ஆனாலும் என்னைக் காப்பாற்றத் துடிக்கிறீர்கள். என் தவறை உணர்ந்துவிட்டேன். நம்மைப் போன்ற பூச்சி இனங்கள் இறந்து விட்டால் நீங்கள்தான் தூக்கிச் சென்று அடக்கம் செய்ய வேண்டும் என்பதே எனது கடைசி ஆசை" என்றது வண்ணத்துப்பூச்சி. "அப்படியே ஆகட்டும்" என்றது ராணி எறும்பு. அன்றிலிருந்து சகல பூச்சிகள் இறந்தால் எறும்புகள் எல்லாம் சேர்ந்து, தூக்கிச் செல்வது வாடிக்கையாகிவிட்டது.

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

08.2017
15

- 1040-ஸ்கொட்லாந்தின் மன்னன் முதலாம் டங்கன் மக்பெத்துடனான போரில் கொல்லப்பட்டான்.
- 1057-ஸ்கொட்லாந்தின் மன்னன் மக்பெத் மூன்றாம் மால்க்கமுடனான போரில் கொல்லப்பட்டான்.
- 1915 - பனாமா கால்வாய் திறக்கப்பட்டது.
- 1920 - வார்சாவில் இடம்பெற்ற போரில் போலந்து இராணுவத்தினர் சோவியத் படைகளை வென்றனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பான் சரணடைந்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: கொரியா விடுதலை பெற்றது.
- 1947 - முகமது அலி ஜின்னா பாகிஸ்தானின் முதலாவது ஆளுநராகப் பதவியேற்றார்.
- 1947 - இந்தியா பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்று பொதுநலவாய அமைப்பின் கீழ் தனி நாடாகியது. ஜவகர்லால் நேரு முதலாவது தலைமை அமைச்சர் ஆனார்.
- 1948 - தென் கொரியா உருவாக்கப்பட்டது.
- 1950 - அஸ்ஸாமில் நிலநடுக்கம் மற்றும் வெள்ளம் காரணமாக 574 பேர் பலி, 5.000.000 பேர் வீடிழந்தனர்.
- 1977-இலங்கையில் தமிழருக்கெதிரான இனப்படுகொலை நடவடிக்கையான ஆவணிப் படுகொலை ஆரம்பித்தது. 400இற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டு 10,000 பேர் வரை காயமடைந்தனர்.
- 2005 - இந்தோனேசிய அரசாங்கத்துக்கும் ஆச்சே விடுதலை இயக்கத்திற்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஹெல்சிங்கியில் கைச்சாத்தானது.
- 2007 - பெருவில் இடம்பெற்ற 8.0 அளவு நிலநடுக்கத்தில் 514 பேர் கொல்லப்பட்டனர்.

பிறப்புகள்

- 1872-அரவிந்தர், இந்திய குரு, மெய்யியலாளர் (இ. 1950)
- 1883-வ.சு.செங்கல்வராய பிள்ளை, தமிழறிஞர் (இ. 1971)
- 1892-தி.வை.சதாசிவ பண்டாரத்தார், தமிழ் வரலாற்றாளர் (இ. 1960)
- 1915-மியரி ஜேம்சு துரைராஜா தம்பிமுத்து, இலங்கைத் தமிழ் ஆங்கிலக் கவிஞர், இதழாசிரியர், திறனாய்வாளர் (இ. 1983)
- 1921-கா. கைலாசநாதக் குருக்கள், ஈழத்து இந்து ஆய்வாளர், பேராசிரியர் (இ. 2000)
- 1922-குஷபாவு தாக்கரே, இந்திய அரசியல்வாதி (இ. 2003)
- 1935-ராஜசுலோசனா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை (இ. 2013)
- 1964-அர்ஜுன், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்
- 1992-அதிபன் பாசுகரன், இந்திய சதுரங்க ஆட்ட வீரர்

இறப்புகள்

- 2013-செல்லையா பொன்னுத்துரை, இலங்கையின் துடுப்பாட்ட நடுவர் (பி. 1935)

சிறப்பு நாள்

- இந்தியாவின் விடுதலை நாள், 1947
- விடுதலை நாள் (கொங்கோ குடியரசு, 1960)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | மருதனார் மடம் | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 70 | 40 | 140 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 95 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 280 | 300 | 230 | 300 | 250 | 300 | 300 |
| தக்காளி | 160 | 200 | 120 | 140 | 150 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 | 80 | 60 | 80 | 80 |
| கோவா | 120 | 120 | 70 | 120 | 140 | 100 | 120 |
| கரட் | 140 | 200 | 140 | 140 | 160 | 200 | 200 |
| பூசணி | 40 | 120 | 40 | 60 | 90 | 60 | 60 |
| புடோல் | 60 | 100 | 50 | 80 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 70 | 100 | 100 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 120 | 140 | 150 | 150 | 140 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 150 | 120 | 140 | 120 | 130 | 140 |
| பாகற்காய் | 180 | 300 | 150 | 140 | 50 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 40 | 100 | 70 | 80 | 100 | 60 | 100 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | 50 | 120 | 120 | 120 | 140 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 | 80 | 100 | 120 | 80 |
| லீக்ஸ் | 100 | 120 | 70 | 100 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 40 | 120 | 40 | 60 | 100 | 40 | 60 |
| கறிமிளகாய் | 120 | 200 | 100 | 120 | 150 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 40 | 20 | 20 | 40 | 40 | 40 | 60 |
| போஞ்சி | 180 | 200 | 140 | 160 | 160 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 30 | 70 | 60 | 120 | 80 | 80 |
| கீரை-1பிடி | 40 | 20 | 30 | 30 | 25 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 | 50 | 70 | 80 | 40 | 80 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 70 | 65 | 60 | 70 | 50-70 |
| இராசவள்ளி | 200 | 200 | 200 | 200 | — | 300 | — |
| வெங்காயப்பூ | 200 | 200 | 150 | 160 | — | 150 | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 30 | 60 | 60 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 25 | 25 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 30 | 15 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 40 | — | 50 | — | 100 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது திறமை ஒன்று என்றாலும், அதை ஒளித்து வைப்பது உன்னையே ஒழிப்பதற்குச் சமமாகும்.
- மில்டன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மாற்றுத்திட்டங்கள் பற்றி தமிழ்ப் புத்திஜீவிகள் சிந்திக்க வேண்டும்

ஊருக்குப் பல வழி என்றொரு பழமொழி நம் தமிழ்மொழியில் உண்டு. இந்தப் பழமொழி ஆழ்ந்த கருத்தை உடையது.

ஊருக்கு ஒரு வழி என்றில்லாமல் பல வழிகள் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகவும் இப்பழமொழிக்குப் பொருள் கொடுக்க முடியும். ஊருக்கு மட்டுமல்ல எதற்கும் வழி என்பது அவசியமானது.

பொதுவில் மாற்றுவழி பற்றி நாம் அதிகம் சிந்திப்பதில்லை. இதுவும் எங்கள் இனத்தின் பின்னடைவுக்குக் காரணம் எனலாம்.

இவ்வாறு மாற்றுவழி பற்றிச் சிந்திப்பதற்கு நம் தமிழ்ப் புத்திஜீவிகள் தயாராக இல்லாததும் மிகப்பெரும் பலவீனம் என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

இப்போது தமிழ் அரசியல் தலைமையினதும் தமிழ் மக்களினதும் எதிர்பார்ப்பு புதிய அரசியலமைப்பு வெளிவரும் என்பதுதான்.

ஆனால் புதிய அரசியலமைப்பு வெளிவரப் போவதில்லை. மாறாக புதிய அரசியலமைப்புத் தொடர்பாக அரசியல் கட்சிகள் முன்வைக்கின்ற கருத்துக்களை ஒரு புத்தகமாக்கி அதை வெளிவிடுகின்ற ஏற்பாடுகள்தான் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்தக் கருத்துக்கள் அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கு எதிராகவும் ஆதரவாகவும் இடைப்பட்டதாகவும் அமையலாம்.

இவ்வாறான கருத்துக்கள் ஒரு கல்வெட்டு புத்தகமாக அமையுமேயன்றி அதனைத் தொகுத்தும் வகுத்தும் அரசியலமைப்புச் சீர்திருத்தமாக்குவதென்பது இந்த ஜென்மத்தில் நடக்கக் கூடிய காரியமல்ல.

ஆக, அரசியலமைப்புச் சீர்திருத்தம் என்பது ஒருபோதும் அமுலுக்கு வரப்போவதில்லை.

மாறாக தமிழ் மக்களின் விருப்புகளை; அபிலாசைகளை; உணர்வுகளை காலக் கடத்தல் மூலம் மழுங்கடிப்பதற்கான ஏற்பாடுகளே நடக்கின்றன.

இந்த உண்மைகள் தமிழ் அரசியல் தலைமைக்கு நன்கு தெரியும். இருந்தும் அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்காக இன்னமும் காத்திருப்பவர்களாகவே நாம் இருக்கிறோம் எனில், எங்களின் எதிர்காலம் மிக மோசமானதாக அமையுமேயன்றி வேறில்லை எனலாம்.

எனவே அரசியலமைப்புச் சீர்திருத்தம் வெளிவராமல்; அமுலாகாமல் போகும் போது அதற்கான அடுத்த மாற்றுவழி என்பது பற்றி தமிழ்ப் புத்திஜீவிகள் கூடி ஆராய வேண்டும்.

அரசியலமைப்புச் சீர்திருத்தம் வெளிவரா விட்டால் நாம் என்ன செய்ய முடியும் என்று நினைத்து கவலைப்படுவதால் எமக்கு எந்தப் பிரயோசனமும் ஏற்படமாட்டாது.

எனவே மாற்றுவழி பற்றி ஆராய்வோமாக இருந்தால் அதுவொன்றுதான் எங்களுக்கான வெற்றியாக இருக்கும்.

ஆனால் தமிழ்ப் புத்திஜீவிகளைப் பொறுத்தவரை இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது இரா.சம்பந்தனும் அவரோடு நெருக்கமாக நிற்பவர்களோடும் தொடர்புபட்டது என்றும் அதற்கும் நமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது போலவும் நடந்து கொள்கின்றனர்.

இது மிகப்பெரும் ஆபத்தைத் தரக்கூடியது என்பதால், அரசியலமைப்புச் சீர்திருத்தம் வெளிவராதவிடத்து அடுத்த மாற்றுவழி பற்றி சிந்திப்பதே புத்திசாலித்தனமாகும்.

# நல்லை ஆதீனத்தில் இன்று 51வது பீடாரோஹண விழா

சைவமும் தமிழும் தழைத்தோங்க முற்று முழுதாய் பாடுபட்டு வரும் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று 51 ஆவது பீடாரோஹண விழா வெகு விமரிசையாக நடைபெறுகின்றது. ஆதீன குரு மூர்த்த ஆலயத்தில் எம் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று கொலுபூசை, பட்டணப் பிரவேசம், அன்னதானம் ஆகிய நிகழ்வுகள் காலை 9 மணி முதல் நடைபெறும்.

இந்த நல்லை ஆதீனத்தை மணி ஐயர் என்று எல்லோராலும் அழைக்கப்படுகின்ற முதலாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் 1966 இல் முதன்முதலாக ஆரம்பித்து வைத்தார். இந்த ஆதீனமானது சமயபாட வகுப்பு, சங்கீத வகுப்பு, பாலர் வகுப்பு, மிருதங்க வகுப்பு என்று இன்னோரன்ன வகுப்புக்கள் மூலம் அளப்பரிய சேவை செய்து வருகின்றது.

அதுமாத்திரமன்றி புராண படனம், பண்ணிசை, வீதி பஜனை முதலானவற்றையும் செய்து வருவதோடு சைவமும் தமிழும் வளர்ந்து பரவுவதற்குமக்களுக்குஎன்ன சேவை தேவையோ அதை உணர்த்தி அவர்கள் மூலம் நற்பணிகளை ஆற்றி வருகின்றது. தம்முடைய விடா முயற்சியினாலும் சைவத்தின் மேற்கொண்ட பற்றினாலும் ஆர்வத்தினாலும் நல்ல முறையில் இந்த ஆதீனத்தை நெறிப்படுத்திய அவர் தம்முடைய கதாபிரசங்கத்தின் மூலம் அடியவர்களுக்குப் புராண இதிகாசக் கதைகளைக் கூறி சைவப்பேருண்மைகளைப் பரப்பியும் வந்தார்.

தோற்றத்தில் நாவலர் பெருமானை ஒத்த இவர் இலங்கையில் மட்டுமன்றி இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன் முதலாய நாடுகளுக்கும் சென்று கதாபிரசங்கம் செய்து தமது தொண்டையினாலேயே அரிய பெரிய சேவை செய்தமை ஈண்டு குறிப்பிடத்தக்கது.

இப்போது ஆதீன குரு முதல்வராக விளங்குகின்ற இரண்டாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளும் தம்முடைய குருநாதர் விட்டுச் சென்ற பணியை தம் சிரமேற் கொண்டு ஆலய கும்பாபிஷேகங்கள், திருவிழாக்கள், சமய விழாக்கள் போன்றவற்றில் அருளாசியுரை வழங்கி வருகின்றார்.

நல்லூர் உற்சவ காலங்களில் சிறப்பு தெய்வீக நிகழ்ச்சிகள் மூலம் சைவம் வளர அரும்பாடுபட்டுவரும் நல்லை ஆதீனத்திற்கு சைவமக்கள் ஒவ்வொருவரும் தம்மாலியன்ற உதவி ஒத்தாசைகளை வழங்கி அதன் சேவைக்கு உறுதுணை புரிய வேண்டியது தலையாய கடமையாகும். மேலும் அடியார்கள் அனைவரும் இன்று இங்கு நடைபெறுகின்ற பிரதான நிகழ்வுகளில் பங்கேற்று ஆதீனத்தின் நல்லாசிகளைப் பெற்று உலகில் சைவசமயத்தின் பெருமையை நிலைநாட்டி நல்வாழ்வு வாழ்வதற்கு எல்லாம் வல்ல நல்லைக்கந்தப் பெருமானின் திருவடிகளை வணங்கி வாழ்த்தி சிந்தித்து வந்தித்துச் சேவித்து நிற்பார்களாக.

தெய்வத் தமிழ்ச்சுடர்
இராசையா ஸ்ரீதரன்

## கந்தபுராண எழுச்சி விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயஉற்சவகாலத்தை முன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள் அரங்கேறும் கந்தபுராண எழுச்சி விழாவின் 19 ஆம் நாள் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெறும்.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ப.ஜெயக்குமாரக் குருக்கள் ஆகியோர் முன்னிலையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் கந்தபுராணம் தொடர்பான ஆன்மீகச் சொற்பொழிவை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் சி.ரமணராஜா நிகழ்த்துவதுடன் திருமதி புஸ்பமலர் யோகநாதனின் மாண வர்கள் வழங்கும் இசை நிகழ்வு என்பன இடம்பெறும். (இ-3)

## கலைநிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறி விழாவில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறி விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணி முமல் மாலை 6 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்ளப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை பிரதி அதிபர் செல்வி சுரேகா தங்கராஜா கலந்து கொள்வார். இதில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அருள் முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடனம், பேச்சு, நாகலிங்கேஸ்வரர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நாடகம் என்பனவும் கட்டுடை அரசடி விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பண்ணிசை, நடனம், பேச்சு சுதுவையின் சுக்கிரன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பேச்சு, சேக்கிழார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடனம் என்பன இடம்பெறும். (இ-3)

## ஆன்மீகச் சொற்பொழிவு

நல்லைக் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ். கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் ஆன்மீக நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணி முதல் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாகவுள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் இடம்பெறும்.

மானிப்பாய் மருதடி விநாயகா ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ப.ஜெயகுமாரக் குருக்கள் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் சைவப் புலவர் சித்தாந்த பண்டிதர் சி.கா. கமலநாதன் சொற்பொழிவினையும் கந்தபுராண தொடர் சொற்பொழிவினை பணடிதர் சைவப்புலவர் பொன். சுகந்தன் ஆகியோர் நிகழ்த்துவர். (இ-3)

## பதுக்கிவைத்த மணல் பறிமுதல்

(கரணவாய்)

சட்டவிரோதமான முறையில் அகழப்பட்டு துன்னாலை பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருமளவான மணல் கும்பிகளை தாம் மீட்டுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வல்லிபுரம் முதல் குடத்தனை வரையான பகுதியில் அகழப்பட்ட மணல் வடமராட்சிப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு தூரத்திற்கு ஏற்பட 8000 முதல் 12000 வரையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை சட்ட விரோதமான மணலை ஏற்றிவரும் போது விற்பனை செய்ய முடியாத சந்தர்ப்பத்தில் தமக்காக தெரிவு செய்யப்பட்ட இடங்களை துன்னாலை, வல்லிபுரம் பகுதிகளில் மறைவான இடங்களில் பதுக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவிற்கு தகவல்கள் கிடைக்கப் பெற்றன.

இப் புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் துன்னாலைப் பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பல மணல் கும்பிகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவ் மீட்புச் சம்பவம் மூன்று நாட்களாக நடைபெறுகின்றது. கனரக வாகனத்தின் உதவியுடன் மீட்கப்படும் மணல் கும்பிகள் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. (இ-60)

## யூபிலித் திருவிழா திருப்பலி

நாவாந்துறை தூயபரலோக அன்னை ஆலயத்தின் 75 ஆவது ஆண்டு யூபிலித் திருவிழா கடந்த 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கி ழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 8 நாட்கள் நடைபெற்று வரு கின்றன. இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலி ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் தலைமையில் இடம்பெறும்.

மாலை 6 மணிக்கு தூய பரலோக அன்னையின் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும். (இ-7)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ அடிமைகளின் குணமாகிய பொறாமைதான் நமது நாட்டின் அழிவுக்கே காரணமாக அமைந்திருக்கிறது. ஆண்டவனே தன் முழு வலிமையைச் செலுத்தியும் இந்தக் காரணத்தால் நமக்கு உதவி ஒன்றுமே செய்ய முடியாமல் போயிற்று.

❖ தன் கடமைகளை எல்லாம் செய்து முடித்துவிட்டு இறந்து போன ஒருவனாக இப்போது என்னை நீ நினைத்துக்கொள். அந்த வேலைகளின் சுமை முழுவதும் உன் தோள்களின் மீதே சுமத்தப்பட்டிருப்பதாக நினைத்துக்கொள்.

❖ இதை நீ கவனத்தில் வைத்துக்கொள். ஆன்மீக இலட்சியத்தைப் புறக்கணித்து விட்டு மேலைநாட்டு லௌகீக நாகரிகத்தின் பின்னால் நீ செல்வாயானால் அதன் விளைவாக மூன்றே தலைமுறைகளில் உனது இனம் அழிந்து போய்விடும். ஏனென்றால் நமது நாட்டின் முதுகெலும்பு முறிந்து எந்த அடிப்படையின் மீது நமது நாட்டின் கட்டடம் எழுப்பப்பட்டுள்ளதோ அந்த அடித்தளம் ஆட்டம் கண்டுவிடும். நாலா பக்கங்களிலும் அழிவைத்தான் நீ காண்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## இராசேந்திரம் இன்பராஜ் (தாஸ்)

### மருத்துவப் பிரதிநிதி (Medical Representative)

புலோப்பளை, பளையைப் பிறப்பிடமாகவும் நவாலி தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் இன்பராஜ் (தாஸ்) நேற்று (14.08.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மேனஜாவின் அன்புக் கணவரும் வர்சித்தின் அன்புத் தந்தையும் இராசேந்திரம் - சந்திரமலர் தம்பதியரின் அன்பு மகனும் விநாயகமூர்த்தி - இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயராசாவின் அன்புப் பெறாமகனும் லிதுனா, அகிலன், விமல், அனிதன், வினோத் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கோபிநாத், சங்கீதா ஆகியோரின் மைத்துனரும் சந்திரவிமலா, சந்திரகுமாரி (பளை), விஜயகுமாரி (வசாவிளான்), இலங்கேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் சுசிலகுமார், சுதாகரன் (தேவன்), சந்திரசிறி ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற இராமச்சந்திரன் மற்றும் சிவக்கொழுந்து தம்பதியரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2017) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நவாலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துக்கட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நவாலி தெற்கு,**
**மானிப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 911 6084**

(138)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்வெட்டித்துறை...

வித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் வல்வெட்டி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மாசிலாமணி இந்திரதாசன் (வயது-50) என்ற ஆசிரியராவார்.

மேற்படி ஆசிரியரும் அவரது மனநலம் பாதிக்கப்பட்ட மனைவியும் வீட்டில் வசித்து வந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசிய நிலையில் அயலவர்கள் அங்கு சென்று பார்த்த போது அவர் இறந்து சடலம் அழுகிய நிலையில் காணப்பட்டது.

இது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு சென்று சடலத்தை பார்வையிட்ட வல்வெட்டித்துறை மரண விசாரணை அதிகாரி பா.சுகிந்திரசிங்கம் சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்து பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (மு-60)

## நவாலி இளைஞன்...

துள்ளார்.

இதில் நவாலி தெற்கு மானிப்பாயை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான இராசேந்திரம் இன்பராஜ் (வயது 30) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் மதியம் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார். சடலமானது பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடந்த து நாட்களாக காய்ச்சல் இருந்த நிலையில் இவர் வைத்தியசாலை செல்லாமல் சிகிச்சை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.(மு-30)

## மகிந்த குடும்பத்தி...

ஐக்கிய தேசிய கட்சியின் முன்னணி உறுப்பினர்கள் சிலர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான விசாரணைகளை மிகவும் மந்த கதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தொடர்ச்சியாக தெரிவித்து வருகின்றனர்.

அத்துடன் நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டரை வருடங்கள் கடந்துள்ள போதிலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மீதான குற்றச்சாட்டு குறித்த விசாரணைகள் இன்னும் நிறைவு பெறாமல் ள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த அமைச்சரவை கூட்டத்தில் இது தொடர்பில் பேசப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள தொடர்பிலான விசாரணைகளை துரிதப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மனைவி ஷிராந்தி ராஜபக்ஷ மற்றும் களது புதல்வர்களான யோசித ராஜபக்ஷ மற்றும் ரோஹித்த ராஜபக்ஷ ஆகியோருக்கும் எதிரான விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி இன்று மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவும் இளைய மகனான ரோஹித்த ராஜபக்ஷவிடம் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவும் விசாரணைகளை நடத்தவுள்ளதாகவும் நாளை இரண்டாவது மகனான யோசித ராஜபக்ஷவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை நடத்தவுள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. (மு-11)

(மற்றும் ஒரு செய்தி உள்ளே)

## தேர்தல் ஒத்தி...

கொழும்பு இலங்கை மன்ற கல்லூரியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர்,

தேர்தல்களை நடத்தும் பொறுப்பு தேர்தல் ணயத்திற்குரியது அல்ல. சட்டத்தை யற்றும் நாடாளுமன்றத்திற்குரியது. தேர்தல் மூலம் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே தேர்தல்களை ஒத்தி வைப்பதற்கான சட்டங்களை உருவாக்குவது துரதிர்ஷ்டம் என்று அவர் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டு நடைபெற வேண்டிய 200 இற்கும் மேற்பட்ட உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களும் தொடர்ந்து தள்ளிப் போடப்பட்டுள்ளன.

இதனை தனது உரையில் சுட்டிக்காட்டிய தேர்தல் ஆணைய தலைவர் மகிந்த தேசப்பிரிய, தேர்தல்கள் உரிய நேரத்திற்கு நடத்தப்படாமல் தள்ளிப்போடுவது ஜனநாயகத்திற்கு முரணானதாகவே கருத வேண்டியுள்ளது. தேர்தலை நடத்தக்கூடிய அதிகாரம் ஆணையத்திற்கு இருக்குமானால் உரிய நேரத்தில் தேர்தல்களை நடத்தியிருக்கும் என்றும் வலியுறுத்தினார்.

இலங்கையில் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் அரசியல் அமைப்பு 19ஆவது திருத்தம் மூலம் தேர்தல் ஆணையம் நியமிக்கப்பட்டது. தேர்தல் ஆணையம் செயல்படத் தொடங்கி இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் இதுவரை எந்தவொரு தேர்தலும் நடைபெறவில்லை.

உள்ளூராட்சி சபை தேர்தல் சட்டத்தில் திருத்தம் என்ற காரணத்தை முன்வைத்து பதவிக்காலம் முடிவடைந்துள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்கள் இரண்டு ஆண்டுகள் கடந்தும் தொடர்ந்து தள்ளிப் போடப்பட்டு வருகின்றன.

அரசியலமைப்பு சட்டத்தில் 20ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டு அடுத்த மாதம் பதவிக்காலம் முடிவடையவிருக்கும் கிழக்கு, வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளின் பதவிக் காலத்தை நீடிக்க அரசு உத்தேசித்துள்ளது.

இப்படியான சூழலிலே தேர்தல் ஆணையகத்தின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இந்த கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார்.

உத்தேச திருத்த சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் இறுதியாக 2014ல் தேர்தல் நடைபெற்ற ஊவா மாகாண சபையின் பதவிக்காலம் வரை அதாவது 2019 செப்ரெம்பர் வரை நீடிக்கும் வாய்ப்புண்டு.

அரசியலமைப்பு 20ஆவது திருத்தம் தொடர்பாக எழுந்துள்ள எதிர்ப்புகள் மற்றும் சர்ச்சைகள் குறித்து இன்று செவ்வாய்க் கிழமை அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டு தீர்மானமொன்று எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (மு-11)

## மொழிப் பிரச்சி...

விட்டேன். என்ன மருந்து என்பதையும் கண்டு பிடித்து விட்டேன். ஆகவே இன்று மொழி அமுலாக்கல் செய்யாமை நோயை தீர்க்க மருந்து கொடுக்க ஆரம்பித்துவிட்டேன்.

இதற்காக நேற்று மத்திய மொழி பெயர்ப்பாளர் பிரிவு ஒன்றை நாம் எனது அமைச்சில் அமைத்து உள்ளோம். இவர்கள் இந்த பணியை ஆரம்பித்துள்ளனர். இது வெறும் தொழில் அல்ல. ஒரு தேசிய சேவை ஆகும். மொழிக்கொள்கையை தீர்த்தால், அது தேசிய இனப்பிரச்சினையில் சரிபாதியை தீர்ப்பது ஆகும். மிகுதி பாதியை அதிகார பகிர்வு தீர்க்க வேண்டும்.

இந்த படிவங்கள் மும்மொழிகளில் இருப்பது ஒரு தேவை. பெயர் பலகைகள் மூன்று மொழிகளில் இருப்பது இன்னோர் தேவை. அதையும் செய்கிறோம். அடுத்த வருடம் சுமார 3,000 இருமொழி, மும்மொழி அலுவலகர்களை அத்தியாவசியமான அரச அலுவலகங்களில் நியமிக்க முயற்சி எடுத்து வருகிறேன். இவர்கள் இருமொழி அறிந்த, கணணி அறிவு கொண்ட அரச அலுவலகர்களாக பணி புரிவர். அப்போது இந்நாட்டு குடிமக்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எழுத்து மூலமான பதில்களை பெறும் உரிமையை நடைமுறையில் பெறுவர். இப்போது இந்த உரிமை அரசியலமைப்பில் மட்டுமே உள்ளது. அனைத்தையும் நான் படிப்படியாக செய்கிறேன் என்றார் அவர். (மு-11)

## வெள்ளத்தில்...

வரலாற்றில் என்றுமில்லாதவாறு கடும் மழை பெய்து வருவதால் மடு அன்னையின் திருவிழாவை வழக்கமான முறையில் கொண்டாட முடியாதவாறு தடைப்பட்டுள்ளது.

நாட்டின் நாலாபுறமும் இருந்து வந்த யாத்திரிகர் பல இன்னல்களுக்கு முகம்கொடுத்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மடு திருத்தலத்தை சுற்றியுள்ள பகுதிகளில் கடும் மழை பெய்து வருவதால் யாத்திரிகர்கள் தற்காலிகமாக அமைந்து தங்கியிருந்த கூடாரங்கள் அனைத்தும் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

நேற்று மாலை 6 மணிக்கு இடம்பெற இருந்த வழிபாடு நிறுத்தப்பட்டு பிரதான ஆலயத்தில் 4.30 மணிக்கு திருச்செபமாலையின் இரு காரணிக்கங்கள் செபிக்கப்பட்டு, மடு அன்னைக்கு யாத்திரிகர்களால் பிரியாவிடை செபம் சொல்லப்பட்டு மரியன்னையின் திருச்சொரூப ஆசீர்வாதத்துடன் வழிபாடுகள் நிறைவடைந்தது.

இதேவேளை, ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் தொடர்ந்தும் மடுத்திருத்தலத்தில் தங்கியிருப்பதற்கு காலநிலை ஏதுவாக அமையாத காரணத்தால் மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகரின் தலைமையில் கூடிய குருக்கள் குழு, தொடர்ந்து கடும் மழை பெய்வதற்கான சாத்தியக் கூறுகள் இருந்தால் திருவிழா திருப்பலி ஆலயத்திற்குள் இடம்பெறுமென தீர்மானித்தது.

இதையடுத்து திருவிழாவில் கலந்து கொள்ள வந்திருந்த ஏராளமான யாத்திரிகர்கள் தமது இருப்பிடங்களை நோக்கி திரும்புவதை அவதானிக்க முடிந்தது. (மு-11)

## தமிழர் காணி...

மட்டக்களப்பில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சிங்கள தமிழ் இன விழிப்புணர்வுக்கான அமைப்பு தொடர்பான ஊடகவியலாளர் மகாநாடு நேற்றுமுன்தினம் மங்களராமய விகாரையில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

வாழைச்சேனை மீராவோடை சக்தி வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தில் அத்துமீறி வீடுகள் அமைக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் உறுதியுடைய காணிகளை முஸ்லிம் அமைப்பு ஒன்று அத்துமீறி புகுந்து அந்த மக்களுக்கு அநீதிகளை இழைத்து வருகின்றது.

அப்பாவித் தமிழ் மக்களுடைய காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பிரதேச செயலாளர் வாழைச்சேனை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துளளாா.

முஸ்லிம் அமைப்புக்கள் பொத்துவிலில் இருந்து மூதூர் வரைக்குமான கரையோரப் பிரதேசம் ஒரே நகரம் என்ற அளவிற்கு உருவாகியுள்ளது.

அமைச்சர் ஹிஸ்புல்லா தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்களுக்கு கல்வி கற்பதற்கு என ஆசியாவிலே பெரிய பள்ளிவாசல் ஒன்றை கட்டுவதாக குறிப்பிடுகிறார்.

இதில் தமிழ், சிங்கள மாணவர்கள் முஸலிம் பள்ளியில் சென்று படிக்க வேண்டுமா? என அம்பிட்டிய சுமணரத்ன தேரர் கேள்வி எழுப்பியுள்ளார். (மு-11)

## பொலிஸ்மா...

நடைமுறை கொண்டு வரப்பட்டது.

பொலிஸ் திணைக்களத்தில் பணியாற்றும் ஏனைய மதங்களைப் பின்பற்றுவோர் இதன் காரணமாக பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அத்துடன் அத்தியாவசிய கடமைகளில் ஈடுபடுவோருக்கும் இச்சட்டம் காரணமாக பெரும் நெருக்கடி ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் பொலிஸ் திணைக்களத்தில் கடமையாற்றும் கிறிஸ்தவ பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் பொலிஸ் தலைமையக லிப்ட் பணியாளர் ஆகியோர் தியான வழிபாடுகளில் கலந்து கொள்ளவில்லை என்று பொலிஸ்மா அதிபரினால் நேரடியாகத் தாக்கப்பட்டுள்ளனர் என்றும் இதன் காரணமாக அவர்கள் இருவரும் மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்ள நேர்ந்துள்ள போதிலும் பொலிஸ்மா அதிபருக்கு எதிரான முறைப்பாடுகளை மேற்கொள்ளவில்லை.

இதற்கிடையே பொலிஸ் தலைமையகத்தில் வரவேற்பாளராக கடமையாற்றும் பெண் உத்தியோகத்தர் ஒருவர் தியான வழிபாடுகளில் கலந்து கொள்வதில்லை என்று ஆத்திரமடைந்துள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, குறித்த பெண் உத்தியோகத்தரை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த போவதாக மிரட்டியுள்ளார்.

பொலிஸ் திணைக்கள ஊழியர்களை பொலிஸ்மா அதிபர் நேரடியாக தாக்கும் காட்சிகள் மற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தரை அச்சுறுத்தும் காட்சிகள் அடங்கிய சி.சி.டிவி காணொளிகள் தற்போது இணையத்தளங்களில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (மு-11)

# நானாக பதவி விலக மாட்டேன் -டெனீஸ்வரன்

வட மாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சு பொறுப்பில் இருந்து தான் ஒரு போதும் சுய விருப்பத்துடன் பதவி விலகப் போவதில்லை என வட மாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ வரன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள தனது அமைச்சரின் உப அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) உயர் மட்ட கூட்டம் கடந்த 12ஆம் திகதி வவுனியா அலுவலகத்தில் இடம் பெற்றது. குறித்த கூட்டத்தில் கலந்து கொள்ள எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

குறித்த கூட்டத்திற்குச் சென்று அவர்கள் கேட்ட விளக்கங்களுக்கு எனது நிலைப்பாட்டினை தெளிவாக தெரிவித்தேன். எனினும் ஒரு சில தினங்களில் அமைச்சுப் பொறுப்பை விட்டுத் தருவது தொடர்பில் முடிவெடுத்து தெரிவிக்குமாறு தெரிவித்தனர் என்றார். (மு-11)

## வடக்குப் பிரச்சினை...

ஐக்கிய நாடுகளுக்கான வதிவிட இணைப்பாளர் ஊனா மெக்கோலேய் தலைமையிலான குழுவினருடனான சந்திப்பு, கைதடியில் அமைந்துள்ள வட மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்,

வட மாகாணத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நீர் உள்ளிட்ட இயற்கை வளங்களை பயன்படுத்துகின்றனர். தெற்கிலிருந்து பிரசித்தமாகவே மீனவர்களை அழைத்து வருவதுடன் அந்த மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடியிலும் ஈடுபடுகின்றனர். வடக்கு மீனவ சமுதாயத்தினர் அச்சப்படுவதற்கு இது பிரதான காரணங்களில் ஒன்றாக இருக்கிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சாதாரண நடைமுறைகளை மீறிய விதத்தில், காடுகள் அழிக்கப்பட்டு முஸ்லிம்களுக்காக வீதிகளும் வீடுகளும் அமைக்கப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (மு-11)

## கேப்பாப்புலவு...

யேற்றம், புனர்வாழ்வு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என தெரியவருகின்றது.

முன்னதாக ஜூலை 19ஆம் திகதி 189 ஏக்கர் காணி விடுவிக்கப்படுவதாகவும் அதற்காக 5 மில்லியன் ரூபாய் நிதியை இராணுவத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு ஏற்கெனவே அறிவித்திருந்தது.

இருப்பினும் குறித்த திகதியன்று காணி விடுவிப்பு நிகழ்வில் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளில் தமக்குச் சொந்தமான காணிகள் எதுவும் இல்லையெனக் கூறிய அம்மக்கள் போர்க்கொடி தூக்கியமையால் அந்நிகழ்வு கைவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த ஜூலை 26ஆம் திகதி சிறைச்சாலை மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சில் கலந்துரையாடலொன்றும் இடம்பெற்றிருந்தது.

இவ்வாறான நிலையிலே கேப்பாப்புலவு மக்கள் தொடர்ச்சியாக 166 நாட்கள் போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்ற நிலையிலேயே மேலும் 111 ஏக்கர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை கேப்பாப்புலவில் உள்ள 111 ஏக்கர் மற்றும் 70 ஏக்கர் இரண்டு ரூட் காணியை விடுவிக்குமாறு ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்புச்செயலாளர், அமைச்சர் உள்ளிட்டவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் நேற்று முன்தினம் மீண்டுமொரு அவசரக் கடிதம் அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(மு-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுபூர்வமான முதலீடு - வளமான எதிர்காலம்
யாழ் - முதலீட்டாளர் கருத்துக்களம்
Aug.26 (Saturday) @ 9.30am
@Tilko City Hotel
முன்பதிவு : Call & SMS to 0777822014
(C-9331)
CSE COLOMBO STOCK EXCHANGE

# செஞ்சோலை படுகொலை...

காய் ஆகிய கல்வி வலய பாடசாலைகளில் இருந்து தலைமைத்துவ பயிற்சிக்காக அழைத்து செல்லப்பட்ட 400 மாணவிகளில் 53 மாணவிகள் சில மணித்துளிகளில் மரணித்து போனமை ஈழமண்ணை சோகத்தில் மூழ்கடித்தது. இந்த பயிற்சி நெறி ஒகஸ்ட் 11,2006 இல் இருந்து 20 ஒகஸ்ட், 2006 வரை நடைபெறுவதாக இருந்தது. ஆனால் பயிற்சிநெறி தொடங்கிய மூன்றாவது நாளே மாணவிகள் இலக்கு வைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.

பேனா ஏந்திய கரங்கள் துண்டாடிப்போய் கிடந்தன. துள்ளிக்குதித்து ஓடிய கால்கள் தசை குவியலாக கிடந்தன. கனவுகளை சுமந்த நெஞ்சு குண்டு சிதறலால் கிழிக்கப்பட்டு குருதி கொட்டிக் கொண்டு கிடந்தது. அதிகாலை வேளை கிணற்றடியிலும் மலசல கூடத்திலும் சமையலறையிலும் தம்தம் கடமைகளில் இருந்த மாணவிகள் திட்டமிட்டு இலக்கு வைக்கப்பட்டு கொல்லப்பட்டனர்.

காலை வேளையில் வந்த கிபிர் விமானங்கள் ஆறு முறை குண்டுகளை கொட்டியது கொட்டப்பட்ட குண்டுகள் திட்டமிட்டபடி முதல் குண்டு பிரதான வாயிலில் போடப்பட்டது.

மாணவிகள் வாயிலின் ஊடாக ஓடமுடியாதபடி வகுக்கப்பட்ட திட்டத்தின் முதற்படி இது. அடுத்த ஐந்து குண்டுகளும் கண் இமைக்கும் நேரத்துள் நான்கு திசைகளுக்கும் போடப்பட்டு ஆறாவது குண்டு மீண்டும் வாயிலில் போடப்பட்டது. மாணவிகள் எந்த திசை ஊடாகவும் வெளியே ஓடமுடியாதபடி திட்டமிட்டு குண்டுமழை பொழியப்பட்டது.

உலக வரலாற்றில் நடந்த மறக்கமுடியாத பேரவலமாக தமிழன் வரலாற்றில் பதியப்பட்டுவிட்டது. பள்ளி குழந்தைகளின் பேரிழப்பு அன்று ஆட்சியில் இருந்தவர்கள் இந்த கொலை பற்றி வாய் மூடி மௌனிகளாகவே இருந்தனர். இன்றுவரை அந்த பாரிய படுகொலை பற்றி எந்தவித விசாரணைகளோ அல்லது பொறுப்புக்கூறல்களோ இடம் பெறவில்லை.

இந்த கோரம் நடைபெற்று நேற்றுடன் பதினொரு வருடங்கள் கடந்துள்ள நிலையில் இந்த படுகொலையின் நினைவு நிகழ்வுகள் நேற்றையதினம் தமிழர் தாயகம் எங்கும் நடைபெற்றுள்ளன. வன்னி குரோஸ் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பு மற்றும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இணைந்து நேற்று காலை வள்ளிபுனத்திலும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மாலை 4 மணியளவில் வள்ளிபுனத்திலும், மாகாண சபை உறுப்பினர் ரவிகரனின் ஏற்பாட்டில் அவரது அலுவலகத்தில் காலை 9 மணியும், யாழ்.பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் மதியம் 12 மணியளவிலும் பெற்றுள்ளன.

இந்த நினைவு நிகழ்வுகள் கடந்த எட்டு வருடங்களின் பின்னர் உணர்வு பூர்மாக படுகொலை நடைபெற்ற இடத்திற்கு அருகாமையில் நடைபெற்றுள்ளன. இந்த நிகழ்வுகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, யாழ்.பல்கலைக் கழகம், வன்னி குரோஸ் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பு ஆகியன முன்னெடுத்திருந்தன.

வன்னிப்பகுதியின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக் மேலும் கிழக்கிலும் இந்த நிகழ்வுகள் பரவலாக உணர்வெழுச்சியுடன் நடைபெற்றுள்ளன. (மு-4)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு
UK - 550/= (C-9275)
கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
CANADA - 400/= மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது)
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS
PASSPORT
வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.
VISA EXTENSION
FOR FOREIGN PASSPORT
(வீசா எக்ஸ்ரென்சன்)
(C-9275)
0768227499
VISA
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய
ஏவிளம்பி வருட மஹோற்சவ விஞ்ஞாபனம்- 2017

முருகன் துதி

திருச்சிற்றம்பலம்
மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள்கள் போற்றி
காஞ்சி மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி
அன்னான் சேவலும் மயிலும் போற்றி திருக்கை வேல் போற்றி போற்றி
திருச்சிற்றம்பலம்

மெய்யடியார்களே!

நிகழும் மங்களகரமான ஏவிளம்பி வருடம் ஆவணி மாதம் 6ஆம் நாள் 22.08.2017 செவ்வாய்க்கிழமை அதிகாலை 05.00 மணியளவில் கொடியேற்றத் திருவிழாவுடன் ஏவிளம்பி வருட மஹோற்சவம் ஆரம்பமாகும். அன்று மாலை இரண்டாம் திருவிழாவும் நடைபெறும்.

- காலை திருவிழா 8.00 மணிக்கும் மாலைத்திருவிழா இரவு 7.00 மணிக்கும் ஆரம்பமாகும்.
- 5ஆம் திருவிழா ஆவணி 09ஆம் நாள் (25.08.2017) வெள்ளிக்கிழமை விநாயகரும், வேலவரும் எழுந்தருளுவர். சதுர்த்தி காலைத்திருவிழா 8.00 மணிக்கு ஆரம்பமாகும்.
- 10 ஆம் திருவிழா பூங்காவனம் ஆவணி 14ஆம் நாள் புதன்கிழமை (30.08.2017) 10.00 மணிக்கு.
- 11ஆம் திருவிழா கைலாசவாகனம் ஆவணி 15ஆம் நாள் வியாழக்கிழமை (31.08.2017) 8.00 மணிக்கு.
- சப்பறத்திருவிழா ஆவணி 19ஆம் நாள் திங்கட்கிழமை (04.09.2017) மாலை 7.00 மணிக்கு.
- தேர்த்திருவிழா ஆவணி 20ஆம் நாள் செவ்வாய்க்கிழமை (05.09.2017) காலை 9.00 மணிக்கு.
- தீர்த்தத்திருவிழா ஆவணி 21ஆம் நாள் புதன்கிழமை (06.09.2017) காலை 8.00 மணியளவில். அன்று மாலை 6.00 மணிக்கு மௌனத்திருவிழா நடைபெறும்.

மு.கு : திருவிழா, அபிஷேகம், அர்ச்சனை, காவடி, பாற்செம்பு, சண்முக அர்ச்சனை, அன்னதானம், திருமணம், பால்பருக்குதல் மற்றும் ஆலய நேர்த்திகளுக்குத் தொடர்புகொள்ளவும்.

(C-9333)

உற்சவகால பிரதமகுரு சிவஸ்ரீ அரியரத்தின ஐயர்
லோகேஸ்வர ஐயர்
தொ.பே : 077 2850 530 / 077 618 4710
B.O.C Point pedro Saving A/C No : 7348859
H.N.B Nelliady Saving A/C No : 118020023176

உற்சவகால உரிமையாளர்கள் :
சிவஸ்ரீ சிவானந்த ஐயர் செல்வமணி ஐயர்
செல்வமணி ஐயர் ஜூகேஸிதா, செல்வமணி ஐயர் அபிஷேசன்
வள்ளி தெய்வானை மணிமண்டபம் செல்வசந்நிதி தொண்டைமானாறு
B.O.C Point pedro Saving A/C No : 7348859
H.N.B Nelliady Saving A/C No : 118020023176

# முச்சக்கரவண்டி...



துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் குறித்த விபத்து இடம்பெற்றது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற புகையிரதம் வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் பயணித்த போது அப் பகுதியில் இருந்த பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையை கடந்து செல்ல முச்சக்கர வண்டி புகையிரதத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்து இடம்பெற்ற இடத்தில் இருந்து முச்சக்கர வண்டி 500 மீற்றர் தூரத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டது. இவ்விபத்தில் முச்சக்கர வண்டி சாரதியான ஈச்சங்குளம் பகுதியைச் சேர்ந்த எஸ்.கிருபா (வயது 28) என்பவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

இதேவேளை, குறித்த பகுதியில் பாதுகாப்பான புகையிரதக் கடவை முன்னர் இருந்ததுடன், புகையிரத சமிக்ஞை பொருத்தப்பட்ட பின்னர் அது அகற்றப்பட்டிருந்தமையும், அப்பகுதி மக்கள் பாதுகாப்பான புகையிரத கடவையாக அதனை மாற்றுமாறு புகையிரத திணைக்களத்திடம் கோரிக்கை விட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (மு-250.112.15

# மொழிப் பிரச்சினையைத் தீர்..

களிலும் மூன்று மொழிகளும் இடம்பெற வேண்டும். ஆனால், இதுபற்றி தொடர்ச்சியான அறிவுறுத்தல்கள் வழங்கியும் மும்மொழிகளிலும் அனைத்து அரசாங்க அலுவலக படிவங்கள் அமைவதில்லை. குறிப்பாக தமிழ் மொழிக்கு உரிய இடம் வழங்கப்படுவது இல்லை. இதை இனி அனுமதிக்க முடியாது. தமிழ் மொழி இப்படி கைவிடப்பட முடியாது. மும்மொழி மொழிச்சட்டம் மீறப்படவும் முடியாது. எந்த ஒரு அதிகாரியும் மொழிச்சட்டம் தனக்கு தெரியாது எனக்கூறவும் முடியாது.

இந்நோக்கில், இன்று இலங்கை முழுக்க உள்ள 882 அரச அலுவலகங்களிலிருந்து மூன்று மொழிகளிலும் இல்லாத முறையற்ற படிவங்களை நாம்பெற்று, அவற்றை மூன்று மொழி பெயர்க்கும் பணியை ஆரம்பிக்கிறோம். இதற்குள், 429 பிரதேச செயலக மற்றும் அதனுடன் இணைந்த அரச காரியாலயங்களும், 256 மாகாண மற்றும் பிரதேச சபை அலுவலகங்களும், 197 ஏனைய முக்கிய அலுவலகங்களும் இருக்கின்றன.

மொழிபெயர்த்த பிறகு பு... மும்மொழி படிவங்கள் எ... அமைச்சினால் அச்சடிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அத்துடன் அந்த படிவங்களின் மென்பொருள் பதிவு செய்யப்பட்ட இறுவெட்டும் அந்த அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அதை பயன்படுத்தி மேலதிக மும்மொழி படிவங்களை சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் அச்சடித்துக்கொள்ளலாம்.

இதன்மூலம் தமிழ் பேசும் மக்கள் இந்நாட்டில் சிங்கள மொழியுடன், தமிழ் மொழியும் ஒரு ஆட்சி மொழி, அ... கில மொழி இணைப்பு எ... உரிமையை அனுபவிப்பதில் ஒரு படி முன்னேறுவர் என... தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமை... கூடத்தில் நடைபெற்ற பொ... மக்கள் பாவனைக்குள்... சாங்க படிவங்கள் மும்மொ...யில் மொழிபெயர்க்கும் பணியை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது,

நான் பதவி ஏற்கும் போது, இந்த நாட்டில் அரசாங்க அதிகாரிகளுக்கு கூட இந்நாட்டின் மொழிச்சட்டம் பற்றிய தெளிவு இருக்கவில்லை என்பதை கண்டு பிடித்தேன். இப்போது நான் மருத்துவர் ஆகியுள்ளேன். அதாவது, மொழிமருத்துவர் ஆகிவிட்டேன். மொழி அமுலாக்கல் செய்யாமை ஒரு தே... நோய் ஆகும். எ... நோய் இருக்கிறது எ... கண்டு பிடித்து 23...

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு
1 Kg கட்டணம்
UK - 550 /=
France - 700 /=
திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd
216, K.K.S Road, Jaffna.
0777554528
(137)

விற்பனைக்கு / குத்தகைக்கு
கிருஷ்ணா டிஜிட்டல் பிறிண்டர் பலாலி வீதி, கோண்டாவில் வடக்கு டிப்போக்கு அருகாமையில் உள்ள வியாபார ஸ்தாபனம் விற்பனை அடிப்படையிலோ அல்லது குத்தகை அடிப்படையிலோ அல்லது இயந்திரங்களைத் தனியாகவோ வாங்க விரும்புபவர்கள் யாராக இருந்தாலும் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
(128)
தொடர்புகளுக்கு : 0777108185, 0778643272
whatsapp : 00447533400169




இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] இலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org